நாமதீப நிகண்டு

அகராதியும் முலமும்

பதிப்பாசிரியர்

வ. ஜெயதேவன்

தொகுப்பாசிரியர்

வை. சிவநேசன்

சென்னைப் பல்கலைக்கழகம்

2007

150 ஆம் ஆண்டு சிறப்பு வெளியீடு

நாமதீப நிகண்டு

அகராதியும் மூலமும்

பதிப்பாசிரியர்

வ. ஜெயதேவன்

தகைசால் பேராசிரியர் – தமிழ் இலக்கியத்துறை
முதன்மை ஆய்வாளர் & தலைமைப் பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதித் திருத்தப் பணித்திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

தொகுப்பாசிரியர்

வை. சிவநேசன்

தொகுப்பாளர்
தமிழ்ப் பேரகராதித் திருத்தப் பணித்திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

சென்னைப் பல்கலைக்கழகம்

2007

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்ட வெளியீடு: 6

நாமதீப நிகண்டு
வ. ஜெயதேவன் (பதிப்பாசிரியர்)

150ஆம் ஆண்டு வெளியீடு

© சென்னைப் பல்கலைக்கழகம்

முதல் பதிப்பு அக்டோபர் 2007

விலை ரூ. 185/-

கணினி வடிவமைப்பு: திரு இல. கணேசன்

வடிவமைத்து அச்சிட்டோர்: ஸ்ரீ ராகவேந்திரா பிரஸ்
✆ 24614545, 24952913

வெளியிடுவோர்: பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

சென்னைப் பல்கலைக்கழகம்

சேப்பாக்கம் - சென்னை - 600 005

பேராசிரியர் **சு. இராமச்சந்திரன்**
M.Sc., Ph.D., Ph.D. (Miami)
துணைவேந்தர்

அணிந்துரை

புத்தகங்கள் நாகரிகத்தைச் சுமந்து வருவன; அவை இன்றேல், வரலாறு ஓசையற்றுப் போகும்; இலக்கியம் ஊமையாகி விடும்; அறிவியல் ஊனப்பட்டு விடும்; சிந்தனையும் எதிர்காலக் கணிப்பும் இயக்கமற்று விடும் எனப் புத்தகம் பற்றிச் சரியாகக் கூறப்பட்டுள்ளது. நம் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரிய அன்னை நிறுவனமான சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டை அடையாளப்படுத்த... நினைவு நூல்கள் வெளியிடுவதை விடவும் சிறந்த நிலையான வேறுபணி என்ன இருக்கமுடியும்?

சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் அதன் இணைப்பு நிறுவனங்களின் ஆசிரியப் பெருமக்கள் படைத்த இந்த நூல் தொகுதிகளுக்கு முகவுரை வரைவது அருமையும் பெருமையும் சான்ற சிறப்பு. இந்நூல்கள் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு அர்ப்பணிப்புக்கும் நிலையான நினைவுப் பொருள்களாக அமையும் என்பதைக் கருத்திற்கொண்டு, இந்நூல்கள் அவற்றின் புத்தாக்க அணுகுமுறை, ஆய்வுத்தரம், நடைநலம் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு வெளியிடப்பெறுகின்றன.

நமது பெருநிறுவனத்தின் முன்னேற்றப்பாதையில் ஓர் இன்றியமையாத மைல் கல்லாக மட்டுமன்றி நமது நாட்டின் கல்விப் பாங்கிற்கு ஓர் உண்மையான, பொருண்மை மிக்க பங்களிப்பை இந்நூல்கள் நல்கும் என்று நம்புகிறேன்.

கல்விச் சமூகத்தினர், கூட்டுறவாளர்கள், பங்காளர்கள் அனைவருக்கும், அவர்கள் நல்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழும் அக்டோபர் 9, 2007இல் வெளியிடத்தக்க வகையில் இந்நினைவு நூல்களை உருவாக்கிய ஏனைய அனைவரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கிய செப்டம்பர் 5, 1857 முதல் இன்றுவரை எத்தனையோ மாற்றங்களும் ஏற்றங்களும் பெற்றுப் பொலிவுடன் ஒளிர்கிறது. மேலும் பல சிறப்புகள் வரவுள்ளன என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்க இதயம் இறும்பூது எய்துகிறது. அன்பார்ந்த வணக்கத்துடனும் மனமார்ந்த வாழ்த்துக்களுடனும்

சு. இராமச்சந்திரன்
அக்டோபர் 2007

பதிப்புரை

சென்னைப் பல்கலைக்கழகம் 1924 — 39 காலப்பகுதியில் தமிழ்ப் பேரகராதியினை வெளியிட்டது. உலகளாவிய வரவேற்பைப் பெற்ற அந்தப் பேரகராதி பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதி உதவியோடு இப்போது சீர்செய்யப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் வருகிறது. இத்திட்டம் முனைப்பாகச் செயற்பட்டுவரும் அதேவேளையில் அதன் துணை விளைவுகளாகப் பல்வேறு சிறப்பகராதிகளை வெளியிடவும் முடிவு செய்யப்பட்டது. இம்முடிவுப்படி இதுகாறும் ஐந்து அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அவையாவன: (1) தொல்காப்பிய அகராதி, (2) சட்டச்சொல் அகராதி (தமிழ் - ஆங்கிலம்), (3) அணிகலன்கள் அகராதி (தமிழ் - தமிழ் - ஆங்கிலம்), (4) சித்திரக்கவிக் களஞ்சியம், (5) உரிச்சொல் நிகண்டு: அகராதியும் மூலமும். இந்த வரிசையில் ஆறாவது நூலாக இப்போது **நாமதீப நிகண்டு: அகராதியும் மூலமும்** வெளிவருகிறது.

தமிழ்ப் பேரகராதித் திட்டத்திற்குப் பயன்படும் வகையிலும் அதே சமயத்தில் இக்காலத்தினர் எளிதாகப் பயன்கொள்ளும் வகையிலும் நிகண்டுகளை அகராதி முறையில் அமைத்து அவற்றின் மூலத்தையும் இணைத்து வெளியிடும் முயற்சியின் விளைவாக இந்நூல் மலர்ந்துள்ளது. இது திரு வை. சிவநேசன் அவர்களது கடும் உழைப்பால் உருவாகியுள்ளது. அவருக்கு எனது அன்பான வாழ்த்தும் பாராட்டும் உரியன. இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கு எனது இதயங் கனிந்த நன்றி உரியது. இத்தகைய நன்முயற்சிகளைத் தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் மாணவர்களும் பொதுமக்களும் வரவேற்றுப் பயன்கொள்வர் எனப் பெரிதும் நம்புகிறேன். இந்நூலின் நிறைகுறைகள் குறித்த கருத்துகளை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

அன்புள்ள
வ. ஜெயதேவன்

பொருளடக்கம்

1. முன்னுரை 9
2. நாமதீப நிகண்டு: அகராதி 15
3. நாமதீப நிகண்டு: மூலம் 193

பாயிரம் 193

I. உயர்திணைப் படலம்

1. தெய்வ வர்க்கம் 194
2. மானிட வர்க்கம் 203

II. அஃறிணை உயிர்ப்பொருள் படலம்

1. நாற்கால் உயிர்ப்பொருள் வர்க்கம் 210
2. பறவை உயிர்ப்பொருள் வர்க்கம் 213
3. ஊருயிர்ப்பொருள் வர்க்கம் 215
4. நீர்வாழ் உயிர்ப்பொருள் வர்க்கம் 215
5. தாபர உயிர்ப்பொருள் வர்க்கம் 216

III. அஃறிணை உயிரில்பொருள் படலம்

1. இயற்கைப்பொருள் வர்க்கம் 225
2. செயற்கைப்பொருள் வர்க்கம் 228
3. இடவர்க்கம் 233
4. கால வர்க்கம் 239
5. சினை வர்க்கம் 241

IV. குணநாமப் படலம்

1. உயிர்ப்பொருள்: மனக்குண வர்க்கம் 244
2. உயிர்ப்பொருள்: வாக்குக்குண வர்க்கம் 248
3. உயிர்ப்பொருள்: செயற்குண வர்க்கம் 251
4. உயிரில்பொருள் குண வர்க்கம் 258

முன்னுரை

திவாகரர் இயற்றிய திவாகரம் முதல் கவிராச பண்டித இராம சுப்பிரமணிய நாவலர் இயற்றிய தமிழ் உரிச்சொற் பனுவல் ஈறாகத் தமிழில் பல நிகண்டு நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் பல அச்சிடப்பெற்றும் சில அச்சிடப்பெறாமல் பெயரளவிலும் காணக் கிடைக்கின்றன. இன்றைய சூழலில் நிகண்டுகளைப் பயன்படுத்துவோர் இல்லை எனினும் சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ள அவை பெரிதும் உதவவல்லன. மொழி வரலாற்றுக்கு உதவும் ஆவணங்களாகவும் அவை அமைகின்றன.

நிகண்டுகள் பொதுவாக மூன்று பெரும் பிரிவுகளை உடையவை அவை: (1) ஒருபொருள் பல்பெயர்த் தொகுதி, (2) ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதி, (3) பலபொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி. இந்த முப்பெரும் பிரிவுகளையும் பெற்றுள்ள நிகண்டு பூரண நிகண்டு எனப்படும். முப்பெரும் பிரிவுகளைப் பெற்று பூரண நிகண்டாக விளங்குவன, இரு பிரிவுகளை மட்டும் பெற்று விளங்குவன, ஒரு பிரிவு மட்டும் பெற்று விளங்குவன என்று நிகண்டுகளை வகைப்படுத்தலாம். இவ்வகையில் முப்பெரும் பிரிவுகளுள் முதல் தொகுதியான ஒருபொருள் பல்பெயர்த் தொகுதியை மட்டும் பெற்று நாமதீப நிகண்டு விளங்குகிறது. அதாவது ஒவ்வொரு பொருளுக்கும் எத்தனை பெயர்கள் உள்ளனவோ அத்தனை பெயர்களையும் கூறுவதாக அது விளங்குகிறது.

இந்நூலின் ஆசிரியர் சிவசுப்பிரமணியக் கவிராயர். இவரின் ஊர் கல்லிடையூர். இதனை,

- கல்லிடையூர்
மன்னு சிவசுப்ரமணியன் கவிராசன்
பன்னுதமிழ் நாமதீபம் (8)

என்னும் பாடலடிகள் மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது. இவரின் காலம் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று சுந்தர சண்முகனார் தமிழ் அகராதிக்கலையில் கூறுப்பிடுகிறார்.

தெய்வங்களுள் யாருக்கு முதன்மை தருவது என்பது நூலாசிரியர்தம் சமயக் கொள்கையைச் சார்ந்துள்ளது எனலாம். சமணசமயத்தைச் சார்ந்த திவாகரர் இயற்றிய திவாகரத்திலும், மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டிலும் அருகதேவனுக்கு முதலிடம் தந்துள்ளனர். அருகனை அடுத்துச் சிவபெருமானுக்குச் சிறப்பிடம் தந்துள்ளனர். ஆனால் பிங்கல நிகண்டில் கணபதியின் பெயர் முதலிலும் அதனை அடுத்துச் சிவபெருமானின் பெயரும் காணப்படுகிறது. நாமதீப நிகண்டில் தெய்வப் பெயர்த் தொகுதியில் முதலில் சிவனைக் குறிப்பிட்டிருப்பதாலும்,

ஆனைமுகனைக் குகனை ஆதிபுவனேசொரியை
ஞானமுதல் கோரக்க நாதனையும் (1)

என்று பாயிரம் இயல்வதாலும் ஆசிரியர் சிவசுப்பிரமணியக் கவிராயர் சைவ சமயத்தைச் சார்ந்தவராக இருக்கக் கூடும் எனக் கொள்ளலாம்.

இதற்கு முன்தோன்றிய நிகண்டு நூல்களுள் உரிச்சொல் நிகண்டு மட்டுமே வெண்பாவினால் அமைந்தது. இது 285 வெண்பாக்களில் அமைந்த மிகச் சுருங்கிய நூல். ஆனால் இந்நூல் பாயிரம் 8 வெண்பாக்களோடு 800 வெண்பாக்களில் பொருட்பெயர்களை விளக்கும் மிக விரிந்த நூல் ஆகும்.

ஒருபொருள் பல்பெயர்த் தொகுதி பற்றி எழுந்த இந்நூல் திவாகரத்தின் முதல் பத்துத்தொகுதிகளுக்கு இணையானது ஆகும். பத்துத்தொகுதிகளையும் இந்நூல் நான்கு பிரிவுகளில் பதினாறு உட்பிரிவுகளாகப் பிரித்து பெரும் பிரிவுகளைப் 'படலம்' என்றும், உட்பிரிவுகளை 'வர்க்கம்' என்றும் கொண்டுள்ளது. வேறு எந்த நிகண்டு நூலும் இப்பாகுபாட்டினைப் பெறவில்லை எனலாம். திவாகரம் முதலிய நிகண்டுகளில் தெய்வப்பெயர்த் தொகுதியிலேயே காலவகைப் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் நாமதீப நிகண்டில் மூன்றாவது படலமான அஃறிணை உயிரில் பொருள் படலத்தில் நான்காவது வர்க்கமாகக் காலவர்க்கம் காணப்படுகிறது. தெய்வப் பெயர்த் தொகுதி, மக்கள்பெயர்த் தொகுதி ஆகியனவற்றை உயர்திணைப் படலத்தின் தெய்வவர்க்கமும் மானிடவர்க்கமும் எடுத்துக் கூறுகின்றன. விலங்குப் பெயர்த் தொகுதியை அஃறிணை உயிர்ப்பொருள் படலத்துள் நாற்கால் உயிர்ப்பொருள் வர்க்கம், பறவை உயிர்ப்பொருள் வர்க்கம், ஊருயிர்ப் பொருள் வர்க்கம், நீர்வாழ் உயிர்ப்பொருள் வர்க்கம் ஆகியன எடுத்து இயம்புகின்றன. மரப்பெயர்த் தொகுதியை தாவர உயிர்ப்பொருள் வர்க்கமும், பல்பொருள் பெயர்த் தொகுதியை அஃறிணை உயிரில் பொருள் படலத்தின் இயற்கைப் பொருள் வர்க்கமும், செயற்கை வடிவப் பெயர்த் தொகுதியைச் செயற்கைப் பொருள் வர்க்கமும், இடப்பெயர்த் தொகுதியை இடவர்க்கமும் எடுத்துக் கூறுகின்றன. மக்கள் பெயர்த் தொகுதியில் காணப்படும் மக்கள் தம் உடல் உறுப்புகளின் பெயர்களை இந்நூல் ஆசிரியர் அஃறிணைப் பெயர்களாகக் கருதிச் சினை வர்க்கம் என்று தனியே ஒரு தலைப்பில் எடுத்துக் கூறியுள்ளார்.

பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி ஆகிய மூன்றையும் குணநாமப் படலம் எடுத்துக் கூறுகிறது. ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதி, பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி ஆகியன இந்நூலில் இடம்பெறவில்லை. எண்வசுக்கள், அறுசுவை முதலான சில தொகைப் பெயர்கள் மட்டும் நூலினுள் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. இவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது திவாகரம் போன்ற நிகண்டுளில் ஒரு பொருள் பல்பெயர் பற்றி முதல் பத்துத் தொகுகளில்

கூறப்பெற்ற செய்திகளைத் தொகை, வகை, விரி ஆகிய முறைகளில் தேவைக்கேற்ப மாற்றியும், பல சொற்களைச் சேர்த்தும் நிகண்டுச் சொற்பொருள்களைத் தெளிவுபடுத்தி விளக்கும் வகையில் நாமதீப நிகண்டு இயற்றிய சிவசுப்பிரமணியக் கவிராயர் ஒரு 'புதுநெறி கண்டவர்' என்று சுந்தர சண்முகனார் போற்றுகிறார். அதன் அமைப்பு முறையைக் குறிப்பிடுகையில், பெரும்பாலான நிகண்டு நூல்கள் திவாகரம் என்னும் நூலினை அடிப்படையாகக் கொண்டு அதில் காணும் தொகுதி முறையைப் பின்பற்றிச் செல்கின்றன. ஆனால் நாமதீப நிகண்டு அவ்வாறு இல்லாமல் புதியதொரு பொருட்பாகுபாட்டினை அமைத்துக் கொண்டு சிறப்பாக விளங்குகிறது. இந்நிகண்டைப் பதிப்பித்த பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தம் முன்னுரையில் இந்நிகண்டின் பொருட் பாகுபாட்டை விளக்க வரைபடமாக அமைத்துக் காட்டியுள்ளார். அது வருமாறு:



இந்நூலின் பதிப்புச் சிறப்புகள் பற்றி மு. சண்முகம்பிள்ளை,

> *'நாமதீப நிகண்டு 1930-ஆம் ஆண்டு பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப் பெற்று அவர்தம் சொந்த வெளியீடாகத் தமிழுலகிற்குக் கிட்டியது. இந்நூலிற்கு நான்கு மூலபாடப் பிரதிகளும் மூன்று உரைபாடப் பிரதிகளும் பதிப்பாசிரியருக்குக்கிட்டின. உரைபாடப் பிரதிகள் மூன்றும் குறைப் பிரதிகளாகும். அதோடு பல இடங்களில் பிழைபட்டுமிருந்தன. ஆகவே பதிப்பாசிரியர் உரைபாடத்தைத் தழுவி புதியதோர் உரை நூல்முழுமைக்கும் எழுதிச் சேர்த்துள்ளார். மேலே மூலபாடலும் அடிக்குறிப்பில் அம்மூல பாடங்களுக்குரிய உரைபாடமுமாக அமைத்து*

இந்நிகண்டு நூல் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது எனவே, பாட்டில் மேலே ஆசிரியர் தரும் பொருள்களைக் கீழேயுள்ள உரைபாடத்தில் உடனுக்குடன் கண்டு தெளிய வாய்ப்பாயுள்ளது. விளக்க எடுத்த பொருள் தலைப்புகளைத் தடித்த எழுத்தில் அமைத்து அடுத்து உரைபாடமும் உரிய பெயர்களின் எண்ணிக்கை பற்றிய எண் குறிப்புமாக அமைத்துள்ள முறை சிறப்பானதாகும். நூலிறுதியில் அமைக்கப்பட்டுள்ள சொல்லகராதி இந்நூல் விளக்கப்பெற்ற பொருள்களை எளிதில் கண்டுகொள்ளத் துணை நிற்கிறது. நிகண்டுப் பதிப்புகளுக்கு ஒரு முன்மாதிரியான வழிகாட்டியாய் விளங்குகிறது இந்நாமதீப நிகண்டின் அச்சுப்புத்தகம்'

எனக் குறிப்பிடுகிறார். இந்த நூலினை ஆதாரமாகக் கொண்டே இவ்வகராதி உருவாக்கப்பட்டுள்ளது.

நிகண்டுகளில் உள்ள சொற்களுக்குப் பொருள் காண வேண்டுமாயின் அச்சொல் எந்தத் தொகுதியில் எந்தப் பாடலில் இடம்பெற்றுள்ளது என்பதைப் பார்த்த பின்னரே அச்சொல்லின் பொருளை அறிந்துகொள்ள முடியும். அவ்வாறு அறிந்துகொள்ள முற்படினும் பாடல்களின் ஓசை நயத்திற்காகவும் யாப்பிற்காகவும் சொல்லின் இசைக்காகவும் சேர்க்கப்பட்ட அடை மொழிகள், அசைச்சொற்கள் முதலியன தடையாய் உள்ளன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நிகண்டுகள் தரும் சொற்பொருளை அகராதி முறையில் தொகுத்துத் தந்தால் பலரும் பயன் கொள்வர் என்ற எண்ணத்தோடு இந் நாமதீப நிகண்டு அகராதி வடிவம் பெறுகிறது.

இதில் எளிதில் பொருள் உணரமுடியாத சில சொற்கள் பிரித்தும் சில சொற்கள் மூலத்தில் உள்ளவாறும் இடம்பெறுகின்றன. அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்படும் பல பொருள்கள் வையாப்புரிப்பிள்ளை அவர்கள் எடுத்து விளக்கும் பொருளாகும். ஒரு சில பொருள் விளக்கம் வேண்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒருபொருளுக்குப் பல பாடல்களில் பெயர்கள் காணப்படுமாயின் இந்நூல் விரிவு அஞ்சி (ஒவ்வொரு சொல்லுக்கும் படல, வர்க்க, பாடல் எண் குறிப்பிட வேண்டி இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு) ஒவ்வொரு பாடலில் உள்ள பெயர்களையும் தனித்தனியே பாடல் வரிசையில் அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. (சிவன், விட்டுணு, பார்ப்பதி முதலான பெயர்களைக் கண்டுகொள்க). சில சொற்கள் அவற்றின் தொடர்பு கருதி மூலத்தில் ஒரே இடத்தில் காணப்பெறவில்லை எனினும் பொருள் அறிந்துகொள்ளும் எளிமை கருதி உரையில் உள்ளபடியே இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. (உதாரணமாக நீர்க்குமிழி, நீர்ச்சுழி, நீர்த்திரை, நீர்ப்பெருக்கு

முதலியன. இவ்வாறே யானை, குதிரை, தேர் முதலான சொற்களிலும் கண்டுகொள்க.) மேலும் சில தொகைப் பெயர்கள் பொருள் அமைப்பு கருதி மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. (உதாரணமாக நீர் என்னும் பொருளில் அவற்றோடு தொடர்புடைய பெயர்களை அடுத்து காண்க: புனல்கூறு ஐந்து, பூதம் ஐந்து என்று குறிப்பிட்டால் அவை நேரடிப் பொருளாக அமையாது என்பதைக் கருத்தில் கொண்டு புனல்கூறு ஐந்தனுள் ஒன்று, பூதம் ஐந்தனுள் ஒன்று என மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.) கள்ளின் பெயரில் தேனின் பெயர்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டுள்ளன. ஏன் எனில் பாடலில் கள்ளின் பெயர்கள் கூறி இவற்றோடு தேனின் பெயர் அனைத்தும் என்று குறிப்பிட்டுள்ளமையால் அப்பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

நிகண்டு நூல்கள் கிடைத்தற்கு அரியனவாக உள்ளமையால் அவற்றைப் பேணிக்காக்கும் பொருட்டு அவற்றின் மூலத்தையும் இவ்வகராதியோடு சேர்த்து வெளியிடப்படுகிறது. மூலநூலின் யாப்பு முறையில் தராமல் பொருள் எளிமை கருதிப் பாடல்களைப் பிரித்து இந்நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

இது என்னுடைய முதல் முயற்சி என்பதால் அறியாமையாலும் மறதியாலும் சில பல பிழைகள் ஏற்பட்டிருக்கக்கூடும். அவற்றை அறிஞர்கள் சுட்டிக் காட்டினால் நன்றியோடு ஏற்று உரிய திருத்தங்களை அடுத்த பதிப்பில் மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ் அகராதியினை வெளியிடும் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் அணிந்துரை வழங்கிய துணைவேந்தர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் அகராதி உருவாக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கியதோடு சிறப்பாகப் பதிப்பித்தும் உதவிய சென்னைப் பல்கலைக்கழக தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஜெயதேவன் அவர்களுக்கு எனது நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வப்போது ஏற்பட்ட ஐயங்களைக் களைந்துதவிய புலவர் ப. வெ. நாகராசன் அவர்களுக்கும், முனைவர் கு. சிவமணி அவர்களுக்கும், ஏனைய தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித்திட்டக் குழுவினர்க்கும், அலுவலக நண்பர்கள் திரு சந்திரபாபு, திரு துளசிபாலன் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் அகராதியினைக் கணினியில் தட்டச்சு செய்து வடிவமைத்து உதவிய திரு இல. கணேசன் அவர்களுக்கும் இவ்வகராதி உருவாக எல்லா வகையிலும் உதவி செய்த அனைத்து நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வை. சிவநேசன்

நாமதீப நிகண்டு

அகராதி

அகராதிப் பதிவின் அமைப்பு



அ

அ - வடசொற்களின் முன்வந்தால் இன்மை, பிறிது, ஏற்றம், எதிர்மறை என்னும் பொருள்களை உணர்த்தும் (IV:2:15) [665]

அ - ► சுட்டு (IV:2:24) [674]

அஃகல் - ► குறைவு (IV:4:11) [776]

அஃகுல்லி - ► உக்காரி (III:1:28) [403]

அஃறிணைஉயிர்மலம் - 1. இலத்தி 2. கட்டம் 3. காரம் 4. சாணாகம் 5. சாணி 6. புழுக்கை 7. விட்டை (III:5:36) [599]

அக்கசாலையன் - ► கண்ணாளன் (I:2:40) [155]

அக்கம் - ► 1. கண் (III:5:25) [588] 2. கயிறு (III:2:33) [447]

அக்கரம் - ► எழுத்து (IV:2:23) [673]

அக்கன் - ► நாய் (II:1:30) [228]

அக்காரம் - ► சர்க்கரை (III:1:34) [409]

அக்காள் - ► தமக்கை (I:2:75) [190]

அக்கில் - ► கைமூடு (III:5:18) [581]

அக்கினி - ► தீ (I:1:67) [75]

அக்கினிமூலை - ► நான்மூலைக்கும்சிறப்பு (III:3:35) [511]

அக்கினியின்மனைவி(பாரியை) - 1. சுதை 2. சுவாகா (I:1.68) [76]

அக்கு - ► 1. உருத்திராக்கம் (III:1:11) [386] 2. நத்துமணி (III:1:9) [384] 3. விடை முரிப்பு (II:1:16) [214]

அக்குஅணிந்தோன் - ► சிவன் (I:1:4) [12]

அக்குரன் - ► இடைவள்ளல் (I:2:34) [149]

அக்கேனம் - ► ஆய்தம் (IV:2:24) [674]

அக்கோ - ► இரக்கச்சொல் (IV:2:21) [671]

அகக்காழ் - ► ஆண்மரம் (II:5:94) [370]

அகங்காரம் - கரணம்நான்கனுள்ஒன்று (III:5:7) [570]; ► மனம் (III:5:14) [577]

அகங்கை - ► உள்ளங்கை (III:5:20) [583]

அகடம் - ► கொடுமை (IV:1·40) [642]

அகடு - ► வயிறு (III:5:17) [580]

அகண்டம் - ► சருவம் (IV:4:9) [774]

அகண்டன் - ► சிவன் (I:1.8) [16]

அகத்தி - 1. அச்சம் 2. கரீரம் 3. முனி (II:5:6) [282]

அகத்தியன் - 1. அன்றில்வெற்பட்டோன் 2. கடல்குடித்தோன் 3. கும்பன் 4. குறுமுனி 5. சிவசமனன் 6. தமிழ்நன் 7. பொதிகை மோனி 8. மால்சமையத்தல்லட்டோன் 9. வாதாவியட்டோன் 10. விந்தமட்டோன் 11. வில்வலனட்டோன் (I:2·6) [121]

அகந்தை - 1. அபிமானம் 2. ஆங்காரம் 3. ஏமம் 4. கருவம் 5. களிப்பு 6. செருக்கு 7. தந்து 8. தருக்கு 9. பாடவம் 10. பெருமிதம் 11. மதம் (IV:1:21) [623]

அகப்பா - ► 1. மதில் (III:3:24) [500] 2. மேடை (III:3:23) [499]

அகப்பை - தவி (III:2:25) [439]

அகம் - ► 1. இடம் (III:3:68) [544] 2 உள் (III:3:70) [546] 3. பாவனை (IV:1.4) [606] 4. மனம் (III:5:14) [577] 5. விற்றல் (IV:3:60) [748]

அகரம் - ► 1. எழுத்துச்சாரியை (IV:2:23) [673] 2. ஊர் (III:3:10) [486]

அகரு - ► அகில் (II:5:3) [279]

அகல் - 1. சராவம் 2. சுத்திகை (III:2:57) [471]

அகலம் - I. அகறல் 2. கண்ணறை 3. மாயம் 4. யா 5. யாமம் 6. வியல் (IV:4:13) [778]; ► மார்பு (III:5:18) [581]

அகலிடம் - ► பூமி (III:3:4) [480]

அகலியம் - ► மரப்பொது (II 5:88) [364]

அகலுள் - ► ஊர் (III:3:9) [485]

அகவல் - ► 1. அழைத்தல் (IV:2:20) [670] 2 ஆசிரியப்பா (IV:2:8) [658] 3. ஆடல் (IV:3:34) [722] 4. மயிலாட்டு (II:2:4) [239]

அகவை - ► வயது (III:4:10) [556]

அகழ் - 1. உடு 2. ஓடை 3. கிடங்கு 4. கேணி 5. பரிகம் 6. பாம்புரி (III:3:25) [501]

அகழ்தல் - ► தோண்டல் (IV:3:49) [737]

அகளம் - ► தாழி (III:2:57) [471]

அகற்சி - 1. ஆனல் 2. இகத்தல் 3. ஒருவல் 4. சோர்வு 5. தண்டல் 6. தணப்பு 7. துறத்தல் 8. நீங்கல் 9. நீப்பு 10. பிரிதல் 11. மாறல் 12. வல்லி (IV:3:52) [740]

அகறல் - ► அகலம் (IV·4·13) [778]

அகன்மிசை - ► தாம்பிரபன்னி (III:3:50) [526]

அகாதம் - ► ஆழம் (I:1:74) [82]

அகி - ► 1. இரும்பு (III:1.5) [380] 2. பாம்பு (II:3:3) [258]

அகிதம் - ► துன்பம் (IV:1:27) [629]

அகில் - 1. அகரு 2. காகதுண்டம் 3. பூழில் (II:5·3) [279]

அகிலம் - ► 1. சருவம் (IV:4.9) [774] 2. பூமி (III:3.4) [480]

அகைத்தல் - ► 1. நடாத்தல் (IV:3:12) [700] 2 வேதனை (IV:3:70) [758]

அங்கசன் - ► மன்மதன் (I:1:49) [57]

அங்கணம் - ► 1. சலதாரை (III:3:21) [497] 2. முற்றம் (III:3:22) [498]

அங்கணன் - ► சிவன் (I:1:6) [14]
அங்கதம் - ► 1. தோள்வளை (III:2:22) [436] 2. பாம்பு (II:3:33) [259]
அங்கம் - ► 1. சாத்திரம் (IV:2:10) [660] 2. சினை (III:5:39) [602]
அங்கர்வேந்து - ► கன்னன் (I:2:28) [143]
அங்கராகம் - ► பூசல் (IV:3:26) [714]
அங்கணை - ► பெண் (I:2:2) [117]
அங்காடி - ► கடை (III:3:12) [488]
அங்காப்பு - ► வாய்பிளத்தல் (IV:3:23) [711]
அங்காரகன் - ► 1. செவ்வாய் (I:1:90) [98] 2. தீ (I:1:67) [75]
அங்கி - 1. கஞ்சுகம் 2. காஞ்சுகம் 3. குப்பாயம் 4. சட்டை 5. மெய்ப்பை 6. வரணம் (III:2:40) [454]; ► 1. ஏழிசைக்கோ (IV:2:31) [681] 2. தீ (I:1:66) [74]
அங்கிதம் - ► உடற்றழும்பு (III:5:39) [602]
அங்கிமுகனைஅட்டோன் - ► வீரவாகு (I:1:28) [36]
அங்கிரி - ► கால் (III:5:15) [578]
அங்குசம் - ► 1. சுப்ரமண்யன்கையாயுதம் (I:1:26) [34] 2. துரோட்டி (III:2:7) [421] 3. நீர் (I:1:69) [77] 4. பார்ப்பதி (I:1:13) [21]
அங்குசமேந்தி - ► கணபதி (I:1:18) [26]
அங்குட்டம் - ► பெருவிரல் (III:5:21) [584]
அங்குரம் - ► முளை (I:5:89) [365]
அங்குரித்தல் - ► முளைத்தல் (IV:3:58) [746]
அங்குலம் - ► மூன்றுயவை (IV:4:41) [806]
அங்குலி - ► விரல் (III:5:20) [583]
அங்கை - ► உள்ளங்கை (III:5:20) [583]
அங்கோலம் - ► அழிஞ்சில் (II:5:9) [285]
அச்சஒலி - 1. அதறல் 2. கத்தல் 3. கதறல் (IV:2:38) [688]
அச்சம் - 1. அடுப்பு 2. உட்கு 3. உரும் 4. கொன் 5. கோரம் 6. சூர் 7. தாருணம் 8. நாம் 9. பயம் 10. பயானகம் 11. பனிப்பு 12. பீதி 13. பீர் 14. பேம் 15. வீமம் 16. வெடி 17. வெரூஉ 18. வெறி 19. வெறிப்பு (IV:1:37) [639]; ► 1. அகத்தி (II:5:6) [282] 2. தகடு (IV:4.2) [767]
அச்சமுற்றோன் - 1. சகிதன் 2. பீதன் 3. பீரு (I:2:55) [170]
அச்சன் - ► தகப்பன் (I:2:74) [189]
அச்சிரம் - ► கோணம் (IV:4:11) [776]
அச்சு - ► ஆவி (IV:2:24) [674]
அச்சுதம் - ► அரிசிமஞ்சள்தோய்த்து அணிவது (III:1:16) [391]
அச்சுதன் - ► விட்டுணு (I:1:37) [45]
அச்சுவத்தம் - ► அரசு (II:5:3) [279]
அச்சுவதி - 1. இரலை 2. ஏறு 3. ஐப்பசி 4. சென்னி 5. பரி 6. மருத்(து)வாநாள் 7. முன்னாள் 8. யாழ் (I:1:96) [104]
அச்சுவம் - ► குதிரை (II:1:10) [208]
அசடு - ► குற்றம் (IV:1:33) [635]
அசதி - ► புழுக்கைப்பெண் (I:2:71) [186]
அசம் - ► ஆடு (II:1:19) [217]
அசமோதம் - ► ஓமம் (II:5:65) [341]
அசர்வு - ► தளர்வு (IV:1:26) [628]
அசரம் - ► தாபரம் (II:5:97) [373]
அசலம் - ► மலை (III:3:36) [512]
அசலன் - ► சிவன் (I:1:8) [16]
அசலை - ► பூமி (III:3:4) [480]
அசறு - ► சேறு (III:3:60) [536]
அசனம் - ► 1. உண்டி (III:1:26) [401] 2. வேங்கை (II:5:4) [280]
அசனி - ► 1. இடி (I:1:77) [85] 2. குலிசம் (III:2:6) [420]
அசி - ► 1. கலப்பு (IV:3:74) [762] 2. நிந்தைச் சிரிப்பு (IV:3:42) [730] 3. வாள் (III:2:2) [416]
அசித்தல் - ► உண்டல் (IV:3:5) [693]
அசிதம் - ► கறுப்பு (IV:4:22) [787]
அசீரணம் - ► செரியாமை (IV:3:20) [708]
அசுணம் - 1. இசைப்பிரியி 2. கேகயம் 3. பறைப்பகை (II:2:13) [248]
அசுத்தம் - 1. அசூசம் 2. உற்பாதம் 3. சூதகம் 4. தீட்டு 5. துடக்கு 6. தூய்திலி 7. புலை 8. வாலாமை (IV:1:14) [616]
அசும்பு - ► கிணறு (III:3:57) [533]
அசுரநாள் - ► மூலம் (I:1:101) [109]
அசுரர் - 1. அந்தரத்தார்க்கு ஒன்னார் 2. அவுணர் 3. தகுவர் 4. தயித்தியர் 5. திதி மைந்தர் (I:1:65) [73]; ► பதினென்கணம் (I:1:60) [68]
அசுவகண்டி - ► மரா (II:5:39) [315]
அசுவம் - ► அழுக்குரா (II:5:65) [341]
அசூயை - வான்கூறுஐந்தனுள்ஒன்று (III:5:9) [572]; ► அழுக்காறு (IV:1:13) [615]
அசேதனம் - ► அறிவிலி (IV:1:2) [604]
அசை (பொதுஅசைச்சொல்) - 1. துலாம் 2. துலை 3. தூக்கு (III:2:49) [463]; 4. அரோ 5. அன்று 6. ஆம் 7. ஆல் 8. இகும் 9. இட்டு 10. இருந்து 11. என் 12. என்ப 13. ஐ 14. ஓரும் 15. கா 16. குரை 17. சின் 18. தாம் 19. தான் 20. பிற 21. பிறக்கு 22. போ 23. மதி 24. மாது 25. யா (IV:2:26) [676]
அசைத்தல் - ► கட்டுதல் (IV:3:64) [752]
அசைதல் - 1. அளைசல் 2. இயங்கல் 3. ஒசி 4. சொரியல் 5. துயல்வரல் 6. பாழல் (IV:3:48) [736]

அசையடி -► அம்போதரங்கம் (IV:2:8) [658]
அசைவு - ► ஆடல் (IV:3:34) [722]
அசோகு - 1. ஆயில் 2. காகோளி 3. செயலை 4. பிண்டி (II:5:40) [316]
அஞ்சம் - ► அன்னம் (II:2:3) [238]
அஞ்சலி - 1. கும்பாடு 2. கைகூப்பல் 3. தொழல் (IV:3:19) [707]; ► 1. இரண்டு சிறங்கை (IV:4:39) [804] 2. வெளவால் (II:2:17) [252]
அஞ்சன் - ► அருக்கர்பன்னிருவர் (I:1:58) [66]
அஞ்சனம் - ► மை (III:1:31) [406]
அஞ்சனி -► 1.காயா (II:5:9) [285] 2. பார்ப்பதி (I:1:15) [23]
அஞ்சுகம் - ► இலவங்கம் (IV:5:7) [283]
அஞ்ஞும் - ► கல்லாமை (IV:1:18) [620]
அஞ்ஞானம் - ► கல்லாமை (IV:1:18) [620]
அஞ்ஞூறு (ஐஞ்ஞூறு) ஊர்களின் தலைமைஊர் - மடம்பம் (III:3:10) [406]
அஞ்ஞை - ► அறிவிலான் (I:2:55) [170]
அஞர் - ► துன்பம் (IV:1:28) [630]
அட்டம் - ► எட்டு (IV:4:34) [799]
அட்டமூர்த்தி - ► சிவன் (I:1:10) [18]
அட்டி - ► அதிமதுரம் (II:5:66) [342]
அட்டில் - ► அடுக்களை (III:3:20) [496]
அட்டை - 1. உரு 2. செழுகம் (II:4:8) [274]; ► நீர்வாழ்வன (II:4:2) [268]
அடக்கம் - ► ஒடுக்கம் (IV:3:46) [734]
அடகு - ► இலைக்கறி (II:5:46) [322]
அடங்கல் - ► சருவம் (IV:4:9) [774]
அடர் - ► தகடு (IV:4:2) [767]
அடர்தல் - ► நெருக்கம் (IV:4:12) [777]
அடல் -► 1. சங்காரம் (IV:3:4)[692] 2. வன்மை (IV:4:28) [793]
அடலை - ► சாம்பல் (III:1:14) [389]
அடவி - ► 1. காடு (III:3:42) [518] 2. மரப்பொது (II:5:88) [364]
அடி - ► கால் (III:5:15) [578]
அடிக்குமணி - கண்டை (III:2:26) [440]
அடிகள் - ► 1. இருடிமார் (I:2:5) [120] 2. குரு (I:2:7) [122]
அடிசில் - ► சோறு (III:1:25) [400]
அடித்தல் - 1. அறை 2. எற்றல் 3. மோதல் (IV:3:33) [721]; ► தட்டல் (IV:3:38) [726]
அடிமை - ► புழுக்கை (I:2:71) [186]
அடுக்கல் - ► மலை (III:3:36) [512]
அடுக்களை - 1. அட்டில் 2. மடைப்பள்ளி (III:3:20) [496]
அடுத்தல் - ► பொருந்துதல் (IV:3:51) [739]
அடுதல் - ► சமைதல் (IV:3:46) [734]
அடுப்பு - 1. காமரம் 2. குமுதம் 3. சுல்லி 4. முத்தானம் 5. மொட்டாய்தம் (III:3:20) [496]; ► 1. அச்சம் (IV:1:37) [639] 2. பரணி (I:1:96) [104]
அடை -► 1. இலை (II:5:90) [366] 2. சிற்றாண் (III:1:30) [405] 3. சுமை (III:2:56) [470] 4. தோசை (III:1:29) [404] 5. பட்டடை (III:2:8) [422]
அடைக்கலங்குருவி - 1. ஊர்க்குருவி 2. குதிகாலி 3. குலிங்கம் 4. சகடம் 5. புலிங்கம் (II:2:14) [249]
அடைக்கலம் - கையடை (IV:1:48) [650]
அடைக்காய் - ► பாக்கு (II:5:10) [286]
அடைச்சல் - ► சொருகல் (IV:3:26) [714]
அடைதல் - ► 1. புகுதல் (IV:3:77) [765] 2. பொருந்துதல் (IV:3:51) [739] 3. மரணம் (IV:3:26) [717]
அடைய - ► சருவம் (IV:4:9) [774]
அண்டகை - ► அப்பம் (III:1:29) [404]
அண்டங்காக்கை - காகோலம் (II:2:7) [242]
அண்டசம் - ► 1. அரணை (II:3:7) [263] 2. ஆமை (II:4:9) [275] 3. உடும்பு (II:1:21) [219] 4. எறும்பு (II:3:7) [263] 5. ஓந்தி (II:1:33) [231] 6. சங்கு (II:4:3) [269] 7. சிப்பி (II:4:7) [273] 8. தவளை (II:4:6) [272] 9 நண்டு (II:4:8) [274] 10. நத்தை (II:4:5) [271] 11. பல்லி (II:3:9) [265] 12. பறவை (II:2:19) [254] 13. பாம்பு (II:3:33) [259] 14. மீன் (II:4:3) [269] 15. முதலை (II:4:9) [275]
அண்டம் - ► 1. பீசம் (III:5:16) [579] 2. முட்டை (II:2:20) [255]
அண்டயோனி - ► சூரியன் (I:1:85) [93]
அண்டர் - ► 1. தேவர்கள் (I:1:55) [63] 2. முல்லையர் (I:2:43) [158]
அண்டர் ஆண்டு (தெய்வவருடம்) - ஆண்டு (வருடம்)360 கொண்டது (III:4:4) [550]
அண்டர்கோன் - ► இந்திரன் (I:1:53) [61]
அண்டர்சொல் - ► வடசொல் (IV:2:7) [657]
அண்டர்பெண் (தெய்வப்பெண்) - 1. அரம்பை 2. அரமான் (I:1:61) [69]
அண்டல் - ► பொருந்துதல் (IV:3:51) [739]
அண்ணம் -► 1. உண்ணாக்கு (III:5:23)[586] 2 ஏழிசைபிறக்கும்இடம் (IV:2:29) [679] 3. கல்லாமை (IV:1:18) [620] 4. கீழ்வாய்ப்புறம் (III:5:23) [586]

அண்ணல் - ► 1. அரசன் (I:2:22) [137] 2. சிவன் (I:1:3) [11] 3. பெருமை (IV:4:8) [773] 4. பொருந்துதல் (IV:3:51) [739] 5. முல்லை வேந்தன் (I:2:44)[159] 6. வன்மை (IV:4:28) [793]

அண்ணன் - 1. ஐயன் 2. சேட்டன் 3. தம் முன் 4. தமையன் 5. முன்னோன் 6. மூத் தோன் (I:2·76) [191]; ► குரு (I:2:7) [122]

அண்ணி - ► தமக்கை (I:2:75) [190]

அண்ணை - ► 1. அறிவிலான் (I:2:55) [170] 2. பேய் (I:1:64) [72]

அண்மை - ► சமீபம் (IV:4:14) [779]

அணங்கு - ► 1. அழகு (IV:4:25) [790] 2. ஆட்டுக்குட்டி (II:1:20) [218] 3.சங்காரம் (IV:3:4) [692] 4. தெய்வம் (I:1:54) [62] 5. நோய் (IV:1:25) [627] 6. பெண் (I·2:2) [117] 7. வருத்தம் (IV:1:31) [633] 8. வெறி (IV:3.38) [726]

அணரி - ► கீழ்வாய்ப்புறம் (III:5:23) [586]

அணல் - ► 1. கீழ்வாய்ப்புறம் (III:5:23) [586] 2. மிடறு (III.5:23) [586]

அணவல் - ► பொருந்துதல் (IV:3:51) [739]

அணி - ► 1. அழகு (IV:4:25) [790] 2. ஆபரணம் (III:2:24) [438] 3. படை வகுப்பு (I:2:26) [141] 4. வகுப்பு (IV:4:3) [768]

அணிதம் - ► பல்லக்கு (III:2:46) [460]

அணிதல் - ► அலங்கரித்தல் (IV:3:26) [714]

அணிந்துரை - ► பாயிரம் (IV:2:16) [666]

அணியல் - ► மாலை (III:2:61) [475]

அணில் - 1. வரிப்புறம் 2. வெளில் (II:1·23) [221]

அணு - 1. ஆய்வு 2. நுட்பம் 3. நுண்மை 4. நுணுகு 5. நுழை 6. நொசிவு (IV:4:13) [778]; ► உயிர் (III:5:3) [566]

அணுகல் - ► பொருந்துதல் (IV:3:51) [739]

அணை - ► 1. கரை (III:3:54) [530] 2 மெத்தை (III:2·31) [445]

அணைத்தல் - ► கட்டுதல் (IV:3.64) [752]

அணைதல் - ► 1. உவமானம் (IV:2:25) [675] 2. பொருந்துதல் (IV·3:52) [740]

அத்தபாகை - ► வேதபாகை (IV:2:12) [662]

அத்தம் - 1. ஐவிரல் 2. கவுத்துவம் 3. களிறு 4. காமரம் 5. கை 6. நவ்வி 7. மீன் (I:1:100) [108]; ► 1. கண்ணாடி (III:2:28) [442] 2. காடு (III:3:42) [518] 3. கை (III:5:19) [582] 4. பொருள் (III:1:7) [382], (IV:2:22) [672] 5. வழி (III:3:65) [541]

அத்தமனம் - ► புகுதல் (IV:3:77) [765]

அத்தவாளம் - ► உல்லாசம் (III:2:39) [453]

அத்தன் - ► 1 குரு (I:2:7) [122] 2. சிவன் (I:1:6) [14] 3. தகப்பன் (I:2:74) [189]

அத்தாணி - ► வேந்துஇருக்கை (III:3:14) [490]

அத்தான் - ► அம்மான், அத்தை, வேட்ட பெண்ஆணுடன்பிறந்தஆண் (I:2:83) [198]

அத்தி - 1. அதம் 2. அதவு 3. உதும்பரம் 4. கோளி (II:5:14) [290]; 5. நாடிபத்துளுள் ஒன்று (III:5:11) [574]; ► 1. எலும்பு (III:5:31) [594] 2. கடல் (III:3:47) [522] 3. யானை (II:1:3) [201] 4. விதை (II:5:93) [369]

அத்திப்பெண்ணாய்ச்செய்தோன் - ► சம்பந்தன் (I:2:15) [130]

அத்தியாக்கிரம் - ► பெருங்காயம் (III:1:8) [393]

அத்தியாயம் - ► படலம் (IV:2:4) [664]

அத்தியானம் - ► படிப்பு (IV:2:22) [672]

அத்திரணம் - ► அதிவிடையம் (II:5:66) [342]

அத்திரம் - ► 1. அம்பு (III:2:11) [425] 2. விடும்படை (III:2:12) [426]

அத்திரி - ► 1. உலைத்துருத்தி (III:2:45) [459] 2. ஒட்டகம் (II:1:32) [230] 3. கழுதை (II:1:32) [230] 4. குதிரை (II:1:11) [209] 5. மரப்பொது (II:5:88) [364] 6. மலை (III:3:36) [512]

அத்திரிசேய் - ► சந்திரன் (I:1:89) [97]

அத்தினபுரம் - ► குருகுலேசர்ஊர் (III:3:32) [508]

அத்துவிதன் - ► சிவன் (I:1:8) [16]

அத்துவிதி - ► சித்தாந்தி (I:2:14) [129]

அத்தை - ► 1. ஆசாள் (I:2:70) [185] 2. பார்ப்பதி (I:1:11) [19] 3. மாமி (I:2:77) [192] 4. முன்னிலைஅசை (IV:2:26) [676]

அத்யாசம் - ► வேறுபட்டுத்தோன்றல் (IV:3·49) [737]

அதகம் - ► மருந்து (II·5:98) [374]

அதசி - ► காயா (II:5:9) [285]

அதட்டு (அதட்டல்) - 1. உங்காரம் 2. உரப்பு 3 தாக்கு (IV:2:38) [688]

அதம் - ► 1. அத்தி (II:5:14) [290] 2. பள்ளம் (III:3·59) [5ɔ5]

அதர் - ► 1. ஆட்டின்கண்டத்தில்ஒட்டும் உறுப்பு (II:1:20) [218] 2. நுண்மணல் (III:3:58) [534] 3. வழி (III:3:65) [541]

அதர்கோள் - ► வழிப்பறித்தல் (IV:3:63) [751]

அதர்வணம் - ► நான்காம்வேதம் (IV:2:13) [663]

அதரம் - ► உதடு (III:5:24) [587]

அதவு - ► அத்தி (II:5:14) [290]

அதள் - ► தோல் (III:5:32) [595]

அதறல் - ► அச்சஒலி (IV:2:38) [688]
அதா - ► அவ்விடம் (III:3:69) [545]
அதிக்கிராவி - ► நெல்லின்வகை (II:5:75) [351]
அதிகரித்தல் - ► ஆணைசெலுத்தல் (IV:3:75) [763]
அதிகாரம் - ► மிஞ்சல் (IV:3:75) [763]
அதிங்கம் - ► அதிமதுரம் (II:5:66) [342]
அதிசயம் - 1. அற்புதம் 2. ஆச்சரியம் 3. இறும்பூது 4. உற்பனம் 5. சித்திரம் 6. வித்தகம் 7. விம்மிதம் 8. வியப்பு (IV:1:41) [643]
அதிசூரி - ► புருடாமிருகம் (II:1:24) [222]
அதிதி - ► புதியோன் (I:2:50) [165]
அதிதிநாள் - ► புணர்பூசம் (I:1:98) [106]
அதிதியேயன் - ► சூரியன் (I:1:87) [95]
அதிபலை - ► குருவிஞ்சி (II:5:50) [326]
அதிபன் - ► அரசன் (I:2:21) [136]
அதிமதுரம் - 1. அட்டி 2. அதிங்கம் (II:5:66) [342]
அதியம் - ► இலாபம் (IV:1:43) [645]
அதிர்ப்பு - ► நடுக்கம் (IV:1:32) [634]
அதிரசம் - ► சிற்றூண் (III:1:30) [405]
அதிவிடையம் - அத்திரணம் (II:5:66) [342]
அதீதம் - ► 1. இன்மை (IV:1:20) [622] 2. வாயு அடங்கத்தனிஉயிர்நிற்றல் (IV:3:10) [698]
அது - ► வேற்றுமை (IV:2:27) [677]
அதோகதி - ► பாதாளம் (III:3:3) [479]
அதோமுகம் - ► கழிமுகம் (III:3:53) [529]
அந் - வடசொற்களின் முன் வந்தால் இன்மை, பிரிது, ஏற்றம், எதிர்மறை என்னும் பொருள்களை உணர்த்தும் (IV:2:15) [665]
அந்தகன் - ► 1. எமன் (I:1:78) [86] 2. குருடன் (I:2:59) [174]
அந்தகாரம் - ► இருள் (I:1:107) [115]
அந்தணர் - ► பிராமணர் (I:2:18) [133]
அந்தணன் - ► வியாழன் (I:1:92) [100]
அந்தப்புரம் - ► வேந்தர்பெண்வாழ்வீடு (III:3:15) [491]
அந்தம் - ► அழகு (IV:4:26) [791]
அந்தமிலான் - ► சிவன் (I:1:9) [17]
அந்தர் - ► உள் (III:3:70) [546]
அந்தரத்தார்க்கொன்னார் - ► அசுரர் (I:1:65) [73]
அந்தரம் - ► தீது (IV:1:29) [631]
அந்தராளன் - அணுலோமன், பிரதிலோமன் ஆகிய இவ்விரு வகுப்பிலும் மணவாது சோர்வாய்ப் பெற்ற பிள்ளை (I.2:65) [180]
அந்தரி - ► பார்ப்பதி (I:1:14) [22]
அந்தன் - ► குருடன் (I:2:59) [174]
அந்தி - 1. சந்தி 2. சாயம் 3. மாலை (III:4:8) [554]
அந்திமான் - ► இடைவள்ளல் (I:2:34) [149]
அந்தில் - ► பொருள்கொள்இடைச்சொல் (IV:2:27) [677]
அந்திவண்ணன் - ► சிவன் (I:1:1) [9]
அந்தோ - ► இரக்கச்சொல் (IV:2:21) [671]
அநாமிகை - ► மோதிரவிரல் (III:5:21) [584]
அப்பம் - 1. அண்டகை 2. கஞ்சம் 3. தாமரை 4. பூபம் (III:1:29) [404]; ► சிற்றூண் (III:1:30) [405]
அப்பன் - 1. ஆழூர்த்தலைவன் 2. சிலை புணையாயூர்ந்தோன் 3. திலதபதி பின்னோன் 4. நாவரையன் 5. புகழ்ஆர் சேய் 6. மருள்நீக்கி 7. மாதினிபாள் மைந்தன் 8. வாகீசன் (I:2:16) [131]; ► தகப்பன் (I:2:74) [189]
அப்பியாசம் - 1. அனிட்டை 2 உழத்தல் 3. சாதகம் 4. பயிற்சி 5. பரிசயம் 6. பழக்கம் 7. வாடிக்கை 8. வாதனை (IV:1:17) [619]
அப்பிரம் - ► மேகம் (I:1:75) [83]
அப்பின்சுழி (நீர்ச்சுழி) - உந்தி (I:1:72) [80]
அப்பு - ► நீர் (I:1:70) [78]
அப்புசம் - ► தாமரை (II:5:85) [361]
அப்போது - அன்று (III:4:15) [561]
அபகாரம் - ► வகர்தல் (IV:3:28) [716]
அபயம் - ► பார்ப்பதி (I:1:13) [21]
அபயன் - ► சோழன் (I:2:32) [147]
அபரஞ்சி - ► ஆடல்பாடல்அழகினிக் மிக்காள் (I:2:66) [181]
அபரம் - ► 1. முதுகு (III 5:22) [585] 2. யானைப்பின்கால் (II:1:6) [204]
அபராசி - ► விட்டுணுக்கிராந்தி (II:5:48) [324]
அபவாதம் - ► ஒடுக்கம் (IV.3:46) [734]
அபாங்கம் - ► கடைக்கணிட்பு (IV:3:21) [709]
அபாமார்க்கம் - ► நாயுருவி (II:5:26) [302]
அபாவம் - ► இன்மை (IV:1:20) [622]
அபானன் - வாயுபத்தனுள்ஒன்று (III:5:10) [573]
அபிடேகம் - ► மூழ்குவித்தல் (IV:3:72) [760]
அபிதானம் - ► பேர் (IV:1:45) [647]
அபிநவம் - ► புதுமை (III:4:17) [563]
அபிப்பிராயம் - ► கொள்கை (IV:1:48) [650]

அபிமானம் - ► அகந்தை (IV:1:21) [623]
அபிராமி - ► பார்ப்பதி (I:1:16) [24]
அபிவாசனம் -► செரியாமை (IV:3:20) [708]
அபூதம் - ► புதுமை (III:4:17) [563]
அபூபம் - ► சிற்றுண்டி (III:1:28) [403]
அபேட்சை - ► ஆசை (IV:1:30) [632]
அம் - ► 1. அழகு (IV:4:25) [790] 2. நீர் (I:1:70) [78]
அம்-எனல் - ► அனுகரணஆர்ப்பு (IV:2:36) [686]
அம்பகம் - ► கண் (III:5:25) [588]
அம்பணத்தி - ► பார்ப்பதி (I:1:13) [21]
அம்பணம் - ► அளக்குங்கால் (III:2:30) [444]
அம்பரம் - ► 1. கடல் (III:3:45) [521] 2. சீலை (III:2:38) [452] 3 திசை (III:3:34) [510]
அம்பரவதி - ► தாம்பிரபன்னி (III:3:49) [525]
அம்பல் - ► நிந்தை (IV:2:4) [654]
அம்பலம் - ► சபை (III:3:14) [490]
அம்பி - ► கப்பல் (III:2:55) [469]
அம்பிகை - ► பார்ப்பதி (I:1:14) [22]
அம்பீர்க்கு - உடு (III:2:12) [426]
அம்பு - 1. அத்திரம் 2. ஆசுகம் 3. உரோபம் 4. ஏ 5. கதிரம் 6. கோ 7. கோல் 8. சரம் 9. சாயகம் 10. சிலீ முகம் 11. தொடை 12. தோணி 13 பகழி 14. பத்திரம் 15. பல்லம் 16. பாணம் 17. புங்கம் 18. பூதை 19 மாற்கணம் 20 வண்டு 21. வாளி 22. விசிகம் (III:2:11) [425]; ► நீர் (I:1:70) [78]
அம்புக்கட்டு - 1. புதை 2. புழுக்கு (III:2:12) [426]
அம்புக்குதை - 1. குப்பி 2. புங்கம் (III:2:10) [424]
அம்புக்கூடு - 1. ஆவநாழிகை 2. ஆவம் 3. தூணி (III:2:10) [424]
அம்புச்சிறகு - காம்பு (III:2:12) [426]
அம்புசம் - ► தாமரை (II:5:85) [361]
அம்புதம் - ► மேகம் (I:1:75) [83]
அம்புயத்தோன் (பிரமன்) ஆயுள் - அயன்ஆண்டு (பிரமவருடம்) 100 கொண்டது (33595430000000x100 =3359543040000000000) (III:4:5) [551]
அம்புயநூல்நாணான் - ► மன்மதன் (I:1:51) [59]
அம்புயம் - ► நீர் (I:1:70) [78]
அம்புராசி - ► கடல் (III:3:46) [522]
அம்புலி - ► சந்திரன் (I:1:88) [96]
அம்பை - ► 1. கொக்கிறகுமந்தாரை (II:5:42) [318] 2. பார்ப்பதி (I:1:12) [20]
அம்போதரங்கம் - அசையடி (IV:2:8) [658]
அம்போதி - ► கடல் (III:3:46) [522]
அம்போருகம் - ► தாமரை (II:5:85) [361]
அம்ம - ► பொருள்கொள்இடைச்சொல் (IV:2:27) [677]
அம்மம் - ► முலை (III:5:19) [582]
அம்மனை - ► 1. அம்மானை (III:2:28) [442] 2. தாய் (I:2:75) [190]
அம்மான் - ► 1. தகப்பன் (I:2:74) [189] 2. மாமன் (I:2:77) [192]
அம்மானை - அம்மனை (III:2:28) [442]
அம்மி - அரைகல் (III:2:35) [449]
அம்மை - ► 1. இனிபிறப்பது (IV:3:2) [690] 2. தாய் (I:2:75) [190] 3. நோற்பாள் (I:2:67) [182]
அம்மோ - ► இரக்கச்சொல் (IV:2:21) [671]
அமங்கலி - ► கைம்மை (I:2:67) [182]
அமணழித்தோன் -► சம்பந்தன் (I:2:15) [130]
அமணன் -►குணத்தைப்பொருள்என்போன் (I:2:12) [127]
அமர் - ► யுத்தம் (IV:3:30) [718]
அமர்க்குஅழைப்பு (அழைத்தல்) - அறைகூவல் (IV:2:22) [672]
அமர்தல் - ► வசித்தல் (IV:3:47) [735]
அமரர் -► 1. சத்துரு (I:2:72) [187] 2. தேவர் (I:1:55) [63]
அமராபதி - ► வின்கோநகர் (III:3:28) [504]
அமரி - ► 1. தேவாமிர்தம் (III:1:38) [413] 2. பார்ப்பதி (I:1:16) [24]
அமலை -► 1. சோறு (III:1:25) [400] 2. பல (IV:4:7) [772]
அமளி - ► படுக்கை (III:3:26) [502]
அமாத்தியன் - ► மந்திரி (I:2:23) [138]
அமாவாசி - 1. அமை 2. கதிர்க்கூட்டு (III:4:11) [557]
அமிர்தக்கோலி - ► தாம்பிரபன்னி (III:3:49) [525]
அமிர்தம் -► 1. உயிர்தரும்மருந்து (II:5:99) [375] 2. மோக்கம் (III:3:1) [477]
அமிழ்ந்தல் - ► மூழ்கல் (IV:3:72) [760]
அமுக்கல் - ஞெமுங்கல் (IV:3:29) [717]
அமுக்குரா - அசுவம் (II:5:65) [341]
அமுதம் -► 1 இனிப்பு (IV:4:31) [796] 2. நீர் (I:1:70) [78] 3. பூமிச்சர்க்கரை (II:5:69) [345] 4. விந்து (III:5:38) [601]
அமுதர் - ► முல்லையர் (I:2:43) [158]

அமுதவல்லி - ► சீந்தில் (II:5:56) [332]
அமுது - ► 1. சோறு (III:1:25) [400] 2. பால் (III:1:32) [407]
அமுதுசெய்தல் - ► உண்டல் (IV:3:5) [693]
அமுதுண்டோர் - ► தேவர் (I:1:55) [63]
அமுரி - ► மூத்திரம் (III:5:35) [598]
அமேத்தியம் - ► மலம் (III:5:36) [599]
அமை - ► 1. அமாவாசி (III:4:11) [557] 2. மூங்கில் (III:5:20) [296]
அமைச்சன் - ► மந்திரி (I:2:23) [138]
அமைச்சு - ► உபாயம் (IV:1:4) [606]
அமைதல் - ► பொருந்துதல் (IV:3:51) [739]
அமைதி - ► வளம் (IV:1:19) [621]
அமையம் - ► காலம் (III:4:9) [555]
அய்யன் - ► 1. குரு (I:2:7) [122] 2. தகப்பன் (I:2:74) [189]
அயத்தோன் - ► சனி (I:1:94) [102]
அயம் - ► 1 ஆடு (II:1:19) [217] 2. இரும்பு (III:1:5) [380] 3. குதிரை (II:1:10) [208] 4. நீர் (I:1:70) [78]
அயர்த்தல் - ► மறத்தல் (IV:1:34) [636]
அயர்தல் - 1. சோர்வு 2. தளருதல் 3. வாடல் (IV:3:72)[760]; ► செய்தல் (IV:3:1) [689]
அயர்வு - ► வருத்தம் (IV:1:31) [633]
அயல் - ► இடம் (III:3:69) [545]
அயலோர் - 1. ஏதிலர் 2. நொதுமலோர் 3. வம்பலர் (I:2:62) [177]
அயன் - ► பிரமன் (I:1:47) [55]
அயன்ஆண்டு (பிரமவருடம்) - அயன் (பிரமன்) நாள் 360 கொண்டது (9332064000000x1360 = 335954304000000) (III:4:5) [551]
அயன்ஊர் - மனோவதி (III:3:28) [504]
அயன்குரு - ► சுப்ரமண்யன் (I:1:22) [30]
அயன்சென்னிகொய்தோன் - ► பவயிரவன் (I:1:33) [41]
அயன் (பிரமன்) நாள் - நான்குயுகமும் (கலியுகம், திரேதயுகம், கிரேதயுகம், துவாபரயுகம்) 2000கொண்டது (4666032000 x 2000=9332064000000) (III:4:4) [550]; ► உரோகினி (I:1:97) [105]
அயன்பாரி - ► சரசோதி (I:1:48) [56]
அயன்வாழுநாள் - கற்பகம் (III:4:10) [556]
அயனம் - இருதுமூன்றுகொண்டது (III:4:3) [549]; ► 1. ஆண்டில்பாதி (III:4:11) [557] 2. வழி (III:3:65) [541]
அயனம்இரண்டுகொண்டது - ► ஆண்டு (III:4:3) [549]
அயனுக்குளட்டான் - ► சிவன் (I:1:9) [17]
அயனைப்பாகனாகக்கொண்டோன் - ► சிவன் (I:1:5) [13]
அயாவுயிர்ப்பு - 1. அறல் 2. நோ (IV:3:77) [765]
அயிக்கம் - ► கலப்பு (IV:3:74) [762]
அயிர் - ► 1. சர்க்கரை (III:1:34) [409] 2. நுண் மணல் (II:3:58) [534]
அயிராணி - ► 1. இந்திரன்தேவி (I:1:54) [62] 2. பச்சையாறு (III:3:52) [528] 3. பார்ப்பதி (I:1:12) [20]
அயிராபதம் - ► கொழுவிஞ்சி (II:5:8) [284]
அயில் - ► 1. கூர்மை (III:2:13) [427] 2. வேல் (III:2:2) [416]
அயிலேயம் - ► மொசுமொசுக்கை (II:5:59) [335]
அயிறல் - ► உண்டல் (IV:3:5) [693]
அயினி - ► உண்டி (III:1:26) [401]
அயுதம் - ► பத்துஆயிரம் (IV:4:34) [799]
அயோத்தி - 1. கோசலை 2. கோலம் 3. சாகேதம் 4. விரிசு 5. வினிதை (III:3:30) [506]
அர்ச்சனை - ► பூசனை (IV:3:18) [706]
அரக்கர் - ► 1. இராக்கதர் (I:1:65) [73] 2. பதினெண்கணம் (I:1:60) [68]
அரக்கு - ► 1. கஞ்சி (III:1:27) [402] 2. கள் (III:1:37) [412] 3. மெழுகு (III:1:10) [385]
அரங்கம் - ► 1. ஆற்றிடை (III:3:57) [533] 2. கூத்துப்பயிலிடம் (III:3:21) [497] 3. படைபயிலிடம் (III:3:21) [497] 4. வல்பயிலிடம் (III:3:21) [497]
அரசநாகம் - 1. இராசாளி 2. காளாம்பகி 3. குக்குடம் 4. பறவைப்பாம்பு 5. மாநாகம் (II:3:5) [261]
அரசமாடம் - ► பயறு (II:5:62) [338]
அரசமோகினி - ► எலுமிச்சம் (II:5:6) [282]
அரசன் - 1. அதிபன் 2. அரன் 3. ஆதிபன் 4. இறை 5 ஈசன் 6. ஏந்தல் 7 ஓங்கல் 8. காந்தன் 9. காவலன் 10. கொழுநன் 11. கொற்றவன் 12. கோ 13. கோன் 14. சுவாமி 15. செம்மல் 16. தலைவன் 17. நாதன் 18. நிருபன் 19. பதி 20. பிரபு 21. பிரான் 22. பெம்மான் 23. மன்னன் 24. வேந்து (I:2:21) [136]; 25. அண்ணல் 26. இயமான் 27. இராசன் 28. குருசில் 29. கோமான் 30. துரை 31. தோன்றல் 32. பார்த்திபன் 33. புரவலன் 34. பூபன் 35. பெருமான் 36. மகிபன் (I:2:22) [137]; ► வியாழன் (I:1:92) [100]
அரசி - 1. இறைவி 2. கோதாரம் 3. கோமாட்டி 4. சாமி 5. தலைவி 6. பெருமாட்டி 7. முதல்வி (I:2:69) [184]
அரசு - 1. அச்சுவத்தம் 2. கணவம் 3. சராசனம் 4. சுவலை 5. திருமரம் 6. பணை 7. பிப்பிலம் 8. போதி (II:5:3) [279]

அரசுவா - யுதநாதன் (II:1:5) [203])
அரட்டர் - ► குறுநிலக்கோ (I:2:22) [137]
அரண் - ► காவல் (IV:3:17) [705]
அரணம் - ► 1. மதில் (III:3:24) [500] 2.மெய்க் கவசம் (III:2:14) [428]
அரணி - ► முன்னை (II:5·51) [327]
அரணை - அண்டசம் (II:3;7) [263]
அரத்தம் - ► 1. கடம்பு (II:5.29) [305] 2. சிவப்பு (IV:4:21) [786] 3. செங்குவளை (II:5:87) [363] 4. பவளம் (III:1:9) [384]
அரதனம் - ► இரத்தினம் (III:1:11) [386]
அரந்தை - ► துன்பம் (IV:1:28) [630]
அரம்பை - ► 1. அண்டர்பெண் (I:1:61) [69] 2. வாழை (II:5:11) [287]
அரமான் - ► அண்டர்பெண் (I:1:61) [69]
அரமியம் - ► நிலாமுற்றம் (III:3:22) [498]
அரலை - ► கழலை (III:5:34) [597]
அரவம் - ► 1 ஒலி (IV:2:35) [685] 2. சிலம்பு (III:2:20) [434] 3. பாம்பு (II:3:2) [258]
அரவிந்தம் - ► தாமரை (II:5:84) [360]
அரவின் (பாம்பின்)நா - கவர் (இரட்டை) நா (II:3:6) [262]
அரவினைநாணாகக்கொண்டோன் - ► சிவன் (I·1:5) [13]
அரற்றல் - ► ஒலி (IV:2 33) [683]
அரன் - ► 1. அரசன் (I:2:21) [136] 2. சிவன் (I·1.9) [17]
அரன்சேய் - ► வீரவாகு (I 1:29) [37]
அரன் (சிவன்) வில் - பினாகம் (III.2:9) [423]
அரா - ► பாம்பு (II·3.2) [258]
அராகம் - முடுகு (IV:2:8) [658]; ► சிவப்பு (IV:4:21) [786]
அராளம் - ► ஓர்கை (III:5·19) [582]
அரி - பரல் (III:2.20) [434]; ► 1 அரிசி (II:5:76) [352] 2. இந்திரன் (I:1:52) [60] 3. இருள் (I:1:107) [115] 4 எமன் (I:1:78) [86] 5. கடல் (III:3·47) [523] 6. கிளி (II.2:3) [238] 7. குதிரை (II:1:10) [208] 8. குரங்கு (II:1:27) [225] 9. சந்திரன் (I:1:88) [96] 10. சிங்கம் (I:1:104) [112], (II:1:1) [199] 11. சூரியன் (I:1:85] [93] 12. தகடு (IV:4:2) [767] 13. தவளை (II:4:6) [272] 14 தீ (I:1:66) [74] 15. தேர் (III:2.47) [461] 16. தோப்பு (III:3:44) [520] 17. பகைமை (IV:1:26) [628] 18. பசுமைநிறம் (IV:4:23) [788] 19. படுக்கை (III:3.26) [502] 20. பன்றி (II:1:22) [220] 21. பாம்பு (II:3:3) [259] 22. பிரகாசம் [IV:4:17] [782] 23. புகை (I:1:68) [76] 24. பொன் (III:1:1) (376) 25. மரகதம் (III:1:8) [383] 26. மலை (III:3:36) [512] 27. மூங்கில் (II:5:20) [296] 28. வண்டு (II:2:16) [251] 29.வாயு (I:1:81)[89] 30. விசிப்பு (III:2:56) [470] 31. விட்டுணு (I:1:43) [51]
அரிகள் - ► சத்துரு (I:2:72) [187]
அரிச்சந்திரன் - ► சக்கரராசர் (I:2:35) [150]
அரிசந்தனம் - ► ஐந்தாரு (II:5:1) [277]
அரிசனம் - ► மஞ்சள் (II:5:73) [349]
அரிசி - 1. அரி 2. ஆமம் 3 தண்டுலம் (II:5 76) [352]; ► முத்துட்பருப்பு (II:5.97) [373]
அரிசிமஞ்சள்தோய்த்துஅணிவது - அச்சுதம் (III:1:16) [391]
அரிட்டம் - ► 1. கள் (III:1·36) [411] 2. காக்கை (II:2:6) [241] 3. வேம்பு (II:5:25) [301]
அரித்திராபம் - ► பொன்னிறம் (IV:4:23) [788]
அரிதம் - ► 1. திசை (II:3:34) [510] 2. பசுமை நிறம் (IV:4:23) [788]
அரிதல் - ► அறுத்தல் (IV:3:68) [756]
அரிதாரம் - 1. ஆலம் 2. ஆலம்பி 3 கோதந்தம் 4 தாளகம் 5. பழுப்பு 6. பிஞ்சனம் 7 பீதகி (III:1:21) [396]
அரிது - ► இன்மை (IV:1:20) [622]
அரிமேதம் - ► வேல் (II:5:48) [324]
அரியகம் - ► சிலம்பு (III:2:20) [434]
அரியமா - ► சூரியன் (I:1:87) [95]
அரியல் - ► 1. கள் (III:1·36) [411] 2. செடி (III.3:43) [519]
அரியன் - ► சிவன் (I.1:10) [18]
அரில் - ► 1. குற்றம் (IV:1:33) [635] 2 கோபம் (IV:1:35) [637] 3. பிணக்கு (IV:1:26) [628]
அரிவாள் - 1. குயம் 2. கொடுவாள் 3 புள்ளம் (III:2·3) [417]
அரிவை - ► 1. பருவப்பெண் (I:2:3) [118] 2. பெண் (I:2:2) [117]
அரீதகி - ► கடு (II:5:44) [320]
அருக்கண் - ► 1. ஏழிசைக்கோ (IV:2:31) [681] 2. சூரியன் (I:1:84) [92]
அருக்கர்பன்னிருவர் (துவாதசாதித்தர்) - 1 அஞ்சன் 2. இந்திரன் 3. சவித்தா 4. தாதா 5. தொட்டா (துவட்டா) 6. பகன் 7. பரிச்சனி 8. பூடா 9. மித்திரன் 10. வருணன் 11. விட்டுணு 12. விவச்சுவான் (I:1:58) [66]; ► முப்பத்துமூன்று தேவர் (I:1:56) [64]

அருக்கு - ► எருக்கு (II:5:37) [313]
அருகல் - ► குறைவு (IV:4:11) [776]
அருச்சுனம் - ► 1. மருது (II:5:19) [295] 2. வெண்மை (IV:4:20 [785]
அருச்சுனன் - ► விசயன் (I:2:30 [145]
அருணகிரிக்கு அருள்வோன் - ► சுப்ரமண்யன் (I:1:23) [31]
அருணம் - ► 1. ஆடு (II:1:19) [217] 2. எலுமிச்சம் (II:5:6) [282] 3. சிவப்பு (IV:4:21) [786] 4. மான் (II:1:26) [224]
அருணன் -► 1. சூரியன் (I:1:84) [92] 2. புதன் (I:1:91) [99]
அருணன்முன்னோன் -► வாயு (I:1:81) [89]
அருத்தம் - ► பொருள் (III:1:7) [382]
அருந்ததி - 1. சாலி 2. வசிட்டன்தாரம் 3. வடமீன் (I:1:104) [112]
அருந்தல் - ► உண்டல் (IV:3:5) [693]
அருந்துதன் -► வாதிப்போன் (I:2:61) [176]
அருப்பம் -► 1. ஊர் (III:3:9) [485] 2.கைப் பற்றக்கூடாதநிலம் (III:3:64) [540] 3. மா (III:1:31) [406] 4. மோர் (III:1:32) [407]
அருப்பலம் - ► அனிச்சம் (II:5:17) [293]
அரும்பு - 1. கலிகை 2. கோரகை 3. சாலகம் 4. நனை 5. போகில் 6. முகிழ் 7. முகை 8. மொக்குள் 9. மொட்டு (II:5:91) [367]
அருமைசெய்தல் - பேராண்மை (IV:3:53) [741]
அருவருப்பு - 1. குச்சிதம் 2. பயிர்ப்பு (IV:1:47) [649]
அருவி - ► 1. புன்பயிர்க்கோல் (II:5:77) [353] 2. வரைநீர் (I:1:73) [81]
அருள் - ► 1. கருணை (IV:1:6) [608] 2. பார்ப்பதி (I:1.11) [19]
அருள்வடிவன் - ► சிவன் (I:1:2) [10]
அருளல் - ► கொடை (IV:3:15) [703]
அருளுள்ளோன் - காருண்ணியன் (I:2:54) [169]
அரேணுகம் - 1. ஏணகம் 2. கபிலை (III:1:20) [395]
அரை - கால்இரண்டுகொண்டது (IV:4:33) [798]; ► இடை (III:5:17) [580]
அரைஇரண்டுகொண்டது -► ஏகம் (IV:4:33) [798]
அரைகல் - ► அம்மி (III:2:35) [448]
அரைஞாண் - இரதனம் (III:2:18) [432]
அரைத்தல் - பிட்டுவம் (IV:3:55) [743]
அரைப்பட்டிகை - மனா (III:2:21) [435]
அரைப்புறம் - 1. இடுப்பு 2. குறுக்கு (III:5:18) [581]
அரோ - ► அசை (IV:2:26) [676]
அல் - ► இரவு (III:4:7) [553]
அல்கல் - ► 1. குறைவு (IV:4:11) [776] 2. நாள் (III:4:7) [553] 3. பொருந்துதல் (IV:3:51) [739] 4. வசித்தல் (IV:3:47) [735]
அல்குல் - 1. கடிதடம் 2. நிதம்பம் (III:5:17) [580]
அல்லகண்டம் - ► துன்பம் (IV:1:28) [630]
அல்லம் - ► இஞ்சி (II:5:79) [355]
அல்லல் - ► துன்பம் (IV:1:28) [630]
அல்லி - 1. ஆம்பல் 2. கயிரவம் 3. குமுதம் (II:5:86) [362]; ► உட்பூவிதழ் (II:5:92) [368]
அல்லியம் - ► மால்நடம் (IV:3:35) [723]
அல்லோன் - ► சந்திரன் (I:1:88) [96]
அலக்கண் - ► துன்பம் (IV:1:27) [629]
அலகு -► 1. சோகி (II:4:7) [273] 2. புள்ளு மூக்கு (II:2:21) [256]
அலகை - ► பேய் (I:1:64) [72]
அலங்கரித்தல் - 1. அணிதல் 2. ஒப்பனை 3. கைசெய்தல் 4. புனைதல் 5. பூசல் 6. மண்ணல் 7. வனைதல் 8. வேய்தல் (IV:3:26) [714]
அலங்கல் - ► 1. குளம் (III:3:56) [532] 2. தளிர் (II:5:90) [366] 3. பிரகாசம் (IV:4:18) [783] 4. மாலை (III:2:61) [475]
அலங்காரம் - ► அழகு (IV:4:25) [790]
அலசந்தி - ► பயறு (II:5:62] [338]
அலட்டல் -► ஒருசொல்லைப்பலகாலும் சொல்லல் (IV:2:18) [668]
அலத்தகம் - ► செம்பஞ்சு (III:1:16) [391]
அலந்தை - ► குளம் (III:3:56) [532]
அலப்பு - ► ஆசை (IV:1:30) [632]
அலம் - ► கலப்பை (III:2:56) [470]
அலம்பல் - ► 1. ஒலி (IV:2:33) [683] 2. கழுவல் (IV:3:55) [743]
அலம்புடை - ► நாடிபத்தனுள்ஒன்று (III:5:11) [574]
அலம்வருதல் -► சுழலுதல் (IV:3:61) [749]
அலர் - ► 1. நிந்தை (IV:2:4) [654] 2. பூ (II:5:91) [367]
அலர்தல் - ► விரிதல் (IV:3:73) [761]
அலரி - 1. கணவீரம் 2. கரவீரம் 3. கவிரம் (II:5:41) [317]; ► சூரியன் (I:1:87) [95]
அலவன் - ► 1. சந்திரன் (I:1:89) [97] 2. நண்டு (II:4:8) [274] 3. பூனை (II:1:25) [223]
அலாபம் - ► கேடு (IV:1:29) [631]
அலாயுதன் - ► பலதேவன் (I:1:44) [52]

அலி - ► 1. பேடு (I:2:4) [119] 2. விரிசு (II:5:50) [326]

அலிமரம் - 1. கொடுவல் 2. வெளிறு (II:5:94) [370]

அலேகம் - ► எழுதாச்சுவடி (III:2:49) [463]

அலை - ► நீர்த்திரை (I:1:73) [81]

அலைதல் - ► வெளிக்கோள்(IV:3:45)[733]

அலைப்பு - ► கூத்துவிகற்பு (IV:3:37) [725]

அலைவு - ► நடுக்கம் (IV:1:32) [634]

அவ்விடம் - 1. அதா 2. அவண் 3. ஆங்கு 4. ஆண்டு 5. உம்பர் 6. உவண் (III:3:69) [545]

அவ்வியதம் - ► ஓரிலைத்தாமரை (II:5:65) [341]

அவ்வியம் - ► அழுக்காறு (IV:1:13) [615]

அவ்வை - ► 1. தாய் (I:2:75) [190] 2. நோற் பாள் (I:2:67) [182]

அவண் - ► அவ்விடம் (III:2:69) [545]

அவத்தை - பற்றும்ஒன்றைஇட்டுஒன்றைப் பற்றுதல் (பற்றிநின்றதைக்கைவிட்டு வேறொன்றைப் பற்றுவது) (IV:3:12) [700]

அவத்தைஇரண்டு - 1. காரணஅவத்தை 2. காரியஅவத்தை (IV:3:8) [696]

அவத்தைஇருப்பத்துநான்கு - 1. காரண அவத்தைநான்கு 2. காரியஅவத்தை இருபது (IV:3:11) [699]

அவதாரம் - ► 1. இறங்கல் (IV:3:42) [730] 2. நீர் (I:1:70) [78] 3. வெண்மை (IV:4:20) [785]

அவந்தி - உஞ்சை (III:3:29) [505]

அவந்திகை - ► கிளி (II:2:3) [238]

அவம் - ► பயனிலாமை (IV:1.43) [645]

அவரை - 1. சிக்கிடி 2. சிம்பை 3. நகுலி 4 நிட்பாவம் (II:5:61) [337]

அவரோணம் - ► இறங்கல் (IV:3:42) [730]

அவல் - ► 1. சிற்றூண் (III:1:30) [405] 2. பள்ளம் (III:3:59) [535]

அவன்றல் - ► மரணம் (IV:3:29) [717]

அவனி - ► பூமி (III:3:4) [480]

அவனியைப்புணர்ந்தோன் - ► விட்டுணு (I:1:38) [46]

அவா - ► ஆசை (IV:1:30) [632]

அவாவின்மை - ► வெறுப்பு (IV:1:24) [626]

அவி - ► 1. தேவர்உணவு (II:1:26) [401] 2. நெய் (III:1:33) [408]

அவிட்டம் - 1. ஆவணி 2. காகம் 3. புள் 4. வசுநாள் (1:1:102) [110]

அவிடதம் - ► மருந்து (II:5:98) [374]

அவிடி - ► திரைப்படாம் (III:2:40) [454]

அவித்தல் - ► வேதல் (IV:3:50) [738]

அவிமுத்தம் - ► காசி (III:3:29) [505]

அவிர்தல் - ► பிரகாசம் (IV:4:17) [782]

அவிழ்தல் - ► விரிதல் (IV:3:73) [761]

அவின் - 1. கம்பி 2. பேனம் 3. மோகி (III:1:18) [393]

அவுணர் - ► அசுரர் (I:1:65) [73]

அவுரி - நீலி (II:5:19) [295]

அவை - ► 1. கற்றோன் (I:2:8) [123]2. கூட்டம் (IV:4:5) [770]

அவைத்தல் - குற்றுதல் (குறுதல்) (IV:3:47) [735]

அவையவம் - ► சினை (III:5·39) [602]

அழகன் - உலோலன் (I:2:61) [176]

அழகு - 1. அணங்கு 2. அணி 3. அம் 4. அலங்காரம் 5. இராமம் 6. இலாவணம் 7. உலோலம் 8. எழில் 9. காந்தம் 10. காமர் 11. காரிகை 12. குழகு 13. சந்தம் 14. செவ்வி 15. சேடு 16. தகை 17. தாமம் 18. தொட்டி 19. நவ்வி 20. நன்கு 21. பூ 22. பொற்பு 23. பொன் 24. மஞ்சு 25. வாமம் 26. விடங்கம் (IV:4:25) [790]; 27. அந்தம் 28. ஆரி 29. ஏர் 30. கவின் 31. கோலம் 32. சித்(தி)ரம் 33. சுந்தரம் 34. சொக்கு 35. தளிமம் 36. தேசிகம் 37. நலம் 38. நோக்கு 39. பத்திரம் 40. பாங்கு 41. மணி 42. மயம் 43. மனோகரம் 44. மாதர் 45. மாமை 46. மாழை 47. யாணர் 48. வனப்பு 49. விசித் திரம் 50. விந்தை (IV:4:26) [791]

அழல் (அழுதல்) - 1. உரோதனம் 2. கரைவு 3. கலுழ்தல் 4. விம்மல் (IV:3:47) [735]; ► 1. தீ (I:1:66) [74] 2. பைங்கூழ்பிடியாப் புன்செய் (III:3:64) [540] 3. வெப்பு (IV:4:30) [795]

அழலாடி - ► சிவன் (I:1:7) [15]

அழனம் - ► 1. எலும்பு (III:5.31) [594] 2. பிணம் (III:5:4) [567] 3. வெப்பு (IV.4:30) [795]

அழிகாடு - இளவல் (III·3:43) [519]

அழிஞ்சில் - 1. அங்கோலம் 2. செம்மரம் 3. சேய் (II:5:9) [285]

அழிவின்மை - 1. கன்னி 2. குமரி 3. கோணை 4. சத்து (IV:1:10) [612]

அழுக்காறு - ► 1. அசூயை 2. அவ்வியம் 3. மனக் கோண் 4. மாற்சரியம் (IV:1:13) [615]

அழுக்கு - ► 1. குற்றம் (IV:1:33) [635] 2. மெய்ம்மாசு (III:5:35) [598]

அழுகண்ணி - உருதந்தி (II:5:53) [329]

அழுங்கல் - ► 1. இரங்கல் (IV:3:25) [713] 2. ஒலி (IV:2:33) [683]

அழுத்தல் - ► பதித்தல் (IV:3:33) [721]
அழுந்து - ► ஆழம் (I:1:74) [82]
அழுவம் - ► 1. நாடு (III:3:8) [484] 2. விசாலம் (IV:4:14) [779]
அழைத்தல் - 1. அகவல் 2. ஆகருடணம் 3. இகுத்தல் 4. கரைதல் 5. கூவல் 6. கேதல் 7. விளிப்பு (IV:2:20) [670]
அள்ளல் - ► சேறு (III:3:60) [536]
அள்ளாட்டு - ► நடுக்கம் (IV:1:32) [634]
அள்ளு - ► பற்றிரும்பு (III:2:8) [422]
அளக்கர் - ► 1. உப்பளம் (III:3:53) [529] 2. கடல் (III:3:46) [522] 3. பூமி (III:3:4) [480]
அளக்கு - ► சித்திரை (I:1:100) [108]
அளக்குங்கால் - 1. அம்பணம் 2. கச்சம் 3. கால் 4. குளகம் 5. தூம்பு (III:2:30) [444]
அளகம் - ► 1. நீர் (I:1:69) [77] 2. மடவார் மயிர் (III:5:30) [593]
அளகு - ► 1. கார்த்திகை (I:1:96) [104] 2. பெண்பறவை (II:2:20) [255]
அளகேசன் - ► குபேரன் (I:1:80) [88]
அளகை - ► தனதன்ஊர் (III:3:28) [504]
அளப்பு - ► உபாயம் (IV:1:4) [606]
அளப்போர் - அளமர் (I:2:60) [175]
அளமர் - ► அளப்போர் (I:2:60) [175]
அளவிலான் - ► சிவன் (I:1:9) [17]
அளவுவகை - 1. எடுத்தல் 2. எண்ணல் 3. நீட்டல் 4. முகத்தல் (IV:4:32) [797]
அளற்கம் - ► தூதுவளை (II:5:55) [331]
அளறு - ► 1. சேறு (III:3:60) [536] 2. நரகம் (III:3:3) [479]
அளாவல் - ► கலப்பு (IV:3:74) [762]
அளி - ► 1. கருணை (IV:1:6) [608] 2. குளிர்ச்சி (IV:4:30) [795] 3. வண்டு (II:2:16) [251]
அளிகம் - ► நெற்றி (III:5:26) [589]
அளித்தல் - ► 1. செறித்தல் (IV:3:27) [715] 2. திதி (IV:3:3) [691]
அளிந்தம் - ► வழித்திண்ணை (III:3:17) [493]
அளிப்பு - ► கொடை (IV:3:15) [703]
அளை - ► 1. புடை (III:3:60) [536] 2. மோர் (III:1:32) [407]
அளைசல் - ► அசைதல் (IV:3:48) [736]
அற்கம் - ► நீர்க்காக்கை (II:2:7) [242]
அற்கரியான் - ► மன்மதன் (I:1:50) [58]
அற்சடை - ► கீழ்காய்நெல்லி (II:5:67) [343]
அற்பம் - ► கொஞ்சம் (IV:4:9) [774]
அற்பர் - ► சிறியோர் (I:2:63) [178]
அற்புதம் - ► 1. அதிசயம் (IV:1:41) [643] 2. கோடிகளின்பேர் (IV:4:360 [801] 3. பிரீதி (IV:1:42) [644]
அற்று - ► உவமானம் (IV:2:25) [675]
அறத்தாள் - ► பார்ப்பதி (I:1:16) [24]
அறப்புறம் - 1. சத்திரம் 2. சாலை 3. பள்ளி (III:3:25) [501]
அறல் - ► 1. அயாவுயிர்ப்பு (IV:3:77) [765] 2. கார்மணல் (III:3:58) [534] 3. செடி (III:3:43) [519] 4. நீர் (I:1:70) [78] 5. நீர்த்திரை (I:1:73) [81] 6. விறகு (III:1:24) [399]
அறவர் - ► இருடிமார் (I:2:5) [120]
அறன் - ► தருமம் (IV:1:7) [609]
அறிஞன் - ► 1. கற்றோன் (I:2:8) [123] 2. புதன் (I:1:91) [99]
அறிவிலாச்சென்மம் - திரியக்கு (III:5:1) [564]
அறிவிலான் - 1. அஞ்ஞை 2. அண்ணை 3. ஆதன் 4. இழுதை 5. ஏழை 6. சிதடன் 7. பேதை 8. மடன் 9. முழுமகன் 10. மூடன் (I:2:55) [170]
அறிவிலி (அறிவின்மை) - 1. அசேதனம் 2. அறிவிலி (IV:1:2) [604]
அறிவு - 1. உணர்வு 2. உரம் 3. சிதம் 4. சேதனம் 5. சைதன்(னி)யம் 6. ஞாபகம் 7. ஞானம் 8. தெருட்சி 9. புலன் 10. போதம் 11. மதி 12. மேதை 13. விவேகம் 14. விற்பனம் (IV:1:2) [604]
அறிவுத்திண்மை (அறிவுத்திட்பம்) - முதுக்குறைவு (IV:1:2) [604]
அறுகு - 1. தூர்வை 2. பதம் 3. மூதண்டம் 4. மேகாரி (II:5:49) [325]; ► ஆளி (II:1:1) [199]
அறுகுஅணிந்தோன் - ► சிவன் (I:1:4) [12]
அறுசுவை - 1. இனிமை 2. எரிப்பு 3. உப்பு 4. கசப்பு 5. துவர்ப்பு 6. புளிப்பு (IV:4:27) [792]
அறுத்தல் - 1. அரிதல் 2. ஈர்தல் 3. ஏதித்தல் 4. கொய்தல் 5. சேதித்தல் 6. சூலல் 7. விடுவாய் (IV:3:68) [756]
அறுதாலி - ► கைம்மை (I:2:67) [182]
அறுபதம் - ► வண்டு (II:2:16) [251]
அறுவாய் - ► கார்த்திகை (I:1:96) [104]
அறுவை - ► சீலை (III:2:37) [451]
அறை - ► 1. அடித்தல் (IV:3:33) [721] 2. வைப்பிருக்கை (III:3:14) [490]
மாம் ஒருநான்கு இட்டு இரண்டு ஐந்து ஐந்து நால் வர்க்கம் இட்டு
நாமதீபம் பகர்ந்தேன் நான்

3. தேவர் நரராம் இரண்டும் சீர்பெறும் நாற்கால் பறவை
ஊர்வன நீர்வாழ்வ நிலை ஓரைந்தும் - மேவு இயற்கை
செய்கை இடம் காலம் சினை ஐந்தும் நாற்குணமும்
எய்துவர்க்கம் நாற்படலத் தே

4. மனக்குணம் வாக்கின்குணமே மற்று உடலாற் செய்யும்
வினைக்குணம் இம்மூன்றும் உயிர்மேவும் - தனிப்பொருள்கட்கு
ஏய்ந்த குணமாகும் உயிரில் பொருள்களின் குணம்
ஒன்றாய்ந்த இவை நாற்குணங்கள் ஆம்

5. பல்வடிவு நாற்றம் இரண்டு ஐந்து வண்ணம் ஊறுஎட்டு
நல்ல சுவை ஆறு நான்கு அளவை - வல்லோர்
புகலும் உயிர்ப்பு இல்லாப் பொருட்குணங்கள் ஆகும்
பகர்படல வர்க்க முறை பார்

6. திண்பார் புகழ் நாம தீபம் ஓர் எண்ணூறு
வெண்பாவும் சொற்செறிவான் மெய்த்தளையின் - பண்புசில்பா
ஒற்றறுத்தல் ஆதிய கொண்டு ஓர்க சில்பாதம் தொடைகள்
பற்றும் வகையுளியாற் பார்

7. எந்தை பொதிகை நிகண்டு என்று ஓர் சொல் பல்பெயரே
தந்தனன் காண் பல்கூட்டம் சார் ஒருபேர் - முந்தியான்
பன்னும் தொகை நிகண்டிற் பார்க்க விரிவாம் அவைகள்
இன்ன சுருக்கத்து அடங்கா வே

8. பல்லாயிர நிகண்டில் பண்டிதர்கள் சொன்னபொருள்
எல்லாம் எளிதாய் இனிது உணரக் - கல்லிடையூர்
மன்னு சிவசுப்ரமணியன் கவிராசன்
பன்னுதமிழ் நாம தீபம்

I. உயர்திணைப் படலம்
1. தெய்வ வர்க்கம்

9. நந்தி பெம்மான் ஆலமர்ந்தோன் நம்பன் இறை சோதி செம்மல்
அந்திவண்ணண் தாணு நித்தன் ஆனந்தன் - இந்துஇனன்தீ
முக்கணான் ஐந்துமுகன் திகம்பரன் சடையன்
நக்கன் எண்டோளன் பிஞ்ஞகன் (1)

10. ஐந்தொழிலான் ஒன்பான் மூன்று ஐயைந்து மூர்த்தி சத்தி
யைந்தன் எழுத்தைந்தன் அருள்வடிவன் - சுந்தரற்குத்
தூதன் குபேரசிநேகன் சுருதி ஆகமங்கள்
ஓதினோன் எண் குணத்தினோன் (2)

11. மான் மழு கபாலம் சூலம் துடி தீயேந்தி நஞ்சு
தான் உண்டோன் கங்காளன் சாமி பித்தன் - ஞானி பரன்
ஆதி பங்கிற்பூணூலன் அண்ணல் சுகன் கயிலை
நாதன் வரன் யோகி நடன் (3)

12. நற்கடுக்கை சிங்கநகம் ஆமையோடு அறுகு ஆர்
கொக்கிறகு தும்பை பன்றிக்கோடு மத்தம் - அக்கு எருக்கு
வன்னி பாம்பு என்பு வில்வம் மால்கண் பிறை கரந்தை
துன்னுகங்கை மீன்கண் அணிந்தோன் (4)

13. பார்தேர் பரிவேதம் பாகன் அயன் மால்கணை அக்
கூர்தீ கணைவிசைகால் கோதண்டம் - மேருவரை
நாண்அரவம் ஆழி மதிஞாயிறு பால் வேலை அம்புத்
தூணியும் கொண்டோன் ஈச்சுரன் (5)

14. காலன் வேள் ஆனை புலி காய்ந்தோன் மறைமுதலி
பால் விடையூர்ந்தோன் உயர்த்தோன் பாண்டரங்கன் -தோலுடையன்
தேவதேவன் வாமதேவன் மாதேவன் அத்தன்
காவலன் பிரான் அங்கணன் (6)

15. அழல் மன்று ஈமத்தினில் பேயோடாடி ஈசன்
தழைவிமலன் காளகண்டன் சங்கக் - குழையன் உமை
பங்கன் பசுபதி பிச்சாடனன் பூதப்படையோன்
சங்கரன் உருத்திரனே சம்பு (7)

16. நிட்களன் நின்னாமன் நிரஞ்சனன் நிரந்தரனே
நிர்க்குணன் சாட்சாத்காரன் நிர்ப்பேதன் - நிர்ச்சங்கன்
அத்துவிதன் பூரணன் அகண்டன் அசலன் சூக்கன்
முத்தன் அனுபமன் முதல் (8)

17. கண்ணுதல் புராரி சித்தன் கத்தன் அயன் மாற்கும் எட்டான்
எண்ணெண் விளையாட்டான் ஈசானன் அரன் - வெண்ணீற்றன்
தந்தி குகன் தாதை சருவஞ்ஞன் அன்னை தந்தை
அந்தம் பிறப்பு அளவு இலான் (9)

18. அரியன் பெருமான் அன்பர்க்குஎளியான் சாமப்
பிரியன் அட்டமூர்த்தி பினாகி - பரமன் மன
வாக்கின் எட்டான் தத்துவாதீதன் மலவயிரி
சேய்க்கறியுண்டோனும் சிவன் (10)

19. சத்தி பரை காளி உமை சண்டிகை பவானிசிவை
உத்தமி மால்தங்கை உலகீன்றாள் - அத்தை அருள்
வாலை புவனை மனோன்மணி சடாதாரி
சூலி மலைமான் ஈச்சுரி (11)

20. வீரி கன்னி வல்லணங்கு வேதாளி கங்காளி
ஆரணி சாமுண்டி அயிராணி ஐயை - சூரி அம்பை
மாலினி நீலி மதுபதி சிங்காரூடி
பாலைநிலத்தாள் சாம்பவி (12)

21. சக்கரம் பாசாங்குசம் வாள் சத்தி வரத அபயங்கள்
இக்குவில் பூவாளி கொண்டாள் எண்டோளி - முக்கண்ணி
ஆயி திரிபுரை தாய் அம்பணத்தியே காத்தி
யாயினி காமக்கோட்டத்தாள் (13)

22. அந்தரி மாதங்கி அம்பிகை திகம்பரையே
சுந்தரி யாழ் ஏடு சுகம் தரித்தாள் - விந்தை சிவ
காமி விமலை கவுரி பகவதி
யாமளை நாராயணி மாயை (14)

23. பஞ்சமி கல்யாணி பயிரவி வல்லபி
வஞ்சனி ஆனந்தி இமாவன்புதல்வி - அஞ்சனி
மேனைமகள் ஆவரணி விட்சேபி யோகினி
யானைமுகன் செவ்வேள் அனை (15)

24. ஆரியை வாமி மயிடாரி அபிராமி துர்க்கை
தாருகசங்காரி லளிதை விசையை - நாரி
அமரி கவுமாரி அறத்தாள் சவுரி தேவி
விமரிசையும் பார்ப்பதி பேர் விள்ளு (16)

25. இப்பெயரில் காளி துர்க்கை ஆதிசத்திகட்கு இசையும்
அப்பெயர் கொள்வாள் மூதணங்கு கொற்றி - மெய்ப்பான
மாரி வடுகி வடுகன்தாய் மோடியுடன்
சூரி இவை காடுகாள் சொல் (17)

26. தந்திமுகன் பாசம் அங்குசம் கனி கொம்பு ஏந்தி ஒரு
தந்தன் நால்வாயன் சடையன்முன்னோன் - கந்தனுக்கு
மூத்தோன் ஆகு ஊர்ந்து உயர்த்தோன் முக்கண்ணான் மால்சாபம்
தீர்த்தோன் சிவன் கவுரி சேய் (18)

27. பூதரூபத்தன் இலம்போதரன் விநாயகனே
பூதமிவர்ந்தோன் புகர்முகத்தோன் - ஓதும் முறக்
கன்னன் விக்கினேசன் கயாரி குடிலாசனத்தான்
செந்நிறத்தான் ஐங்கரத்தினான் (19)

28. நாலிதழ்க்கஞ்சன் போசனப்பிரியன் வல்லவை மன்
மூலமுதல் ஆமைமுதுகுஒடுஅணிந்தோன் - கால் குறியன்
வக்கிரதுண்டன் காகமாகினோன் பொன்னிதந்தோன்
அக்கணபதிக்கு உள பேராம் (20)

29. கந்தன் முருகன் குமரன் கார்த்திகேயன் கவுரி
மைந்தன் காங்கேயன் மயிலூர்தி சிவன் - மைந்தன் வள்ளி
தெய்வானை மன் புலவன் செட்டி குகன் வீரர் முன்னோன்
வைவேலவன் குறிஞ்சிமன் (21)

30. ஈசன் அயன் கும்பன் இவர் குரு சுரம்தணித்தோன்
வாசவன் இந்த்ராணி திரு மால் மருகோன் - பேசு உருத்தி
ராயுதன் தந்திக்கு இளையான் ஆறுதலன் தேவர்சிறை
காய்பவன் சுவாமி குழகன் (22)

31. பன்றிதிறலட்டோன் பவளவடிவன் சமணை
வென்றவன் கற்கி விறலழிப்போன் - குன்றுஎறிந்து
கீரனை மீட்டோன் அருணகிரிக்கு அருள்வோன்
ஓர்புலவன்மேல் பாடினோன் (23)

32. சண்முகன் விசாகன் சரவணபவன் பதினெண்
கண்ணன் ஈராறுபுயம் கை செவியான் - எண்ணுவெட்சி
காந்தள் குரா நீலம் கடம்பு அணிவோன் வேள் வேடன்
சேந்தன் கோழிக்கொடியோன் சேய் (24)

33. தாருகன் சிங்கானனன் சூர் சாரும் அன்றில்வெற்பும் அட்டோன்
நாரதசிநேகன் விண்ணூர்நாட்டினோன் - சேரும் உம்பர்
சேனைமன் வேதாவைச்சிறையிட்டோன் ஆடூர்ந்தோன்
ஆன சுப்ரமண்யன் பேராம் (25)

34. வேல் சரம் வாள் தண்டு மழு மெய்க்கொடியும் கந்தன் வலப்
பால் அமர்வ வில் பரிசை பற்று ஈட்டி - சூல் குலிசம்
அங்குசம் வாமத்துஆம் தாமம் அபயம் வரதம் அணி
பங்கயமும் முன்குறைத்துப் பன்னு (26)

35. வாகுவுடன் கேசரி மயேந்திரன் மயேசுரனே
ஆகும் புரந்தரனே அந்தகனே - சேகரக்கன்
மார்த்தாண்டன் தீரனும் பின்வைத்து முன்புவீரம்அதைச்
சேர்த்து நவவீரர் பெயர் செப்பு (27)

36. அங்கிமுகன் வச்சிரவாகு ஆளிமுகத்தோன் வீர
சிங்கன் இரவிப்பகை தன்மப்பகைவன் - இங்குஇவரை
அட்டோன் தகர் பிடித்தோன் பாசுரக்கோல் அந்தகன் மேற்
றொட்டோன் சூரரை அழித்தோன் (28)

37. காளியை வென்றோன் அரன் மாணிக்கமின் சேய் கார்கடிந்தோன்
வாளினன் செவ்வேட்கிளையவன் தூதன் - நீல் இலக்கத்
தெண்மர் முன்னவன் சயந்தனைத்தெளித்தோன் உந்திவந்தோன்
வண்ணஞ்சேர்ந்தோன் வீரவாகு (29)

38. ஆயிரம் முகம் தலை ஈராயிரம் கை தோள் செவி
மூவாயிரங்கண்ணுள்ளோன் மாலாற்றலட்டோன் - பாய்திகிரி
நுங்கினான் சார்ங்கமட்டான் தண்டழித்தான் உம்பர்களை
அங்கொரு நாள் கொன்று எழுப்பினான் (30)

39. இந்துவைத்தேய்த்தான் பகன்கண் தீக்கரம்ஏழ்நாக்கு இரவி
தந்தம்அழித்தோன் பிரம சாரதியான் - உந்து பொன்
தேரூர்தி தக்கன்சென்னி அறுத்தோன் மகசங்காரி அந்தச்
சோரனுக்கு மைத்தலை வைத்தோன் (31)

40. கட்கன் உமைசேய் சிவன்தீக்கண்உதித்தோன் காளிநண்பன்
உக்கிரன் செஞ்சடையான் ஓர் எண்கால் - பக்கிவண்ணன்
நாரசிங்கன் வீறழித்தோன் பானுகம்பனைப் பயந்தோன்
வீரபத்திரன் பேராமே (32)

41. சித்தன் வடுகன் குமரன் பிள்ளை அயன்சென்னிகொய்தோன்
முத்தன் நாயூர்தி முக்கணன் காரி - மத்த கயத்
தோலுரித்தவன் கேத்ரபாலன் கரும்பரியான்
சூலன் வயிரவன் பேர் சொல் (33)

42. வெள்ளிவரைகாப்போன் விடைமுகன் பூதத்தலைவன்
தெள்ளும் சுதேதைமன் சிலாதரன்சேய் - விள்ளரிய
வேதாகமக்குரவன் வேத்திரக்கையான் ஏழும்
ஆதி நந்திகேச்சுரனுக்காம் (34)

43. காரி சண்டு தண்டு அணிந்தோன் கையன் ஐயன் மாலரன்சேய்
ஆரியன் பச்சைப்பரி வெள்ளானை உள்ளோன் - பூரனை
புட்கலை மன் யோகி கடல்வண்ணன் நெய்தல்பூண்டோன்
கோழிக்கொடியோன் எண்கரன் சாத்தன் (35)

44. வாமன் இராமன் பலதேவன் பரசன் கிட்டிணன் மீன்
கூர்மம் நரசிங்கம் வராகம் குதிரை - யாம் வடிவன்
விண்டு ஆயிரநாமன் வேலை பாம்பு ஆல் கோலின்
கண்துயில்வோன் நேமி செங்கணான் (36)

45. பார் உண்டு அளந்து இடந்தோன் பச்சை கரியோன் விசைய
சாரதி கோபாலன் அச்சுதன் பிரமன் - மாரன் அத்தன்
கோசலை யசோதை நந்தகோன் வசுதேவன் புதல்வன்
தாசரதி தேவகி மைந்தன் (37)

46. பொன் அவனி சீதை எண்மர் ஆய்ச்சியரையும் புணர்ந்தோன்
பின் உபேந்திரன் பெருமாள் பீதாம்பரன் - முகுந்தன்
கண்ணன் தாமோதரன் நாற்கையன் கோவிந்தன் முகில்
வண்ணன் புருடோத்தமன் (38)

47. மாதவன் ஞானத்துயிலோன் வைகுண்டன் கேசவன் மால்
சீதரன் நீண்டோன் காவல்தேவன் ஐவர் - தூதன் வில் வாள்
ஆழி சங்கன் தண்டாம் பஞ்சாயுதன் புள் ஊர்ந்து உயர்த்தோன்
வாழ் பதுமநாபன் வலவன் (39)

48. பொன்னன் திரிசிரத்தோன் பொற்கண்ணன் வாலிகும்ப
கன்னன் விராதன் காலகேயர் கரன் - பின் வாணன்
கஞ்சன் மூலன் சோமுகன் கயிடவன் கவந்தன்
வஞ்சமான் தந்தவக்கிரன் (40)

49. மாலி சிசுபாலன் இலங்கேசன் மது தாடகை
சுமாலி முரன் துந்துமியே தூடணன் சாத் - தூலியையும்
வென்றோன் புள்வாய்கீண்டோன் வெம்பேய்முலையோடு உயிர்
தின்றோன் மலைக்குடை செய்தோன் (41)

50. வண்டுருவன் சோரன் மருதிடந்தோன் காகுத்தன்
பண்டியட்டோன் சாலமொய்தோன் பாம்பாடி - பெண்டுருவன்
கன்றாற்கனியெறிந்தோன் சீதைசிறை கடிந்தோன்
மன் பூபாரம் தவிர்த்தவன் (42)

51. நாரணன் நாராயணன் சுரர்க்குஅமுதம் நல்கினோன்
வாரி கடைந்தோன் வரம்பிட்டோன் அடைத்தோன் - காரிஅரி
மாயன் துழாய் மணி மறுப்புயன் இராகவனோடு
ஆயன் இவை விட்டுணுப் பேராம் (43)

52. நீலாம்பரன் முசலி வெள்ளை அனந்தன் காம
பாலன் அலாயுதன் பனந்தாமன் - சாலும் ஓர்
குண்டலன் இரேபதிமன் கூறு பலபத்திரனே
திண் பலதேவன் சிறப்புப் பேர் (44)

53. இந்திரை மா செல்வி இளையாள் இரமை செய்யாள் பொன்
செந்திரு பூமான் கமலை சீதேவி - விந்தைமகள்
பாற்கடல்வந்தாள் பொறி மால்பாரி மதன்தாய் ஆக்கம்
தாக்கணங்கு இலக்குமி பேர்தான் (45)

54. அன்னம் உயர்த்து ஊர்ந்தோன் அனந்தன் மால்சேய் வாணி
மன்னன் மறையோன் மலரோன் மண்படைத்தோன் - துன்னும்
பிதாமகன் எண்கண்ணன் பிதா சதானந்தன்
விதாதா கமலன் விதி (46)

55. சம்பு பரமேட்டி சதுமுகன் வேதா குரவன்
பம்பும் இரணியகெர்ப்பன் சூதன் - நம்பும்
வரன் அயன் ஞானி இறை வானோர்முதுவன்
பிரமன் தனக்குரிய பேர் (47)

56. பாமகள் பிராமி அயன்பாரி வெண்பூமான் இசைமான்
நாமகள் வாக்காள் வாணி ஞானி வெள்ளை - யாம் உருவாள்
பாரதி சாவித்திரி காயத்திரி பூரப்பரியாள்
ஈரேழ் சரசோதி யே (48)

57. கந்தர்ப்பன் வேள் வசந்தன் காமன் மதன் மால் பூமான்
மைந்தன் அனங்கன் மதுசகனே - சிந்துவண்ணன்
அங்கசன் மனோபு சம்பராரி சித்தசன் மோகன்
தங்கு இரதிமன் மாரன் தான் (49)

58. அற்கரி காற்றேர் கிளிமா ஆழிமுரசு இந்துக்குடை
பொற்குயில்சின்னன் தாழம்பூவாள் - மீனக்கொடி பெண்
தானை அன்றில்காளம் மகிழ்தார் மல்லிகைபடிக்கம்
வேனில்விழா சோலைபடைவீடு (50)

59. வாகை மரைத்தாள் கரும்பு வண்கமுகம்பாளை அப்பூ
வாகிய வில் அம்புயநூல் ஆய்ந்த பிச்சி - மோக வண்டு
வெட்டிவேர் மாந்தளிர் நாண் விந்தம் மா பிண்டி முல்லை
அட்டிடு நீலங்கோல் அவற்கு (51)

60. ஆகண்டலன் மால் அரி புருகூதன் புலவன்
போகி புரந்தரன் புரோகிதனே - மேகமுடன்
உச்சிரவா வெள்ளானை ஊர்ந்தோன் இடிக்கொடியன்
வச்சிரன் விண்கோ வாசவன் (52)

61. ஆயிரங்கண்ணன் கரியோன் அண்டர்கோன் கோசிகனே
மாய்வுஇல் சசிமன் மருத்துவன் மகவான் - தோய்பாக
சாதனன் சுனாசி சக்கரன் சதமகன் மருத
நாதன் வலாரி இந்திரன் (53)

62. இந்திரன்தேவி இந்திராணி அயிராணி சசி
சுந்தரி புலோமிசையாம் சொல் சயந்தன் - மைந்தனாம்
தேவு அணங்கு சூர் கடவுள் தெய்வதம் புத்தேள் இயவுள்
ஆவன தெய்வப் பொதுப் பேராம் (54)

63. விண்ணவர் இலேகர் அண்டர் மேனிலர் பட்டாரகரே
பண்ணவர் ஆதித்தர் பகவர் சுரர் - நண்அமரர்
புங்கவர் உம்பர் புலவர் இமையோர் விபுதர்
அங்கு அமுதுண்டோர் தேவராம் (55)

64. உருத்திரர் பன்னொருவர் ஓர் பன்னிருவர்
அருக்கர் வசுக்கள் எண்மர் அன்றி - மருத்துவர் என்று
ஆன அசுவனிகள் அவ்விருவர் ஆகஇவர்
வானின் முப்பான் மூன்று தேவர் (56)

65. சிவன் உருத்திரன் தேவதேவன் கபாலி
சவுமியன் பவோற்பவன் மாதேவன் - கவர் நீல
லோகிதன் வீமன் விசையன் சங்கரன் உருத்திரர்கள்
ஏகாதசர் ஆம் இவர் (57)

66. ஆன்ற வருணன் பூடா அஞ்சனுடன் தாதாவே
தோன்றும் இந்திரன் சவிதா சொல் விவச்சு - வான் பகனே
தொட்ட பரிச்சனியே தொட்டாவே மித்திரனே
விட்டுணு ஈராறு அருக்கர் மெய் (58)

67. துருவன் பிரத்யூடன் சோமன் அனிலன்
தரன் அனலன் ஆபத்துவனே - பிரபாவன்
எண்வசுக்கள் ஆகும் இருமருத்தர் தத்திரனே
விண்ணுறு நாதத்தியனாமே (59)

68. தேவர் முனிவோர் இயக்கர் சித்தர் விஞ்சையோர் கருடர்
பூஅசுரர் கிம்புருடர் பூதர் படர் - மாஅரக்கர்
நாகர் உடு கந்திருவர் கின்னரர் பேய் நற்போகர்
மாகர் பதினெண்கண நாமம் (60)

69. ஆகும் அரமான் அரம்பை அண்டர்பெண் இடாகினியே
சாகினி சம்மினி மூத்தாள் முகடி - காகமுயர்
சேட்டை கரவூர்த்தி தெளவை சீர்கேடி ஓர்சடையாள்
கேட்டை இவை மூதேவிக்கே (61)

70. மின்னு வித்தியாதரரே விஞ்சையர் கோசரரே
தன்னிகரில் சேடியராம் சாதியொன்றே - கின்னரர்கள்
கந்திருவர் கிம்புருடர் யாழ் பயில்வால் பாராள்வால்
தம் திறலினால் கண பேதம் (62)

71. போக நிலத்து இன்புறுவோர் போகர் விண்ணில் சஞ்சரிப்போர்
மாகர் சுரர்ஏவல் செய்வோர் வன்படராம் - ஏகுகுறள்
சாதகம் கிருத்திமம் சாதம் பாரிடம் கூளி
பூதம் பிரேதகமும் போற்று (63)

72. பாசம் குணலை குணபாசி குணபம் குணங்கு
வீசுஅலகை அண்ணை வியந்தரம் - பசாசு கடி
வேதாளம் சோகு வெறி கிரகம் சங்கை மயல்
தீதுஆர் பேயாம் கழுதும் செப்பு (64)

73. அந்தரத்தார்க்கொன்னார் அவுணர் தகுவர் திதி
மைந்தர் தயித்தியராம் வாள்அசுரர் - முந்துஅரக்கர்
நீலர் நிருதர் நிசாசரர் இராக்கதரே
சால கடங்கடராம் தான் (65)

74. சோதி எழுநா அரி தீ தூமகேது அங்கி அனல்
சாதவேதா கனல் சேர்ந்தார்க்கொல்லி - மோது எரி
ஆடூர்தி தழல் வன்னி உதாசனனே வாயுசகன்
ஆரல் வசு தேயு அழல் (66)

75. தகனன் முளரி தனஞ்சயன் சுவாலன்
சிகி சுடர் தென்கீழ்த்திசையோன் - ஞெகிழி சித்ர
பானு தபனன் நெருப்பு அங்காரகன் சுசி என்று
ஊனமில் அக்கினிப் பேர் ஓது (67)

76. தீபகம் தீபம் தீபிகை விளக்காம் காட்டுத்தீ
தாவகம் விண்கொள்ளி உற்கை குய் தூபம் - ஆவி அரி
தூமம் புகை பெண் சுதை சுவாகா வடவை
யாம் மடங்கல் ஊழிஅனல் (68)

77. அனல்நடை சுவாலை பொறியாம் சுடர் புலிங்கம்
கனவிரதம் நாரம் கவந்தம் - புனல் முகிற்பூ
சீவனம் கீலாலம் நீர் சிந்து உதகம் வாரி பயம்
கோ அளகம் கார் அங்குசம் (69)

78. அம்பு அப்பு ஆலம் சலிலம் அம் கமலம் நீரம் அறல்
கம் புட்கரம் வருணம் காண்டம் அயம் - சம்பரம் வார்
அம்புயம் பானீயம் அவதாரம் வனம் பாணி அமு
தம் புவனம் தோயம் சலம் (70)

79. தெய்வப்புனல் தீர்த்தம் தேவதைகட்காட்டுநீர்
கொய்மஞ்சனம் கடாயம் குடிநீர் - பெய்யும் மருந்
திட்டு வற்றுநீர் சாறு இரதம் இலைஆதியின் நீர்
விட்ட திராவகம் வேர்நீர் (71)

80. நீர்நுரை பேனம் பெருக்கு நீத்தம் பிரவாகம்
வாரி பிரளயமும் வெள்ளமும்ஆம் - சேர் மொக்குள்
கொப்புள் புற்புதம் குமிழி கோலம் நீரோட்டமாம்
அப்பின்சுழி உந்தியாம் (72)

81. திரை அலை தரங்கம் அறல் சீகரம் கல்லோலம்
வரைநீர் அருவி உவகை - உரை திவலை
தூவல் உறை ஆலி துமி சீகரமும் நீர்த்துளிப் பேர்
ஓவில் உவர்நீர் உறை (73)

82. குண்டு அழுந்து அகாதம் கெம்பீரம் கயம் ஆழம்
தண் தெளிநீரின் பேர் சலசலம் ஆம் - திண் கலங்கல்
நீர் கலுழி ஆவிலமாம் நீர்இறைவன் பாசன்
மீனூர்தி நதிகேள்வன் வருணன் (74)

83. கொண்டல் முகில் அப்பிரம் கொண்மூ குயில் பயோதரம் செல்
விண்டு எழிலி அம்புதம் விசும்பு மங்குல் - ஒண்புயல் வான்
தாராதரம் சீமூதம் கனம் மை கந்தரம் மால்
கார் சீதம் மஞ்சு விண் மேகம் (75)

84. மாரி வருடம் விருட்டி தூறல் பெயல் வானம் மழை
வீரியம்சேர் சோனை விடாமழை - ஆசாரம்
பெருமழை கனோபலம் ஆலாங்கட்டிப் பேராம்
வரு பனி இமம் துகினமாம் (76)

85. சஞ்சலை மின் சம்பை தடித்து வித்துரு சவலை
மிஞ்சு கனருசியும் மின்னலின் பேர் - அஞ்சுஅசனி
விண்ணேறு உருமு வெடி மடங்கல் செல் ஒலியே
அண்ணும் அனலேறும் இடிக்காம் (77)

86. தண்டன் பாசன் சூலன் சண்டன் நடுவன் மடங்கல்
திண்தருமன் செங்கோலான் தென்திசைக்கோன் - மிண்டுசமன்
மால் அரி கால் சங்காரன் வைவச்சுதன் மறலி
காலன் நமன் கூற்று அந்தகன் (78)

87. வக்கிரதந்தன் கரியோன் வைதரணியாற்றினோன்
அக்கிடா ஊர்ந்து உயர்த்தோனாம் எமன்பேர் - மைக்காலன்
கூற்றுஅமைச்சன் சித்திரனும் குத்தனும் கூற்றின்கணக்கர்
சாற்று மிருத்து ஏவல் செய்வதாம் (79)

88. நந்திநண்பன் செல்வன் நரவூர்தி புட்பகன் தனதன்
மந்திரி பிங்கலன் வைச்சிரவன் - முந்து கின்ன
ரேசன் அளகேசன் இயக்கேசன் மரகதனே
ஆசுஇல் நிதிக்கோன் குபேரன் (80)

89. வந்து உயிர் புட்கோன் அருணன் மற்று இடி மின் வேந்தர் முன்னோன்
கந்தவகன் வாதம் அரி கம் சலனன் - உந்துஅனிலம்
ஆயுசகன் காசிபன்சேய் ஆசுகம் பெலன் பரிசன்
வாயு வளி மாருதம் (81)

90. கால் வயின தேயின் கலைவாகனன் பவனன்
மால் ஒலி சதாகதி மருத்து உலவை - மேல்வடதிக்கு
ஆள்வோன் சமீரன் அனுமன் வீமன் தாதை
காளகன் வங்கூழ் பவமான் காற்று (82)

91. கோடை மேல்கால் கீழ்கால் கொண்டல் வடகால் வடந்தை
வாடை தென்கால் மென்கால் மலயக்கால் - கூடுசிறு
கால் வசந்தம் தென்றி தென்றல் காண் கூதிர் ஊதை பனிக்
கால் சுழல்கால் சாரிகை சூறை (83)

92. ஆதவன் அருக்கன் அருணன் கனலி மார்த்தாண்டன்
சோதி பிதிர்க்கோள் பருதி சூரன் இனன் - ஆதித்தன்
ஏழ்பரியோன் ஓராழித்தேரோன் இருள்வலி என்
றூழ் விகத்தன் சண்டன் உதையன் (84)

93. பானு ஒளி விண்மணி பனிப்பகை பதங்கன் அண்ட
யோனி சுடர் சிங்கன் மறியுச்சன் வெய்யோன் - வான்விளக்கம்
ஆயிரம்கரன் தினகரன் கிரணமாலி அரி
ஞாயிறு எல்லை மந்தி தபனன் (85)

94. கிரகேசன் எல்லி கிரிவலம் செய்கின்றோன்
தரணி சனிதாதை சவிதா - இரவி
மதியளப்போன் வாணாளளப்போன் சான்றோன் செங்
கதிரவன் வியாழசிநேகன் (86)

95. பாற்கரன் வேந்தன் கமலபாந்தி பகல் என்று அரிய
மா கதிர் விரோசனன் திவாகரனே - தாக்குஅலரி
சாயை உடாதேவி தலைவன் காசிபன் அதிதி
யேயன் மித்திரன் சூரியன் (87)

96. தானவன் குபேரன் அல்லோன் தண்கதிர் சுதாகரனே
மானன் இறை அம்புலி சோமன் கடகக் - கோன் முயற்கூடு
இந்து அரி நிலா இமகரன் களங்கன் வேந்து புதன்
தந்தை கலையோன் உடுக்காந்தன் (88)

97. திங்கள் சசி மூன்றாழித்தேரோன் பதின்பரியோன்
அம் குமுதபாந்தி அனசூயை மகன் - பைங்கதிர்
அத்திரிசேய் தாய்க்கோள் அலவன் விடையுச்சன் விது
அத்தனையும் சந்திரன் பேராம் (89)

98. மங்கலன் சேய் அரல் வளவன் தீ மகரவுச்சன்
செம்குசன் அங்காரகன் மண்சேய் பவுமன் - பைங்குருதி
மேடன் எண்பரித்தேரோன் வக்கிரன் விருச்சிகனே
வாடாத்துணைக்கோள் செவ்வாய் (90)

99. மேதை புந்தி மால் புலவன் வித்தைக்கோள் எண்பரியான்
தூதன் மதிசேய் சவுமன் தேர்ப்பாகன் - மூதறிஞன்
கன்னியான் கன்னியுச்சன் பச்சை கணக்கன் மிதுனன்
பொன்அருணன் கூரியன் புதன் (91)

100. அந்தணன் சிகண்டிகன் பொன் ஆங்கீரசன் தேவ
மந்திரி சீவன் மகவின்கோள் அரசன் - செந்தனுவன்
மாண்குரு நண்டுச்சன் எண்மாவான் ப்ருகற்பதியே
ஆண்டளப்போன் மீனன் வியாழன் (92)

101. பார்க்கவன் சுங்கன் கவி பளிங்கு உசனன் கோல் விடையன்
கார்க்கோள் பெண்கோள் காப்பியன் பிருகு - மாக்கள்பத்தோன்
தானவர்குரு கரணன் சல்லியனே போகி புகர்
மீனவுச்சன் வெள்ளி சுக்கிரன் (93)

102. மந்தன் முடன் நோயன் மகரன் கதிர்சேய் சுன் காரி
உந்துஆயுக்கோள் கொடியூர்ந்தோன் முதுவோன் - சந்திர
சாவகன் கோலுச்சன் அயத்தோன் எண்மாவன் சவுரி
தாவில்கும்பன் மேற்கோள் சனி (94)

103. ஆறுபரியான் ஞானக்கோள் காரரவு தமம்
பாறும்இராகு சிகி செம்பாம்பு பரி - யாறுடையான்
துட்டக்கோளாம் கேது துன்பவிடக்கோள் சனிசேய்
கட்டமுறு மாந்தி குளிகன் (95)

104. முன்னாள் யாழ் ஏறு இரலை ஐப்பசி மருத்வாநாள்
சென்னி பரி அச்சுவதி சீர்ப்பரணி - துன்அடுப்பு
தோய்கிழம் பூதம் தாசி சோறு தராசுஆம் அறுவாய்
தீ அளகு இறால் கார்த்திகை (96)

105. உரோகிணி விமானம் அயன்நாள் சதி தேர் ஊற்றால்
உரோணி உருள்ஆம் மதி மாழ்கோடே - நரிப்புறம் மும்
மீன் மகயிரம் பாலை மெய்மிருகசீரிடப் பேர்
மான்றலையும் மார்கழியுமாம் (97)

106. செங்கை யாழ் மூதுரை ஈசன்தினமும் ஆதிரைப் பேர்
பொங்குஅதிதிநாள் ஆவணம் புணர்தம் - பைங்கரும்பு
பிண்டி புனிதம் புணர்பூசம் பூசம் காற்குளமே
வண்டு குருநாள் கொடிறுமாம் (98)

107. ஆயிலியம் பாம்பு கவை ஆயில் மகம் முற்சனியே
காய்வேட்டுவன் கொடுநுகம் வேள்வி - வாய்க்காலாம்
துர்க்கை கணை எலி இடைச்சனி பூரம் சுடர்நாள்
பிற்சனி பங்கூனி உத்திரம் (99)

108. அத்தம் நவ்வி மீன் கை களிறு ஐவிரல் காமரம்
கவுத்துவம் தச்சன் உடை நடுநாள் - சித்திரைப்பேர்
நெய் பயறு அளக்குமாம் நீள்சோதி காற்று வீழ்க்
கை நுகம் விளக்கு மரக்கால் (100)

109. தீட்டுவிசாகம் சுளகுஆம் தேள் பனையே மித்திரநாள்
நாட்டு அணுடம் வேதி இந்த்ரநாள் கேட்டை - சேட்டையும் வல்
லாரையும் தேட்கடை கொக்கு ஆனி அன்றில் வில் மூலப்
பேர்அசுரநாள் என்றும் பேசு (101)

110. முற்குளம் நீர்நாளும் பூராடமாம் விச்சுவநாள்
பிற்குளம் ஆடி உத்திராடப்பேர் - முக்கோலே
சீவு உலக்கை மால்நாள் சிரவணம் ஓணம் வசுநாள்
ஆவணி புள் காகம் அவிட்டம் (102)

111. குன்று செக்கு சுண்டன் வருணம் போர் சதையம் முற்கோல்
நன்புரட்டை நாழி பூரட்டாதி - வென்றிமன்னன்
பிற்கோல் முரசும் உத்திரட்டாதி ரேவதிப்பேர்
சொல் கடைநாள் தோணி தொழு (103)

112. சாலி வடமீன் வசிட்டன்தாரம் அருந்ததி பேர்
ஏல்புடைய மேடம் ஆடு ஏறு இடபம் - சால்இரட்டை
வீணை சயமகள் விழா மிதுனம் கற்கடகம்
காணும் நண்டு அதுஆம் அரி சிங்கம் (104)

113. பெண் கன்னி செட்டிநிறைப்பேர் துலாம் தேள்பெயரே
விண்விருச்சிகம் தனுவே வில்பெயராம் - திண்சுறா
மான் மகரம் கும்பமே மட்கலப்பேர் மீனமே
மீனின் பொதுப்பெயராமே (105)

114. தாரை நாள் சுக்கை உடு தாரகை பம்பு உற்கை விண்மீன்
பார் வான்வில் இந்திரவில் பச்சைவில்லாம் - ஊர்கோள்
பரிவேடம் ஓரை பவனம் இல் இராசி
அரிய கதிர்வட்டம் விசையம் (106)

115. வெய்யில் என்றூழ் ஆதவம் வெய்யோன்கதிர் மதிக்கதிரே
பெய்நிலவு சந்திரிகை பின் இருள்பேர் - மொய்திமிரம்
கச்சளம் துணங்கறல் திவாந்தம் அந்தகாரம் அரி
மெச்சுதமம் மங்குல் கருவே (107)

2. மானிட வர்க்கம்

116. மானவர் மண்ணோர் மனிதர் மாந்தர் மக்கள் மாக்கள் நரர்
மானுவர் ஆண்டோர் மனுடர் மைந்தர் மனு - மானிடராம்
மன்பதையும் பஞ்ஞிலும் மக்கட்பரப்பாம் நங்கை நம்பி
என்பர் பெண் ஆணில் சிறந்தோர்க்கே (1)

117. பேதை மகடூஉ பெதும்பை பெண்டு அரிவை நாரி நல்லாள்
மாது அணங்கு காந்தை பிணா மானினியே - கூர்தெரிவை
அங்கனை மாயாள் வனிதை ஆட்டி மடவாள் மடந்தை
மங்கை பெண்ணாம் காரிகையும் ஆம் (2)

118. வன்னமுறும் பேதை பெதும்பை மங்கையே மடந்தை
பின்அரிவை தெரிவை பேரிளம்பெண் - தன்வயது
முந்து எழு பன்னொன்று பிதன்மூன்று பத்தொன்பான் இருபத்
தைந்து எண்ணான்கு ஐயெட்டுமாம் (3)

119. ஆண் புருடன் காளை மைந்தன் ஆடவன் ஆடூஉ குமரன்
மாண் புமான் பூமான் மகன் விடலை - வீண்பேடு
நஞ்சகமே சண்டம் நபுஞ்சம் கீலபம் அலி
அஞ்சலுறும் பெண்டகமும் ஆம் (4)

120. பற்றிலர் நீத்தார் தாபதர் இருடிமார் தூயோர்
உற்ற தவர் பண்ணவர் தபோதனர் - மாலற்றோர்
அறவர் உறுவோர் அடிகள் ஐயர் மெய்யர் யோகர்
துறவர் முனைவோர் முனிவர் சொல் (5)

121. கும்பன் தமிழ்நன் குறுமுனி கடற்குடித்தோன்
செம்பொதிகை மோனிசிவசமனன் - வம்புபுரி
வில்வலன் வாதாவி அன்றில்வெற்பு விந்தம் மால்சமையத்
தல் அட்டோனாம் அகத்தியன் (6)

122. ஆசிரியன் போதனன் அண்ணன் தேசிகன் உபாத்தி அத்தன்
ஆசாரியன் பணிக்கன் சாமி அய்யன் - ஆசான்
குரவன் அடிகள் உரவோன் குருவாம் சீடன்
பரவும் மாணாக்கனும் கற்பான் (7)

123. தக்கோன் விற்பன்னன் நல்லோன் சாரதி சாடு ஆரியன் சூர்
மிக்கோன் மேதாவி புதன் மேதை சுதீ - மெய்க்கலைஞன்
சான்றோன் உலகு அறிஞன் சங்கம் அவை பண்டிதனே
ஆன்றோன் கற்றோன் புலவனாம் (8)

124. நாவலன் பாவேந்தன் வித்துவான் கணக்காயன் கவிஞன்
பாவலன் கற்றுச்சொலி பேர் பாடகனாம் - பாவலரை
வைப்பார் கவி கமகன் வாதிஉடன் வாக்கி என்றே
மெய்ப்பின் ஒருவர்க்கு ஒருவர் மேல் (9)

125. தேசார் சவுமியன் திகம்பரனும் யோகியாம்
ஆசில் மதத்தார் சமயர் அங்கு அவருள் - பாசுபதர்
மாவிரதர் வாமர் வயிரவர் காளாமுகரே
தாவில் சைவர் உட்சமயத்தார் (10)

126. மெய் வாமர் சாத்தர் உடல் வேதம் குணம் கந்தம்
அவ்உயிர் மால் பற்றும் அவரே புறத்தார் - இவ்ஆறில்
சாறுவாங்கன் பூதமுத்தன் உலோகாயுதனாம்
தேறு சத்தன் கன்மி வைதீகன் (11)

127. ஆருகதன் குண்டன் அமணன் குணமுத்தன் முனிவன்
பாரினில் கொல்லாவிரதன் பாயுடுப்போன் - சாரணனும்
திண்சமணனாம் சீவரன் சாக்கியன் தேரன்
நண்பவுத்தன் கந்தமுத்தனாம் (12)

128. வேதாந்தி வைசேடிகன் சாங்கியன் மாயா
வாதி உடன் பரிணாமன் விவர்த்தன் - ஓது பசு
ஞானியுமாம் பாகவதன் நற்பாஞ்சராத்திரி வை
கானசன் வயிட்டுணுவற்காம் (13)

129. சித்தாந்தியே சமயாதீதி சிவஞானி
அத்துவிதி சுத்தசைவன் ஆகுமே - சித்து உணர்ந்த
மாணிக்கவாசகன் பேர் வாதவூரான் எனவாம்
பேணு திண்ணன் கண்ணப்பன் பேர் (14)

130. அத்தி பெண்ணாச்செய்தோன் அமணழித்தோன் காழியிறை
சத்திமுலைப்பாலுண்டோன் சம்பந்தன் - முத்தால்
சிவிகை குடை பெற்றோன் சிவபாதநெஞ்சன்
தவமகன் மாறன் சுரந்தீர்த்தான் (15)

131. சிலைபுணையாயூர்ந்தோன் திலதவதி பின்னோன்
அலைவில் புகழார்சேய் ஆமூர்த் - தலைவன் உயர்
மாதினியாள் மைந்தன் மருணீக்கி நாவரையன்
பேதமில் வாகீசன் அப்பன் பேர் (16)

132. நம்பி விடங்கவர்ந்தோன் ஊரன் நாவற்பதியோன்
வெம்பு காராவுண்சேயை மீட்டளித்தோன் - அம்பரவை
சங்கிலி மன் ஆகரன் வன்தொண்டன் சடையன்சேய்
சங்கரன்தோழன் சுந்தரன் (17)

133. வேதர் தொழிலாறர் ஐயர் விப்பிரர் பார்ப்பார் நூலோர்
ஆதிகுலர் அந்தணர் அனற்கொடியோர் - ஓது கஞ்சம்
பூண்போர் இருபிறப்போர் பூசுரர் பிராமணர் பேர்
ஏண் பிரமசாரி வன்னியே (18)

134. இல்தனில்வாழ்வோன் கிரகி இல்லுடன் கானம் புகுந்து
நற்றவம் செய்கின்றோன் வானப்பிரத்தன் - பற்றொழிய
விட்டோன் சன்னாசி எதி வீட்டை இச்சித்தோன் முமுக்கு
கட்டு தருக்கன் தார்க்கிகன் (19)

135. மாலன்பன் ஞானமுத்திரைக் கரத்தான் காரிமன்னன்
பாலன் திருவாய்மொழி பகர்ந்தோன் - சால் புளிக்கீழ்
வாழ்வான் அனமூர்தி மாறன் மங்கையூரினன் நம்
மாழ்வான் சடகோபனாம் (20)

136. கோ அதிபன் ஆதிபன் கோன் கொற்றவன் சுவாமி மன்னன்
காவலன் நாதன் கொழுநன் காந்தன்அரன் - மேவுபெம்மான்
ஏந்தல் செம்மல் ஓங்கல் பதி ஈசன் நிருபன் தலைவன்
வேந்து இறை பிரான் பிரபுவே (21)

137. புரவலன் பார்த்திபன் பூபன் மகிபன் தோன்றல்
குருசில் பெருமான் இயமான் கோமான் - துரை அரசன்
அண்ணல் இராசன் பேர் குறுநிலக்கோவாம் குறும்பர்
தண்அரட்டர் வேளிர் புரோசர் (22)

138. மந்திரி தேர்ச்சித்துணை அமாத்தியன் நூலோன் சூழ்வோன்
முந்துஉழையன் எண்ணன் முன்னோன் மூதமைச்சன் - பிந்து கணக்
கண் கரணிக்கண் காவிதி நிமித்தன் சாக்கை வள்ளு
வன் பரியாளன் பரிவாரன் (23)

139. வண்டர் மறவர் படர் வாளுழவர் சூரர் மள்ளர்
மிண்டர் வயவோர் வியவர் வீரர் தெவ்வர் - திண்திறலோர்
கூளியர் ஏறாளர் கொடும்பொருநர் திண்ணியரே
மீளியர் சேனைத்தலைவர் மேற்று (24)

140. தானை தளம் தண்டு அனிகம் தந்திரம் பதாதி பலம்
வானி ககனம் கடகம் வாகினி தார் - சேனை படை
பாடி பரிகாரம் பதாகினி யூபம் கவனம்
கூடி இவை பாளையப் பேர் கூறும் (25)

141. உண்டை அணி யூபம் கை ஒட்டு படைவகுப்பாம்
மண்டுநெற்றி தூசி முன்செல்வார்படையாம் - கண்டு பின்செல்
கூழை கொடிப்படையாம் கூடார் படையறைப் பேர்
கீழறுத்தலே அறைபோக்கே (26)

142. வீட்டுமன் காங்கேயன் விரதன் வன்னி சந்தனுச்சேய்
மாட்டு துரியோதனன் வலம்புரித்தார் - சூட்டி வணங்
காமுடியன் நாகக் கொடியன் காந்தாரி கண்ணில்
கோ மகன் சுயோதனனும் கூட்டு (27)

143. பாண்டு குந்தி சேய் உதிட்டிரன் பொறையன் பைங்குவளை
பூண்டோன் முரசுயர்த்தோன் பொய்சொல்லான் - கான் தருமன்
பானுமகன் கச்சையுயர்ப்பான் கவச குண்டலன்
கானீனன் அங்கர்வேந்து கன்னனே (28)

144. காரி பிரகோதரன் கடோற்கயன்அப்பன் கதையன்
மாருதி இடும்பிமன் சீயக்கொடியோன் - பார்பிளந்தோன்
சல்லியன் சுயோதனன் சந்தன் கீசகன் இடும்பன்
வெல்பகனைக் கொன்றோன் வீமன் (29)

145. கண்ணன்மைத்துனன் காவெரித்தோன் அனுமதுசன்
விண்ணிறைசேய் ஈசன்முடிமேல் அடித்தோன் - நன்விசயன்
பற்குனன் கிரீடி சுவேதன் கிருட்டினன் பார்த்தன்
அர்ச்சுனன் சைவன் தனஞ்சயன் (30)

146. தென்னன் வைகையான் செழியன் செந்தமிழ்நாட்டான் மதுரை
மன் வழுதி பஞ்சவன் வேம்பன் மீனவன் - மாறன்
தென்கிரியான் தாம்பிரதீரன் குமரியன் கவுரி
யன் கைதவன் பாண்டியன் (31)

147. சென்னி கிள்ளி ஆர்த்தாமன் செம்பியன் மால் கோழிக்கோன்
பொன்னித்துறைவன் புலிக்கொடியன் - நன் நேரி
வெற்பன் புனல்நாடன் வேற்சூரியன் வளவன்
தம்பில்அபயன் சோழன் தான் (32)

148. கோதை குட்டுவன் குடகன் கொங்கன் வஞ்சிவேந்து பனம்
போதன் உதியன் பொருனைத் தென்மூன்றாற் - றாதிபதி
வானவரம்பன் மலையமான் வில்லவன் சேரற்கு
ஆன பெயர் சேரலனுமாம் (33)

149. காரி விராடன் சகரன் சென்னி நிருதி துந்து
மாரி நளன் ஆதிவள்ளல் வக்கிரனே - ஓர் சந்தி
மான் அக்குரன் சிசுபாலன் சந்தன் கன்னன் அந்தி
மானும் இடைவள்ளல் எனவாம் (34)

150. பாரி எழிலி பசுந்தொடை பேகன் மலையன்
ஓரி நள்ளி பின்வள்ளல் ஓர் காத்த - வீரன்முசு
குந்தன் புரூரவன் நளன் சகரன் கோள்இல் அரிச்
சந்திரனும் சக்கரராசர் (35)

151. எட்டி வணிகன் பரதன் இப்பன் நாய்கன் தனதன்
செட்டி கவிப்பன் தேசிகன் இளங்கோ - ஒட்டியன்
சிலேட்டை இச்சியன் சீரகத்தாமன் கோவலன் பொன்
னீட்டன் உழவோன் வசியனே (36)

152. வெள்ளைவட்டன் காராளன் மேழியன் காவித்தாமன்
பிள்ளை உழவன் சூத்திரன் சதுர்த்தன் - கொள்களமன்
பங்கயன்தாள்வந்தோன் பூபாலன் குடித்தலைவன்
கங்கைகுலன் வேளாளன் காண் (37)

153. மேற்குலராம் இம்மறையோர் வேந்தர் இப்பர் வேளாளர்
நாற்குலரும் அன்னோர் நடை முறைமை - ஏற்கும் மதம்
தன்செயல் பேதத்து உதித்தோர் கீழ்க்குலத்தோர் சாங்கிரர்கள்
பஞ்சவர்களாம் அவர்பேர் பார் (38)

154. அக்கீழ்க்குலத்தர் நிலம்ஐந்தினர் கண்ணாளர் வண்ணார்
கைக்கோளர் நாவிதர் செக்கார் உவச்சர் - மெய்க்குயவர்
சோனகர் மிலேச்சர் செம்மார் பாணர் தோல் ஊன் கள் விற்போர்
ஈனர் முதல் எண்ணிலர்களே (39)

155. சிற்பியன் ஓவன் மோகன் சித்திரன் கொல்லன் துவட்டன்
சிற்பி தட்டான் கம்மியன் ஓவன் தபதி - சொல் புனைவன்
கன்னான் கண்ணாளன் அக்கசாலையன் கண்ணுள்வினைஞன்
நன்மனுவன் தச்சன் யவனன் (40)

156. குன்றவர் கிராதர் குறவர் இறவுளர்
வன்சவரர் வேடர் வனசரர் - பின் புளிஞர்
வேட்டுவர் மாகுலர் வெங்குழுவர் கானவரும்
சூட்டும் குறிஞ்சி நிலத்தோர் (41)

157. குறத்தி கொடிச்சி குறிஞ்சிப்பெண் குறிஞ்சி
இறைக்குப் பேர் வெற்பன் எயினர் - இறுக்கர் உடன்
புள்ளுவர் விராதர் மறவோர் பாலையர் அதில் பெண்
டுள் எயிற்றியே மறத்தி சொல் (42)

158. மீளியுடன் காளை விடலை பாலைக்கு இறைப்பேர்
ஆள் இடையர் கோபாலர் ஆயர் விந்தர் - நீள் பொதுவர்
அண்டர் தொறுவோர் அமுதர் முல்லையர் பேர் அந்நிலப்பெண்
மண்டு இடைச்சி ஆய்ச்சி எனவாம் (43)

159. குறும்பொறைநாடன் கானநாடன் அண்ணல் தோன்றல்
மறம்செய் முல்லைவேந்தன் மருதத்தர் - குறுங்களமர்
மள்ளர் விளைஞோர் உழவர் வன்கூடைஞர் கம்பளரே
பள்ளர் களைஞர் எனப் பன்னு (44)

160. அம்மருதப்பெண் கடைச்சி ஆற்றுக்காலாட்டி மள்ளி
வெம்மை தவிர் பள்ளி அதின் வேந்தன் பேர் - செம் மகிழ்நன்
ஊரன் கிழவன் நெய்தற்கோன் துறைவன் சேர்ப்பன் மெல்லம்
சேர் புலம்பன் கொண்கன் எனச் செப்பு (45)

161. பரதர் கலவர் களியர் நுளையர்
பரவர் வலையர் திமிலர் - பரதவர்
பெய்கடலர் நெய்தலர் பெண் குழைச்சியே நுளைச்சி
செய்குரத்தியே பரத்தியாம் (46)

162. காருகன் ஈரங்கோலி தூசன் வண்ணான் காருகர் நெய்
வோர் தந்துவாயர் கைக்கோளர்க்கு உரித்தாம் - ஓர் பறம்பர்
தோல்வினைஞர் ஊன்விற்போர் சூனர் உல்லியோர் கூவ
நூலர் தைப்போர் பொல்லர் துன்னர் நோக்கு (47)

163. செம்மார் தோற்றுன்னர் நந்தி சக்கிரி செக்கான் பெயராம்
வெம்மிலைச்சர் ஆரியர் மிலேச்சராம் - செம்மைத்
துலைப்பன் யவனன் சோனகன் உவணர் உப்பு
விலைச்செய்வோர் சிற்பி உவச்சன் (48)

164. நாவிதன் சீமங்கலி ஏனாதி மஞ்சிகன் குடிச்சேய்
வாவு சவுரகனாம் மட்பகை வேட் - கோவன் உடன்
கும்பகாரன் சக்கிரி குலாலன் குயவன்
வம்பில் வலைபோழ்நர் சங்கீர்வார் (49)

165. பண்ணவன் ஓவன் மதங்கன் சென்னி சூதன் பாணன்
தண் வயிரி கோடி கூத்தன் கழைக்கூத்து - அண்ணினன்
வேழம்பன் கழாயன் அதிதி துனிகன் புதியோன்
வம்பலனாம் கூர்ப்பிலி மந்தன் (50)

166. கள்விளைஞன் ஈழன் சவுண்டிகன் சான்றான் படுவன்
அள்ளு துவட்டன் பிழிஞனாம் புலையன் - விள் குணுங்கன்
வங்கன் ஈனன் களைஞன் கொலைஞன் நீசன்
மாதங்கன் இழிஞோன் சண்டாளன் (51)

167. தோரணர் ஆனைப்பாகர் தூண்டு பரிச்சாணி பண்ணு
வார் வதுவர் வாதுவர் மாவலர் - தேர்ப்பாகன்
சாரதி சூதன் வலவன் சாரணர் வேயர் ஒற்றர்
சோரர் கள்வரும் திருடர் சொல் (52)

168. வல்லார் மாட்டோராம் வல்லோன் வலவை வல்லு நனாம்
செல்வனாம் சம்பனன் நோய்தீர்ந்தோனாம் - உல்லாபன்
வந்தி புகழ்வோன் கரியோன் கள்வன் நிருவாணி நக்கன்
உந்து வண்டராம் கடிகையோர் (53)

169. ஆயுத்தமானோர் சன்னத்தர் புகழோன் இயவுள்
ஓய்வில் அருளுள்ளோன் காருண்ணியனாம் - காய்கொலையன்
காதகன் காருகன் காரோடர் உறைகாரர் முன்னோர்
ஓது பிராசீனர் முதியோர் (54)

170. ஆதுலன் ஏழை தரித்திரனாம் அச்சமுற்றோன்
பீதன் பீரு சகிதன் பேசுஇழுதை - பேதை மடன்
எண் முழுமகன் மூடன் ஏழை ஆதன் சிதடன்
அண்ணை அஞ்ஞையாம் அறிவிலான் (55)

171. பாராயணன் குறிக்கொள்வோன் வழிச்செல்வோன் பதிகன்
ஏர் உரியோனாம் கிழவன் ஏவுவான் - பேர் வியவன்
நாகரிகர் காமுகரே நற்சதுரர் வஞ்சகன் பேர்
வேகி நிசாதன் சவனன் வேண்டு (56)

172. மாலுமி மீகான் மீவான் மீகாமனாம் சமைப்போன்
வாலுவன் பாசீகன் மடையன் பாகி - கூலியனே
பாசகனாம் ஏற்போன் பரிசிலாளன் தீனன்
யாசகனுமாம் இரப்போனே (57)

173. பார்த்தர் விடர் படிறர் பல்லவர் இடங்கழியர்
தூர்த்தராம் ஓர்கண்ணர் சொல் காணர் - சீர்த் தியாகி
வள்ளியோன் தாதா வேளாளன் உபகாரி வள்ளல்
உள்ள புரவலன் ஈவோன் (58)

174. உலுத்தன் பிசினன் உலோபன் குலீனன்
குலக்கேடன் வாமனம் குஞ்சம் - மெலித்த குறள்
சிந்துஆம் கூன் கோணல் செவிடன் வெதிர்ஆம் சிதடன்
அந்தன் அந்தகன் குருடனாம் (59)

175. பங்கு குணில் மொண்டி முடம் பற்று ஊமை மூகை முங்கை
கொங்கணி வேலன் வெறியன் கோமரத்தான் - இங்குஇவையே
தேவராளன் சாலினி தேவராட்டியாம்
பூவின் அளமர் அளப்போர் (60)

176. அருந்துதன் வாதிப்போன் அழகன் உலோலன்
பெரும் தம்பதி இரட்டை பெண்ஆண் - நரம்பிசைப்போர்
சூட்டும் குயிலுவராம் தோற்கருவியோர் யவனர்
ஆட்டுவிப்போர் நட்டுவர் என்றாம் (61)

177. ஆம் ஏதிலர் வம்பலர் நொதுமலோர் அயலோர்
தாமே கிராமியர் கிராமமுற்றோர் - மாமாத்தி
யன் பரிகாரன் பிடகன் ஆயுள்வேதன் வயித்தி
யன் பேர் மருத்துவனும்ஆம் (62)

178. புல்லர் கலர் கையர் கிஞ்சர் புள்ளுவர் கனிட்டர் பொறி
யில்லர் தேரார் முறையிலார் பதிதர் - பல்லுவர் கீழ்
மூடர் கயவோர் முசுண்டர் மூர்க்கர் தீயோர் பயல்க
ளோடும் அற்பர் தீம்பர் சிறியோர் (63)

179. தோழன் எலுவன் சேடன் பாங்கன் துணைவன் நண்பன்
தாழ் சிலதன் முன்னிலைப்பேர் தான் ஏடா - தோழி சகி
சேடி இகுளை சிலதியாம் பாங்கி இவட்கு
ஏடி எலாள் முன்னிலை (64)

180. நாற்குலத்து ஆண் பெண் உயர்வு தாழ்வில் மணந்து ஈன்ற மைந்தன்
சாய்க்கும் அனுலோமன் அவர் தாழ்வு உயர்வாய் - வேட்க வந்தோன்
சொல் பிரதிலோமன் அவர் சோர்வின் அந்தராளன் இம்மூன்று
அல்லோன் விராத்தியனே யாம் (65)

181. குண்டன் வேற்றோர்க்குஅருள்செய் கோளகனாம் கைம்மை மகன்
திண் காணீனன் கன்னிசேய் தருணி - அண்டு உவதி
யெவ்வனியும்ஆம் பிரவுடைக்கே அபரஞ்சி
அவ்விசை போல் பாடலின் மிக்காள் (66)

182. கந்தி அவ்வை அம்மை கன்னி நோற்பாள் குமரி கன்னி
வந்தி மையே மைம்மை மலடியாம் - நொந்த முண்டை
கைம்மை கயினி கலனிலி அமங்கிலியே
வன்மை அறுதாலி விதவை (67)

183. வண்ணமகள் கோலம்செய்வாள் மதங்கி பாடினியே
பண்விறலி பாடகியும் பாடுவிச்சி - கண்ணாம்
பதிவிரதையே சதி கற்பாட்டி ஆட்கொண்ட
வதி பெண்ஆண் நாச்சி நாயன் (68)

184. சாமி கோமாட்டி கோதாரம் பெருமாட்டி
மா முதல்வியே தலைவி மற்று இறைவி - யாம் அரசி
ஈனமில் பாஞ்சாலி ஐவரில்லாள் துரோபதை பேர்
சானகி வைதேகி சீதை (69)

185. அத்தை குரத்தி ஐயை ஆச்சி ஆசாள் பெயராம்
கைத்தொழில் செய்வோர் தொழுவர் கம்மியராம் - பத்தியில்லா
வேசி பொருட்பெண் கணிகை வேசை விலைமான் சூளை
தாசி வரைவில்லி பரத்தை (70)

186. அத்தகு விருத்தி தொழும்பு ஆள் கிணகர் தாசர் தொறு
தொத்து அடிமை சேடர் படு தொண்டு மா - மெய்த் தொழுத்தை
குட்டனி குண்டம் துருத்தி கூளி குறள் அசதி
துட்டை புழுக்கை பெண்பால் சொல் (71)

187. ஒன்னார் பற்றார் செறுநர் உள்ளார் நள்ளார் மருவார்
மன்னார் செற்றார் பரர் மானார் இகலார் - இன்னார்வேண்
டார் அமரர் தெவ்வர் தரியார் மாற்றார் சேயர் பகை
வோர் அரிகள் சத்துருவாகும் (72)

188. உற்றவர் நட்டோர் கிளை கேள் ஒக்கல் குடும்பம் கூளி
சுற்றம் விருந்தம் தொடர் கடும்பு - பற்றர் தமர்
பந்தம் நள்ளி மித்ரர் பரிசனம் பாசனமே
பெந்தும் உறவின்முறைப் பேர் (73)

189. பேரன் மூதாகை பிதாமகன் போற்றன் பாட்டன்
பேர் தகப்பன் ஈன்றோன் பிதா தாதை - சீர்அம்மான்
அத்தன் அய்யன் தந்தை அச்சன் அப்பனாம் ஞாதியர்
தாயத்தர் குடிச்சுற்றத்தோராம் (74)

190. ஆயி அன்னை அவ்வை பெற்றாள் அம்மனை ஆய் தல்லி தள்ளை
தாய் அம்மை மோய் மாதா தவ்வையும்ஆம் - பாய் செவிலி
பின் வளர்த்ததாய் தமக்கை பேர் சேட்டை தவ்வை அண்ணி
முன்னை தத்தை அக்காள் மூத்தாள் (75)

191. கை அனிச்சை தங்கை கனிட்டை பின்னையாம் இளையாள்
ஐயன் சேட்டன் தமையன் அண்ணன் முன்னோன் - செய்ய தம்முன்
மூத்தோன் பேர் தம்பி பின்னோன் மூளும் அனிச்சன் கனிட்டன்
ஏத்து இளவல் ஐந்தும் இளையோன் (76)

192. மாமி அத்தை மாமன் அம்மான் மாதுலனாம் ஓர்வயிற்றே
தாம் உதித்தோர் சோதரர் சகோதரரே - தோமில்
உடன்பிறந்தோர் துணைவர் ஓர் குடியில் கொண்டோன்
அடர்ந்த சட்டகன் சகலனாம் (77)

193. கொண்கன் உரியோன் வேட்டோன் காந்தன் வல்லவன் கொழுநன்
நண்பன் மணவாளன் நாயகனே - ஒண் கணவன்
பத்தா சுகியன் பதி தவன் கேள்வன் துணைவன்
மெய்த் தலைவன் காதலனாமே (78)

194. பாரி விருந்து இல் தலைவி பன்னி மணவாட்டி மனை
தாரம் மனையாள் காதலி காந்தை - சேர் உரிமை
வல்லபி குடும்பினி வாழ்க்கைத்துணை விரும்பி களம்
இல்லவளும் நாயகிக்காமே (79)

195. தோன்றல் புத்திரன் சேய் சுதன் மதலை ஏயன் மரு
மான் தனையன் செம்மல் புதல்வன் பாலன் - ஈன்ற செல்வன்
சந்ததி குட்டன் சிறுவன் காதலன் குமாரன் மைந்தன்
நந்தனனும் ஆண்மகன் பேர் நாடு (80)

196. புத்திரி குமாரி புதல்வி சுதை ஏயி குட்டி
சித்தமகிழ் ஐயை சிறுவி செல்வி - அத் தனையை
பந்தனை காதலி பாலி இவை பெண்மகள் பேர்
நந்தனையும் சொல்க நயந்து (81)

197. இப்பொது சந்தானம் மகவு எச்சம் குழவி வழி
கைப்பொருள் சிசு குழந்தை கான்முளையே - மெய்ப் பிள்ளை
மக்கள் சிறாரே மகார் மகவின் பன்மையாம்
சக்களர் ஓர் ஆண் பெண் சேர்ந்தார் (82)

198. மைத்துனன் அத்தான் கொழுநன் மாப்பிள்ளை சம்பந்தி அம்மான்
அத்தை மகன் வேட்டோர் துணை கொழுநி - மைத்துனி அப்
பிள்ளைகளில் பெண் பேர் மருமகன் பிறங்கடை மாப்
பிள்ளை மருமான் மருகன் பேர் (83)

II. அஃறிணை உயிர்ப்பொருள் படலம்

1. நாற்கால் உயிர்ப்பொருள் வர்க்கம்

199. ஆளி அறுகே பூட்கை வாளமும்ஆம் கேசரி
கராளி வயமா மிருகராசன் அரி - கோளரி
சீயம் முடங்குளை பஞ்சானனம் கண்டீரவம்
நகாயுதம் மடங்கலும் சிங்கம் (1)

200. வல்லியம் சார்த்தூலம் வயமா வியாளம் தீவி
புல் புலி தரக்கு உழுவை புண்டரிகம் - கொல் வேங்கை
சித்திரகாயம் கொடுவரி வியாக் கிரமே
அத்தும் குயவரியும் ஆம் (2)

201. தந்தி களிறு அத்தி கயம் குஞ்சரம் சாமோற்பவம் மா
மந்தமா தூங்கல் கரி மாதங்கம் - சிந்துரம் தோல்
வாரணம் மதாவளம் கைம்மா வழுவை ஆம்பல் பகடு
ஏரம்பம் நாகம் இபம் (3)

202. உம்பல் வல்லிலங்கு ஒருத்தல் மாதிரம் உவா புழைக்கை
கும்பி சிறுகண்ணி நடைக்குன்று எறும்பி - தும்பி மருண்மா
வேழம் தந்தாவளம் புகர்முகம் பூட்கை
நால்வாய் கறையடி யானை (4)

203. தீதில் பிடியானை கரேணு கரிணி சீர்வடவை
ஓது இரதியாம் அரசுவா யூத - நாதனாம்
கன்று முனி போதகம் கயந்தலை உடன் களபம்
துன்று துடியடியும் சொல் (5)

204. தாலவட்டம் வால் வேசகம் வால்நுனியாம் முன்
காலதின்பேர் காத்திரம் பின்கால் அபரம் - தாலு மத
கம் கும்பம் மத்தமாம் கைந்நுனியே புட்கரம் கூட்
டம் கடகம் மஞ்சு முதுகாம் (6)

205. கடைக்கண் நிரியாணம் கடம் கதுப்புஅதுஆம் பல்
லடிப்பேர் கரீரம் அது தூங்கு - இடம் கண்டம்
சேவகம் விலாழி கையில் சிந்துநீர் பாகலம் நோய்
ஏவு தூசாம் புரசையே (7)

206. சூளிகையாம் காதடிப்பேர் தொண்டை தொண்டலம் துதிக்கை
வாள் எயிறு கோடு தந்தம் மானமும் பின் - நீள் பிருதும்
கொம்பின்நடு வீழ்குழி கொப்பம் பயம்பாம் ஓடை பட்டம்
உம்பல் செல்லும் பாதை தண்டம் ஓர் (8)

207. மதம்பெய்சுவடே கரடமாம் கடாம் தானம்
மதர் கடம் மதம் கூடம் வாரி - முதிர் ஓளி
ஆலையம் கண்டக் கயிறு கச்சை மந்தனம் சூழி
ஏலும் முகபடாமே (9)

208. கந்திருவம் பத்திரியே கற்கி அச்சுவம் சடிலம்
குந்தம் அரி கிள்ளை அயம் கொக்கு இவுளி - கந்துகம் மா
கோடை துரகம் கோணம் கோடகம் கோரம் புரவி
பாடலம் துரங்கம் பரி (10)

209. தூசி கனவட்டம் துரகதம் அத்திரி
வாசி குரகதம் வாகம் உன்னி - தேசியுமாம்
திண் குதிரைப்பேர் பரமே சேர் பல்லணம் பருமம்
பண் கலனையின்பேர் பகர் (11)

210. வற்கம் வடிகயிறு வாய்வடம் குரம் குரச்சை
அக்குளம்பாம் மாதிகமே அம்மார்க்கம் - தக்க படி
அங்கவடி கச்சம் மொட்டுமாம் கடியாலம் கறுளே
வெங்கலினமே கவினமே (12)

211. மத்திகை கோல் சம்மட்டி மந்திரம் சாலை பந்தி
மெய்த்த சுவல் குசையே வேசகமே - வைத்த உளை
வேயும் அதின் மயிராம் வேழத்தின் மேல் தவிசே
ஆய் இலகடம் பலகாரம் (13)

212. கோ பெற்றம் தேனு குடம் கபிலை ஆன் சுரபி
ஆ பசுவாம் பத்திரை நல்ஆ சுதையே - தீப்பசுவாம்
வற்சலம் ஈற்றா கிருட்டி ஓரீற்றாவாம் மலட்டுஆ
வற்சை கன்று தன்னம் வற்சமாம் (14)

213. பாறல் விடை நந்தி குண்டை பாண்டில் குத்தம் கூளி பகடு
ஏறு இடபம் கோபதி இறால் மூரி - கூறுஎருது
புங்கவம் சே புல்லம் நரை பூணி கொட்டியம் காளை
அங்கு எருமை ஆன் பொது மாடாம் (15)

214. ஆவின் முலைப் பேர் சுரையாம் அபீனமே செருத்தல்
ஆவின்மடு சூட்டாம் அதின் சிமிழே - மேவும் இமில்
அக்கு விடைமுரிப்பாம் ஆன் எருமைப் பால் விளையத்
தக்கது உரோசனை அது ஆம் (16)

215. காலி தொறு கோட்டம் நிரை காலேயம் பட்டி கிடை
ஏல் பசுக்கூட்டம் கிடை ஆட்டின் குழுவாம் - சால்பொலியேறு
ஆம் தூர்வகம் துரியம் ஆமா கவையமா
வாய்ந்த காட்டு ஆவின் நாமம் (17)

216. காரான் வடவை மயிடம் சயிரிபம் கவரி
கார் மேதி மூரி காசா எருமை - சேர் ஆண்
பகடு கிடாவாம் ஈனாப் பக்குவமாம் பெண்மாடு
இகலில் கிடாரி என்றாமே (18)

217. வெள்ளை மறி கார் வெறி மை மேழகம் அயம் துருவை
பள்ளை உதள் சாகளம் சாகம் பிரமம் - துள்ளல் அசம்
கொச்சை அருணம் கொறி வற்காலி ஒரு மேடம் உடு
செச்சை தகர் மோத்தை திண்ணகம் (19)

218. கம்பளம் சகம் புருவை ஆடு கிடாய் இவ்ஆண் பேர்
பம்பு வரையாடு சரபம் வருடை - வெம் பறழே
குட்டன் மறி சோரன் அணங்கு ஐந்து ஆட்டின் குட்டி கண்டத்து
ஒட்டும் உறுப்பு ஒன்று அதர் என்று ஓது (20)

219. பல்லுகம் குடாவடி ஐவாய்மா கவிழ்தலையே
பல்லம் எலு எண்கு இருளி பற்று உளியம் - சொல் கரடிக்கு
ஆம் பேர் தலைவிரியுமாம் அண்டசம் முசலி
ஓம்பு தடி கோதா உடும்பு (21)

220. போழ்முகி கோலம் கிருட்டி போத்திரி வராகம் முந்தூழ்
கேழல் களிறு ஏனம் கிருகிடியே - மோழல் அரி
வல்லுளி பூதாரம் மைமா சூகரம் குரோட்டு இரணி
நல்எறுழி கோணி பன்றி நாட்டு (22)

221. சல்லியம் முளா எய்யே சல்லபம் முட்பன்றி அம்முள்
சல்லம் சலம் சாமரை சவரி - மெல்எகினம்
மானமா சீகரம் பட்டம் கவரிமான் அணில் பேர்
தான் வெளில் வரிப்புறம் அதுஆம் (23)

222. ஏகசிருங்கி காண்டாமிருகம் என்பர் சிவ
மோகி அதிசூரி புருடாமிருகம் - வாகில்லா
முண்டிதை உரோதனி தேவாங்கு ஆகும் மொய் சுவவு
சுண்டன்உடன் சுந்தரி முஞ்சூறு (24)

223. பாக்கன் விலாளம் விடருகம் பவனம் மார்ச்சாலம்
மாக்கடுவன் பூஞை அலவன் பூசை - தாக்கு ஓதி
இற்புலியே மண்டலி எலிப்பகையே வெருகு என்று
அப் பதினான்கும் பூனையாம் (25)

224. நவ்வி உழை ஏணம் சூனம் பிணை குரங்கம் மறி
அவ்அருணம் கிட்டிணம் சாரங்கமும் மான் - வெவ்இரலை
புல்வாய் கலை வச்சயம் கருமான் போர் இரலை
புல்வாய் தனக்கும் புகல் (26)

225. கோகிலம் சாகாமிருகம் கோடரம் நிரந்தம் அரி
நாகம் மற்கடம் வானரம் கடுவன் - யூகம்
கவி வலிமுகம் பிலவங்கம் கீசகம்
கானவன் நரமா மந்தி குரங்காம் (27)

226. காருகம் கருங்குரங்காம் கத்தூரிப்பிள்ளை மான்
சூர் நரந்தம் நானம் துருக்கமாம் - சீர் மறுவி
நாவி புழுகுப்பிள்ளைப் பேர் காத்திரம் நகுலம்
தீர்வை கத்திரம் கீரி செப்பு (28)

227. ஓரி சிருகாலன் உக்குரோட்டு இகலன் கோமாயு
பூரிமா உள்ளான் சம்பு ஒண்டன் நரி - ஓரி கள்வன்
மைம்முகம் கூலம் கோலாங்கூலம் முசுவாம் கீரிச்
சம் முயல் வயம் சசமும்ஆம் (29)

228. கூரன் எகினம் பாசி குக்கல் பட்டி ஞாளி சுவா
சூரன் புரோகதி சுணங்கன் அக்கன் - ஓர் சார
மேயன் விசுவாசி சுனகன் குரைமுகன் முடுவல்
நாய் ஞமலியும் சுவானம் (30)

229. பெண் நாய்க்கு இவற்றில் முடுவல் எனும் பேர் சிறப்பாம்
திண்ணார் கொக்கே விருகம் செந்நாயாம் - எண்ணும்
சுகினம் சடைநாயாம் வேசரி துரங்க
முகி இவை கோவேறுகழுதை (31)

230. காளவாய் வேசரி கோடு அத்திரி கருத்தபமே
நீள்கரம் வாலேபம் நெடுங்கழுதை - தாழ் வலிதாம்
அத்திரி தாசோகம் இரவணம் நெடுங்கழுத்தல்
இத்துணையும் ஒட்டகமாமே (32)

231. சாயனம் சாய்ந்தம் சரடம் தண்டு ஓணான் ஓதி சில்லான்
காய்முசலி கோம்பி தோகைப்பகையே - பாய் காம
ரூபி அண்டசம் காமுருகியாம் ஓந்தி மரை
ஆவிதம் கானக்குதிரையாம் (33)

232. சாடு உந்துரு கனகதம் துந்தளம் களகம்
மூடிகம் பெருச்சாளி மொய் விருடம் - நீடு ஆகு
என்பவுமாம் ஆகு இரும்பன் சிகரி எலி
பின் கருப்பை காரெலியின் பேர் (34)

233. மா ஒருத்தல் ஓரி கடுவன் பகடு உடன் களிறே
சேவல் கலை உம்பல் போத்து ஏறு தகர் - பாய் விலங்கின்
ஆண் இவை பெண் பாட்டி பிடி ஆன் பிணை பிணா பெட்டை
காணும் மந்தி நாகும் கருது (35)

234. பறழ் குழலி குட்டி பிள்ளை பார்ப்பு குருளை
மறி கன்றின் பேர் விலங்கு மா மான் - செறி மிருகம்
நாற்காலிப்பேர் வியூகம் குலம் யூதம் விருந்தம்
மேற் சாலம் அக்கூட்டமே (36)

235. கூலம் விலாளம் தோகை கூரமொடு வேசகம் வால்
வாலதியும்ஆம் வெருகம் வால்கீழாம் - மேல்உலவை
கொம்பு விசாணம் சிருங்கம் கோடு மருப்பாம் குமரம்
கொம்பிலியாம் மேழியுமே கூறு (37)

2. பறவை உயிர்ப்பொருள் வர்க்கம்

236. தாக்கியனே நாகாசனன் வயினதேயன் புட்
கோ கலுழன் காளாரி கூறுஉவணன் - தாய்க்கவலந்
தீர்த்தான் பெரியதிருவடி புள் காசிபன்சேய்
காத்த சுதாதாரி கருடன் (1)

237. சம்பரம் வாருண்டம் சாளுவம் துரோணமொடு
சிம்புள் எண்காற்புள் வருடை சிங்காரி - வெம்பறவை
மெய்க் குலிசதந்தி குலிசநகி மீறு சிவ
பக்கி சதுர்ப்பாணி சரபம் (2)

238. அன்னம் எகினம் வக்கிராங்கம் மராளம் விகங்கம்
தன்னொடு அஞ்சம் ஓதிமமாம் தத்தை அரி - வன்னி கிள்ளை
கீரம் அவந்திகை சுவாதகம் சுகம் கிளிப் பேர்
சாருவும்ஆம் பொய்யா சலாங்கு (3)

239. சிகி ஞமலி மஞ்ஞை சிகண்டி நவிரம்
ஓகரம் பிணிமுகம் மயூரம் - சிகாவளமாம்
கோல மயில் கேகயமும் கொள்கை மயிலாட்டு ஏங்கல்
ஆலல் அகவல் குரல் (4)

240. சந்திராங்கம் தூவி கூந்தல் சிகண்டம் சருணம்
பைந் தொங்கல் பீலி கலாபம் தோகை - உந்து முருந்து
அச்சிறைமுள் தித்திரி பொன்வாய்ப்புள் சிரல் கவுதம்
சிச்சிலி மரங்கொத்தி சேர் (5)

241. பாரசிகை சேனம் பாறு கங்கமும் பருந்தாம்
சாரிகையும் பூவையும் நாகணவாய் - காரி கொடி
மாகரடம் கூகைப்பகை வாயசம் பிள்ளை
காகம் அரிட்டமும் காக்கை (6)

242. அண்டங்காக்கைப் பேர் காகோலமாம் அற்கமும்
காரண்டமும் நீர்க்காக்கை இதல் கோரசம் புல் - ஒண் சிவலாம்
பாரதம் இலாதமும்ஆம் பற்றும் இதற்பூழ் சிரவம்
சாரும் கவுதாரி தான் (7)

243. காமகாளம் கிரவுஞ்சம் குநரம் காரி அன்றில்
காமசின்னம் காரி களகண்டம் - தோமிலாக்
கோரகை பகம் கோகிலம் பரபுட்டம் குயிலாம்
சாரங்கமாம் சாதகம் (8)

244. காளபதம் தூணம் களரவம் பாராவதமே
ஆள்கபோதம் புறவுஆம் ஆந்தையின் பேர் - நீள்இருடி
கின்னரம் கூன் பிங்கலமாம் கின்னரம் கிராமம் உன்னம்
புன்மை உற்குரோசம் நீர்ப்புள் (9)

245. சக்கரவாகம் கோகம் நேமி கொம்பி சக்கரம்
ஆனைக்குருகாம் போதகை சகோரம் நிலா - முக்கி குக்கில்
பாடு செம்போத்தாம் செம்பகம் சம்பங்கோழி கம்புள்
காடை குறும்பூழ் கபிலசம் (10)

246. காட்டு ஊமன்கூகை கவுசிகம் பெரும்புள்ளாம்
கோட்டான் உலூகம் கொடிப்பகையே - ஈட்டும்
குடிஞை நிசாசரி குராலாம் குரண்டம்
அடர்பகம் வலாகமும் கொக்காம் (11)

247. போதா பிதா குருகு புட்கரம் சாரசம்
நாதவண்டானம் சிகரி நாரையாம் - ஓது குருகு
ஆண்டலைப்புள் ஞானி குக்குடம் காற்படை கோழி
மாண்துவசம் வாரணமும்ஆம் (12)

248. பாய்அசுணம் கேகயம் பறைப்பகை இசைப்பிரியி
சாய்குழறி நீராடி தாராவாம் - தோய்பூழான்
காதம்பம் கான்கோழி கம்புள் கலிங்கம் என
ஆதல் வானம்பாடிக்காம் (13)

249. உள்ளல் உள்ளான் சிதகம் தூக்கணமாம் ஊர்க்குருவி
தள்ளு குதிகாலி சகடம் குலிங்கம் - கொள் புலிங்கம்
செல் அடைக்கலங்குருவியாம் பகண்டை சில்லமாம்
வல்லூற்றின் பேர் கடகமாம் (14)

250. சார்எருவை புண்டரம் சகுந்தம் உவணம் பவணை
வார்கழுகாம் கஞ்சனம் வயான் வலியான் - கூர்கிகினி
வஞ்சுளன் பாரத்துவசம் பிள்ளை வயவன் கயவாய்
கஞ்ரீடம் கரிக்குரீஇ (15)

251. தும்பி மதுபம் கீடம் மா அளி சுரும்பு அரி
சாகம் பிரசம் சஞ்சாளிகம் கேச - வம் பிருங்கம்
மந்தி புள் சிலீமுகம் சாரங்கம் மதுகரம்
கீதம் தேன் கரும்பு அறுபதம் (16)

252. கண்டம் ஞிமிறே பிரமரம் கழுது சஞ்சரிகம்
வண்டு புண்டரீகமும்ஆம் வாகுரமே - ஒண் துரிஞ்சில்
வாவல் உடன் அஞ்சலி ஆலாலம் வெளவால் என்பர் துள்ளல்
மூவல் மசகம் கொதுகு ஒலுங்கு (17)

253. சில்லிகை சிள்வீடு சிமிலி சலபம் பதங்கம்
சில்லை சிதடி விட்டில் செங்கோபம் - நல்ஈயல்
மூதாவாம் தேனீ சாகம் பிரசம் மின்மினி கச்
சோதம் நித்திலாம் நுளம்பும் சொல் (18)

254. பக்கி விகிரம் சகுந்தம் பத்திரி ககம் குடிஞை
மிக்க விகங்கம் சகுனம் வீ வயினம் - மெய்க்குருவி
புள் பிணிமுகம் பதங்கம் போகில் அண்டசம் பறவை
கொட்புறும் பார்ப்போடு பிள்ளை குஞ்சு (19)

255. பெண் பேடை பெட்டை பெடை பேடு அளகாம் ஆண் சேவல்
ஒண்போத்து இறகடித்தல் ஓசனித்தல் - அண்டம் முட்டை
கோசம் வருட்டம் சினை புட்கூட்டம் தொழுதி புள்ளின்
ஓசை துழனி என்றே ஓர் (20)

256. சிறகு இறகு பிச்சம் சிறை கூழை தோகை
பறை குரல் வாசம் சதனம் பக்கம் - இறை தூவி
கூரல் சதம் பத்திரமாம் கூர்மூக்கு அலகு துண்டம்
சார்சுவவு கஞ்சும் அதுதான் (21)

3. ஊருயிர்ப்பொருள் வர்க்கம்

257. நற்பாம்பு மண்டலி கண்கொத்தி மூர்க்கன் சாரை
வெற்பரவம் மண்ணுளியன் வெவ்விரியன் - சொற்புடையன்
வன்முறுக்கரா மயக்கரா நீரரா வழலை
பன்மணியின் ஆதி பலபாம்பு (1)

258. பன்னகம் காகோதரம் பணம் பாந்தள் காத்தரவே
யன் மிருகம் கஞ்சுகி அரா உரகம் - தன்னு பவ
னாசனம் கும்பீனசமே நாகம் விடருகமே
மாசுணம் வியாளம் அரவம் (2)

259. சர்ப்பம் அண்டசம் கவைநா சக்கிரியே கூடபதம்
துர்ப்பணியே போகி தந்தசூகம் அரி - வற் புயங்கம்
அங்கதம் நிபாதி அகி கட்செவி எனவே
இங்கு முப்பான் பாம்புக்கு இசை (3)

260 துண்டம் இராசிலம் சொல் சாரை கோளகமே
மண்டலி பச்சைப்பாம்பு உதாசனன் மால் - கண்கொத்தி
மாசுணம் பெரும்பாம்பு பாந்தள் மலைப்பாம்புஆகும்
காசடையும் மூர்க்கன் நாகம் (4)

261. மந்தம் இராசம் வழலை வன்முறுக்கரா சவடி
பிந்துஇருதலைப்பாம்பின் பேர் மணியன் - உந்து
காளாம்பகி மாநாகம் இராசாளி குக்குடம் பறவைப்
பாம்பு அரசநாகப் பகுப்பு (5)

262. பை பணம் படம் பொறிப்பேர் உத்தி துத்தி போகம் உடல்
துய்ய பல் பேர் காறு தட்டம் தூம்பு கட்டம் - செய்காளி
காளாத்திரி யமன் அத்தூதன் நான்காம் அதின் பல்
வாள்அரவின்நா கவர்நாவாம் (6)

263. பீலிகை பிலன் சுலோபம் சிகடை கண்மூக்கி
கால்உறவி அண்டசம் கடுத்துவாய் - மேல் எறும்பாம்
துட்டன் தெறுக்கால் விடம் நளி விருச்சிகம் தேள்
ஒட்டு அரணை அண்டசம் என்று ஒது (7)

264. மூட்டை குடவன் முகடு மற்குணம் மூன்றாம் சிலந்தி
வாட்டும் உலூதை காவான் சிலம்பி - தீட்டு விட
தாலி நக்கி பூரம்அதுஆம் சார் புழு கீடம் கிருமி
சூலுறும் பொட்டு என்பிலியும் சொல் (8)

265. இற்கோதா புள்ளி அண்டசம் கோகிலம் கெவுளி
ஒற்கமுறும் பல்லி உழு உசுவாம் - துற்று சிதல்
ஆழல் கறையான் சிதலை செல்லாம் தேன்கூடு இறால்
வாழ்பிரசம் கோற்றேனும் ஆம் (9)

266. நன்னாகம் பூநாகம் நாங்கூழ் நிலவேராம்
இன்னலுள்ள பாச்சா இரைப்பு ஆகும் - துன்இடுக்கி
நட்டுவக்காலிப் பேர் நவின்ற இவையின் பொதுப்பேர்
இட்டிடுவர் ஊர்வன என்றே (10)

4. நீர்வாழ் உயிர்ப்பொருள் வர்க்கம்

267. மகரம் இறால் கெண்டை மலங்கு ஆரல் சாளை
பகர்உழுவை நெய்ம்மீன் பசலி - இகல்கசலி
வாளை கட்டா கோளை மடந்தை மிதப்பு கொழுவை
தேளி குதிப்பு காரை தேடு (1)

268. செங்களிறு கூனி திருக்கை பன்னா கோவாஞ்சி
வெங்கணை முதல் பலவாம் மீனும் நத்தை - சங்கு நண்டு
சோகி இப்பி ஆமை அட்டை சூர்முதலை தேரை முதல்
ஆகியவை நீர் வாழ்வஆம் (2)

269. அண்டசம் மச்சம் சலசரம் வகுலி நோ மயிலை
வண்சகுலி மீன் கொக்கரை வளை கோடு - அண்டசமே
வண்டு சுத்தி நாகு வெள்ளை வாரணமே கம்பு நந்து
தண்சுரிமுகம் பணிலம் சங்கு (3)

270. மாக்கலை மீனேறு சுறா வாள்கொம்பியாம் மகரம்
ஆக்கு திமி யானைமீன் அம்மீனை - வாய்க்குள்
விழுங்கும் திமிதிமி அம்மீனினத்தைப் பற்றி
விழுங்கும் திமிங்கில மாமீன் (4)

271. கெண்டை சபரம் பஞ்சிலை பாமரம் கயலாம்
பெண்டு அதில் சேல் நந்து அண்டசம் நாகு - விண்டநத்தை
சம்பூகமும்ஆம் சகத்திரதந்தி முரல்
அம்பார் முசுண்டகமும் ஆம் (5)

272. குத்திரசங்கம் குளிர்ஊமை ஊமைச்சி
தத்து திறல்தேளி சல்லகமாம் - கத்துகின்ற
தேரை அரி மண்டூகம் திண்சரிசபம் தவளை
கூருநுணல் அண்டசமும் கூறு (6)

273. ஏரல் பிண்டம் ஊமை எருந்து இப்பி அண்டசம் கிளிஞ்சில்
ஆர்சிப்பி ஆரல் ஆரால் மலங்கின் - பேர் நூறை
சோகி பரல் வட்டி பலகறை வெள்வரி
ஆய்கவடியோடு அலகு என்றாம் (7)

274. நண்டு அலவன் கற்கடகம் நள்ளி அண்டசம் கள்வன்
ஞெண்டு குளிரம் கவைத்தாள் ஞெள்ளி குளிர் - அண்டுஇடுக்கி
ஆமதியும் சேக்கையுமாம் அட்டை உரு செழுகம்
நாமம் நொள்ளை நாகரவட்டை (8)

275. சிஞ்சுமாரம் கிராகம் கரா இடங்கர் வன்மீன்
அஞ்சுஅண்டசம் முதலை ஆமையின் பேர் - மிஞ்சுதுளி
கச்சபம் உறுப்படக்கி கூர்மம் கமடமொடு
மெச்சு அண்டசமும் ஆமே (9)

276. இப்பி சுற்றும் ஆயிரம் இடம்புரியாம் சங்கை அவை
அப்படி சூழ் சங்கம் வலம்புரியாம் - அப்படியே
அன்னவை சூழ் சங்கம் சலஞ்சலம்அதுஆம் பாஞ்ச
சன்னியம் அவ்வாறு அவை சூழ் சங்கு (10)

5. தாபர உயிர்ப்பொருள் வர்க்கம்

277. கற்பகம் மந்தாரம் அரிசந்தனம் சந்தானமொடு
சற்பாரிசாதம் விண் ஐந்தாருவாம் - கற்பகம் சூழ்
வல்லியின் பேர் தான் காமவல்லியாம் சேதாரம்
குல்லை செச்சை சிந்து வெட்சி கூர்.

278. சந்தனம் படீரம் மலையசம் சாந்தம் பூசல் (1)
சந்த்ரதிலகம் சிசிரம் சந்து ஆரம் - சந்தமொடு
தண்வாசி ஆகுதி இலேபனம் சாத்துஆம் பிசனம்
நண்ணுமொரு செஞ்சந்தனம் (2)

279. அச்சுவத்தம் போதி பிப்பிலம் திருமரம் சுவலை
மெச்சு கணவம் பணை சராசணமும் - நச்சுஅரசாம்
காகதுண்டம் பூழில் அகரு அகில் புன்னாகம்
நாகம் வழை சரபுன்னை (3)

280. நாரம் நாரங்கம் நரந்தம் நாரத்தை பிர
சாரம் கணி திமிசு சாற்றுஅசனம் - ஓர்வேங்கை
காதிரம் கருங்காலி செங்கருங்காலி எனும்
ஈது சிறுமாரோடமே (4)

281. வாழ்பழுமரம் காமரம் பூதம் வானோங்கி
நீள்இயக்குரோதம் வடம் தொல்மரம் ஆல் - கோளியும்ஆம்
வெள்ளில் கபித்தம் கடிப்பகை விளா விளவாம்
சுள்ளி நறவம் எனச் சொல் (5)

282. அச்சம் கரீரம் முனியாம் அகத்தி சிற்றகத்தி
துச்சில் உபராசிதமாய்ச் சொல்வர் எலு - மிச்சு அரச
மோகினி சம்பீரம் முருகு அருணமே லிகுசம்
தாகமில் சதாபலம் அதுஆம் (6)

283. மருவகம் சமீரணம் கிடாரை தமரத்து
கரபுசம் பாராவதமும் ஆகும் - திரளி
அருள் உற்கடம் சோசம் அஞ்சுகம் வராங்கம்
கருவாயும் ஆம் இலவங்கம் (7)

284. அயிராபதம் நாகரம்பை கொழுவிஞ்சி
பயில்சருமசம் பூர்ச்சபத்ரம் - உயர்வாம்
மிருதுத்துவசம் மரவுரிமரப் பேர்
பொருகாஞ்சிப் பேர் சரபுகம் (8)

285. செங்கோடு பஞ்சரம் செருந்தியாம் செம்மரம் சேய்
அங்கோலமாம் அழிஞ்சில் அஞ்சனியே - புன்காலி
காசைபுல்லி பூவை அதசி காயா வகுளம்
கேசரம் இலஞ்சி மகிழ்க்கே (9)

286. நல்தெங்கு இலாங்கலி தென் நாளிகேரம் தாழை
கற்றகந்தி பூகம் பூக்கம் கமுகாம் - சொல் துவர்க்காய்
பாகு அடைக்காய் கோலம் பாக்காம் கரும்பு இக்கு ஆலை கன்னல்
சேகில்கழை வேழம் தெளி (10)

287. வாழை அரம்பை கதலி திரணபதி
கேழ்மகரவாழை மருகு என்றாகும் - சூழ்முருங்கை
சிக்குரு கிரஞ்சனம் சோபாஞ்சமாம் கிக்கசியும்
கக்கடியும் துத்தி தனக்காம் (11)

288. புற்பதி தாலம் தாளி புல் பெண்ணையும் பனையாம்
அப்பும் இதழ் ஏடு ஓலை அவ்விலைப் பேர் - தப்பாத
நாரியொடு நெய்யரி பன்னாடை நிலப்பனைப்பேர்
வராகியே முசலி வாழ்த்து (12)

289. கோல் குல்வலி வதரி கோற்கொடி கிரந்தை கொண்டை
கோலம் அதின் கனியாம் கூவிளையே - மாலூரம்
கூவிளம் சிவத்துருமம் நின்மலி குசாபி வில்வம்
நாவல் சம்பு சாதவம் நவ்வல் (13)

290. அத்தி அதம் கோளி அதவோடு உதும்பரமாம்
இத்தி சுவி இறலி இந்திரியாம் - சித்திரமே
ஆமணக்கு ஏரண்டமும்ஆம் தந்தி நிகும்பமும் காட்
டாமணக்காம் பஞ்சி முசுட்டை (14)

291. வாரிகம் பாடை பங்கம்பாளை மலைதாங்கி கருஞ்
சாரணை பொன்முசுட்டை சேங்கொட்டை - வீரதரு
பல்லாதகி உடன் செம்பாலை எரிமுகியாம்
எல்ஒதிப் பேர் மோதகம் ஆமே (15)

292. பூரணி மோசம் சான்மலி பொங்கர் நான்கு இலவாம்
சீரணம் சாதி இவை சீரகமாம் - மோரடமே
வீழி மஞ்சணாத்தி நுணா வெந்தை வெந்தயப் பேர்
தைவேளை விவிதம் பாலையம் (16)

293. பூதிகம் காஞ்சனம் காஞ்சமும் புன்காம் அனிச்சம்
தீதில் அருப்பலம் தேக்கு சாகம் - சாதி சிறு
தேக்கின் பேர் பாங்கிரியாம் தின் கலிங்கம் இந்த்ரவல்லி
பேய்க்கொம்மட்டிக்காம் பெயர் (17)

294. சேகரம் கொக்கு ஆம்பிரம் சேதாரம் எகின் மாழை கிஞ்சம்
வாகுறு மாவாம் சூதம் மாந்தியும்ஆம் - பாகல் பன
சம் பலா சக்கை அக்காய் தன் பேதம் ஆசினியே
கம்பமுறும் கூழை வருக்கை (18)

295. ஆமலகம் தாத்ரி நெல்லி நீலி அவுரி மரு
தாம் அருச்சுனம் ககுபம் பூதவமும் - தாமம்
மதலை இதழி வளர் கடுக்கை ஆக்கு
பதம் இவை கொன்றைப்பாற் படும் (19)

296. விண்டு அமை ஆம்பல் வெதிர் வேரல் வஞ்சம் கீசகம் வேல்
கண் துளை வேய் ஓங்கல் கழை காம்பு அரி தூம்பு - ஓண்திகிரி
சந்தி பணை வேணு வரை பாதிரி முடங்கல் தட்டை
முந்தூழ் முளை கிளை வேழம் (20)

297. நேமி புறக்காழ் கணை மூங்கிற்காம் வேய்க்கண் கிரந்தி
தோமில்பண்ணை வேய்க்கூட்டம் தோரை அதி - னாம் அரிசி
சூரல் பிரம்பாம் சாதி வேத்திரமும்ஆம் குடை வேல்
ஓர்இரண்டு பேரும் உடை (21)

298. வச்சிரவல்லி பிரண்டை கொடுப்பையின் பேர்
மச்சரக்கி சீதை பொன்னாங்காணியாம் - கச்சோலம்
சக்கிரந்தி கந்தாலி சோரகம் சோசம் சடியாம்
கக்கு கரமத்தகம் களா (22)

299. இந்திரசூரியம் நிரக்குண்டி சிந்துவாரம் நொச்சி
சந்தசந்திகைக்கொடிப் பேர் தாடிமமே - சந்தானம்
காழம் எட்டி கோடரமும் மாரணியும் காஞ்சுரை கற்
றாழை குமரி கன்னியாம் (23)

300. கோவிதாரம் குரவம் ஆமயமும் கோட்டமாம்
தேவதாரப் பேர் சுரர்மரமாம் - சீவல்
சுரசம் பிதாரி சிறுகிழங்கு உன்மத்தம்
மருளும் தூர்த்தூரம் மத்தமாம் (24)

301. குந்தம் குருந்து குமிழ் கூம்பல் கடம்பல் புளி
திந்துருணி ஆம்பிரம் சிந்தூரம் எகின் - சிந்தகமாம்
தித்தை பிசுமந்தம் நிம்பம் வாதாரி திண்பாரி
பத்திரம் அரிட்டமும் வேம்பாம் (25)

302. நாயுருவி காஞ்சரி சனம் சிகிசிரம் கதிரி
ஆய கரமஞ்சரி அபாமார்க்கம் - தூய விருக்
காதனியுடன் காளசாகம் கயிடரியம்
வேதில் பன்னகந்தி கருவேம்பு (26)

303. வைச்ச கரிடிகையே மாவிருக்கம் கள்ளியின் பேர்
வச்சிரம் கண்டீரம் வச்சிராங்கமும்ஆம் - உச்சித்
திலதமொடு பானுபத்தம் சூரியகாந்தப் பேர்
அலர் சவிகை கோலி செவ்வியம் (27)

304. இருப்பை மதூகம் குலிகம் ஈந்துஆம் கச்சூரம்
விரைக் கடுகு ஐயவி சித்தாத்தம் - உரைத்த
கழல் இயக்கன் கச்சூரம் அக்கழலின் காய்ப்பேர்
உழலும் கழங்கும் உரை (28)

305. இந்துளம் மராம் கதம்பம் நீபம் அரத்தம் கடம்பாம்
செந்திராக்கம் கோத்திரிகையுமே - முந்திரிகை
வல்ல மதுரசமாம் துளசிப் பேர் துளவு
குல்லை விருந்தம் வனம் துழாய் (29)

306. காயம் இலசுனம் வெள்ளுள்ளியாம் ஈருள்ளி
காயம் பலாண்டு சுக்கிரந்தமும்ஆம் - தோய்கிகினி
கன்னி கவாக்கி கருவிளையும் காக்கணமாம்
பின்னர் ஆற்போடமும் அப்பேர் (30)

307. கன்னிகாரம் துருமோற்பலமும் கோங்கு குய
வன்னியுமாம் சோத்தினி கூலம் சாலி - அன்னபுடோல்
கோலொடு முத்தாபலம் குண்டலி இசங்கு கொடு
வேலி வன்னி சித்திரமாமே (31)

308. மல்லிகை மாலதிமவ்வல் அனங்கம் புருணம்
அல்லால் விசகலியும்ஆம் பாலை - நல்ஓமை
சீவனி சீவந்தி கிரிமல்லிகை வெட்பாலை வற்சம்
ஆவலுறும் குடசமாம் (32)

309. நந்தியாவட்டம் வலம்புரி நறுந்தமன
கந்தம் மருக்கொழுந்து காண்மூல - கந்தம் இரு
வேலியாம் பீதகமும் வேரியும்ஆம் துருக்கம்
கோலமரவம் குங்குமம் (33)

310. பற்படாகம் கவசம் பைங்கேசினி சங்கங்
குப்பி குராசாணி குரசமாம் - அப்புகட
மாரி சிறுபுள்ளடியாம் வாயுவிளங்கத்தின் பேர்
கேரளம் கிராதம் நிலவேம்பு (34)

311. குஞ்சம் குருவிந்தம் குன்றியின் பேராம் திலகம்
மஞ்சாடி வஞ்சுளம் வானீரம் வஞ்சி - கிஞ்சுகமே
பூங்கவிர் முருக்காம் புரோசும் புனமுருக்கும்
தாங்கு பலாசும் பிரமதாரு (35)

312. தொண்டை விம்பம் கோவை கொவ்வை சுச்சு சமங்கை சுண்டில்
இண்டு புலிதுடக்கி ஈகை இங்கை கண்டூதி
காஞ்சொறி செந்தொட்டியின்பேர் காங்கேருகம் காரை
யாம் சமி நெருப்பு வன்னியாம் (36)

313. முண்டகம் கைதை முசலி மடி முடங்கல்
கண்டல் பட்டிகை பறிவை கேதகையும் - ஒண்தாழை
பானு அருக்கு எருக்காம் பாவிரி கோளம் பசிரி
ஈன் உலவை ஓடையின் பேரே (37)

314. மாதுலங்கமே தாடிமம் பீசபூரமொடு
மாதுளமும் மாதளையாம் மற்று ஆத்தி - தாதகி ஆர்
கல்லதி குஞ்சரி செவ்வந்தி சதபத்திரமாம்
சில்லம் இல்லம் கதகம் தேறு (38)

315. ஆகுலி மேகாரி தலபோடம் இவை ஆவரைப் பேர்
வாகுசி உடன் சோமராசியும் கார் - போகமாம்
சாலம் அசுவகண்டி சுள்ளி மரா பாடலம் புன்
காலி கன்னி பாதிரியாம் காண் (39)

316. சண்பகம் மாலதி சாதி செண்பகம் செயலை
பிண்டி காகோளி அசோகு ஆயிலும்ஆம் - விண்ட கொத்த
மல்லி உருளரிசி தானியமாம் வாசைஎன
சொல்வது ஆடாதோடைக்காம் (40)

317. கோரன்டம் பாணம் குரவகம் குறிஞ்சி கண
வீரம் கரவீரமே கவிரம் - சீர் அலரி
சீரிடம் பாண்டிலுமே வாகை நிலவாகை
ஆரும் கமதாயுமாம் (41)

318. பன்னல் பின்னல் காற்பாசமும் பருத்தி உத்தம
கன்னி வேலிப்பருத்தி செம்பருத்தி - துன்னு சுபங்
காரி அம்பை கொக்கிறகுமந்தாரை மந்தாரை
சார் செம்மரத்தம் சபை (42)

319. மாகதி காமன் கலினி பிப்பிலியும் திப்பிலியாம்
வாகுறு கிராம்பு வராலம் பிருங்கம் - நாகவல்லி
பொன் திரையல் வெள்ளிலை தாம்பூல வல்லி மெல்லிலையே
வெற்றிலை தாம்பூலமும் ஆமே (43)

320. பத்தியம் அரீதகி விரோசனி சிவம் கடுவாம்
பித்திகையின் பேரே கருமுகையாம் - மெய்த்தோன்றி
காந்துகம் கோடல் கோடை கார்த்திகை இலாங்கலியே
காந்தள் இவை ஐவிரலி காண் (44)

321. கஞ்சா விசையை பங்கி கோரக்கமூலி குல்லை
கஞ்சம் மதயந்தி காந்தாரியும்ஆம் - மஞ்சரியும்
பூனைவணங்கி விமலி எரிசிகையும்
ஆன குப்பைமேனிப் பேராம் (45)

322. ஞாழல் பலினி பிரியங்கு ஆகும் கூதளம்
கூதாளியாம் மஞ்சிகமே தாளி வள்ளை - நாளிகமாம்
பைங்குளவி பச்சையாம் கங்குணி வாலுழுவை
தங்கு அடகு இலைக்கறி அதுஆம் (46)

323. சிக்கரி முன்னம் துரிஞ்சில் சேர் பசுநா விட்டில் பிராய்
புக்கி பூற்சாதம் பொடுதிலையாம் - முட்கா
வளை முப்புரமெரித்தான் வாய்ந்த சரபுங்கம்
தளர்கொழுஞ்சி காவளை அதுஆம் (47)

324. திரிவிருதையே பகன்றை கும்பி சிவேதை
அரிமேதம் வேலாம் பேயத்தி - பிரமதண்டி
விட்டுணுக்கிராந்தி அபராசி பராசிதமாம்
கட்டுக்கொடி சக்கராங்கம் (48)

325. அறுகு பதம் தூர்வை மேகாரி மூதண்டம்
வெறிஇளம்புல் சட்பம் விதாரி - பெறும்ஈறல்
காயம் மரீசம் கலினை கோளகம் திரங்கல் கறி
மேயமிரியல் மிளகு (49)

326. ஓங்கு விரிசு அலி உத்தாலம் நறுவிலியாம்
தேங்கு குறுந்தோட்டி பலை சிற்றமுட்டி - தாங்கு குரு
விஞ்சி அதிபலையாம் வேரமுட்டி பீலு உகாய்
மிஞ்சும் உசீரம் இலாமிச்சு (50)

327. வெட்டி இரிபேரம் உதீசம் பாலம் வாளகமாம்
தொட்டால்வாடிப் பேர் இலச்சகியாம் - மட்டில்
அரணி வைசயந்தி முன்னையாம் மாவிலங்கு
வரணி குமாரகமும் ஆம் (51)

328. கொற்றான் பெயர் தீண்டமாழ்கி நந்தை என்பர் கொடிக்
கொற்றான் பேர் நூழில் இந்த்ரவல்லியாம் - வற்றல் சரி
பாலிங்கம் கொம்பளையாம் தும்புரு உண்டைச்சுரையாம்
ஆலாபு தும்பி சுரையாம் (52)

329. கரந்தை முண்டி பிக்காம் குலகலம் நாறு
கரந்தை சுவதட்டம் கோகண்டம் - நெருஞ்சி நமக்
காரி தொழுகண்ணி அழுகண்ணி உருதந்தியாம்
ஆரை சதுப்பன்னியே யாம் (53)

330. வல்லாரை சண்டகியே பிண்டீரி யோசன
வல்லி புளியாரைப்பேர் சார்ங்கேரி - சொல் காக
மாசி மணித்தக்காளி சீதேவி மாலரசம்
காசில் சகதேவி மரூகம் (54)

331. தான்றி ஆராமம் விபீதகம் கலித்துருமம்
கான்ற நத்தச்சூரி கடுகம் மரு - தோன்றி
சரணம் காத்தோட்டி ஆதண்டை பிரியாளம்
மரல் அளற்கம் தூதுவளை (55)

332. சீந்தில் கழுசி சிவந்தி அமுதவல்லி
பேர்ந்த சவரிக்கொத்தின் பேர் முதியார் - கூந்தல் பிர
சாரணியாம் பச்சிலை தமாலம் பசும்பிடியும்
ஓர் தகரத்தின் பேர் உரை (56)

333. பெரும்பூசணி கூழ்ப்பாண்டம் பூசணிப் பேர்
வரும் கற்கசம் மாற்கவமாம் - பிரகதி
வார்த்தாகம் கத்தரி பாகல் கூரம் காரவல்லி
கார்க்கோடகி பழுபாகல் (57)

334. வங்கம் வழுதலை பாண்டாகி வழுதுணைப் பேர்
இங்குலி முள்ளி இயற்சயந்தி - சிங்கி
சிறுவழுதலைப் பேர் சிமந்தம் குசும்பம்
பெறு சந்திரகாவிப் போர் (58)

335. வெய்ய கண்டங்கத்தரி வியாக்கிரியே கண்டகியே
பெய் கண்டகாரி பிரகதியாம் - செய்ய
வசம் உக்கிரம் வசம்பாம் மாசில் அயிலேயம்
மொசுமொசுக்கையின் பேர் மொழி (59)

336. பீரம் படலிகை கோசாதகி பீர் பீர்க்கு ஆகும்
ஊர்வாருகமே உருவாரம் - சேர் மிருது
கற்கடியும் வெள்ளரிப்பேர் கக்கரிப்பேர் வாலுந்தி
தக்க நுணவை தணக்கு (60)

337. அவரை சிம்பை சிக்கிடி நிட்பாவம் நகுலி
துவரை மிருத்தாலகம் சுராட்டம் - யவை காச்சி
ஆடகம் மிருத்தனமே தோரையும்ஆம் பற்கு மொச்சை
பாடவரையின் பேர் சிம்பம் (61)

338. வண்சணகம் மஞ்சூரம் மங்கிலி சதீரகமே
கண்டிகம் களாயம் கடலையின்பேர் - அண்டுஉழுந்து
மாடம் இதை காராமணி யாவகம் அரச
மாடம் அலசந்தி பயறு (62)

339. கொள் குலத்தம் காணம் சிறுபயறு சூப்பியமாம்
முற்கம் பாசிப்பயறாம் மொய் சூபம் - நல் பருப்பாம்
தானியப்பொது தவசம் கூலம் முதிரை சிம்பி
கூனில் பயற்றின்பொதுவாய்க் கூறு (63)

340. நீர்வாளி ஆகேருகமும் சதாவரியும்
நாராயணி நீர்விட்டானும்ஆம் - சாரசுதி
வாடிகம் திராயந்தி வாக்குபவம் சருமம்
ஈடில் விவிதம் பிரமியே (64)

341. ஓமம் அசமோதம் தீப்பியமாம் ஓரிலையின்
தாமரைப் பேர் அவ்வியதம் புட்கரம் கற் - றாமரைப்பேர்
சேம்பு சகுடம் கருணை சேனை கந்தம் சூரணமாம்
கூம்பு அசுவமாம் அமுக்குரா (65)

342. அதிவிடையம் அத்திரணம் அள்ளு சதகுப்பை
மதுரிகையாம் அட்டி அதிங்கம் - அதிமதுரம்
சாரும் புனநவமும் சாரடையும் சாரணையாம்
கூரும் திரிபுடையும் கூட்டு (66)

343. வெல்காகசங்கை வெள்ளிலோத்திரம் காயவிலை
சொல் பாயசம் பாச்சொறி கீழ்காய் - நெல்லியின்பேர்
அற்சடை நிசாசரி ஒன்றாம் வெருகு நெட்டி கிடை
பின் சடையுமாம் கிடைச்சின் பேர் (67)

344. கையாந்தகரை கரிப்பான் பிருங்கம் தும்பையின்பேர்
துய்தாம் வைகுண்டம் துரோணமாம் - பைசாசம்
பேய்வெருட்டி என்ப பெருந்தும்பை கவிழ்தும் பையின்பேர்
சாயும் இந்த்ரவாருணி அதுஆம் (68)

345. கொட்டி கசேருகம் சாலூகம் அதுஆம் கோபாகு
நட்டமிலாச் சாரிபமும் நன்னாரி - கட்டு அமுதம்
பூகளிந்தமும் பூமிச்சர்க்கரையாம் ஊர்த்தமுகி
ஆகாயக்கத்தரி அதுஆம் (69)

346. மேகநாதம் சாகம் சாகினியாம் கீரை முல்லை
மாகதி கற்பு ஊதிகை மணத்தளவும் - ஆகும் என்பர்
மாலதி சாதி சுமனை சுகந்தி பிச்சி
மூலக முல்லங்கி மொழி (70)

347. மயிலை அனங்கம் நவமல்லிகை வசந்தி
செயிரில் இருவாட்சி தில்லை தில்வம் - உயர்துன்னம்
சின்னியாம் மற்கடி கண்டூதி பூனைக்காலி
பன்னியின் பேர் சந்திரி என்பார் (71)

348. கோரை வராகி கொறுக்கை முத்தம் சாய் செருந்தி
கூர் எருவையாம் குசம் கூச்சம் குமுதம் - சார் தருப்பை
தெற்பை விசுவாமித்திரம் குசைப்புல் காம்போசி
பொற்பாம் குதிரைவாற்புல் (72)

349. நாணல் சரம் சரவணம் காசை மஞ்சள் நிசி
காண் அரிசனம் பீதம் காஞ்சனியாம் - பேணு சடி
கத்தூரிமஞ்சள் காலேயகமும் தாறுவியும்
வைத்த மரமஞ்சள் எனவாம் (73)

350. தோரை வை விரீகி செந்நெல் சாலி வரி சொல்லும் நெல்லாம்
ஊரை ஐவனம் கிரிநெல் ஒண் குளநெல் - நீவாரம்
சூழ் காசிநெல் யவை நெற்சூல் பொதி இளங்கதிர்ப் பேர்
பீள்ஆம் பைங்கூழ் பயிரின் பேர் (74)

351. தில்லை வெள்ளை வாலி சிறைமீட்டான் பூம்பாளை துய்ய
மல்லி மணலி மங்காமற்காத்தான் - நல் ஆனைக்
கொம்பன் மிளகி கொடு நேந்திரப்பள்ளி
வம்பு அதிக்கிராவி குறுவை (75)

352. செம்பாளை காடை சிறகி சீதாபோகம்
சம்பா பல முதல் நெல் சாதியாம் - பம்பு கதிர்
தோமில் குரல் ஏனல் நெல்லின் தோடாம் உமி அரிசி
ஆமம் அரி தண்டுலம் என்றாம் (76)

353. போர் சும்மை சூடு பொலி பொங்கழி வைக்கோல் வழுது
பார் வை பலாலம் பதர் சாவி - சேர் பதடி
கொம்மை சண்டாம் புன்பயிரின்கோல் இருவியே அருவி
விம்மு தட்டை தாள்எனவாமே (77)

354. புல் கவலை குந்திரையே புன்திரணம் நான்கு கம்பாம்
முற்றவிளை கூழ்வரகு மூகி நந்தி - நற் கேப்பை
ஆசுரமாம் கங்கு இறடி ஏனல் மூன்றாம் தினைப் பேர்
மாசில் சிறுதானியம் சாமை (78)

355. எள் எண் திலம் நூ இளவெள் குமிகை கவை
எள்ளிளங்காய் சோளம் இறுங்கு சொன்னல் - விள் வரகு
கோத்திரவம் கோதும்பை கோதி நறு மருப்போடு
ஆத்திரம் அல்லம் இஞ்சியாம் (79)

356. இஞ்சிவற்றலே விசுவம் நாகரம் வேற்கொம்பு சுண்டி
துஞ்சு சுக்காம் பாண்டியும் மஞ்சூகமுமே - மஞ்சிட்டி
பூலாங்கிழங்கின் பேர் காசியமாம் தக்கோலம்
கோலம் கிருதபலமாம் (80)

357. தாயைக் கொன்றான் பகன்றை சங்கினி என்று இம்மூன்றும்
ஏயும் கிலுகிலுப்பையின் பெயராம் - தூய சடா
மாஞ்சி பசாசம் பூதகேசம் எனவாம் ஏலம்
ஆஞ்சி துடி கோரங்கமாம் (81)

358. சிற்றிலைப்பாலை திலோவன்னி குளங்கலக்கி
நற்பறங்கிப்பட்டை சீனப்பாகே - இத்தனுகி
கற்பூரவள்ளி சிலாபேதி கனசாரவல்லி
வற்பில் கணானந்தி பிரமம் (82)

359. முள்ளுளவை முள்ளி கண்டல் முண்டகம் அதுஆகும் நீர்
முள்ளியின் பேர் இக்குரம் காகண்டமாம் - முள்ளின் பேர்
கண்டகம் கடு பாசி கல்லாரம் நீர்க்குளிரி
தண்சடைச்சி சைவலம் நாரம் (83)

360. முண்டகம் மாலுந்தி முளரி நளினம் விந்தம்
புண்டரிகம் கோகனகம் பூங்கமலம் - இண்டை சத
பத்ரம் அரவிந்தம் பதுமமே கேகயம் பொன்
வைத்தமனையும் தாமரை (84)

361. கஞ்சம் அப்புசம் வனசம் வாரிசம் சரோசம் அம்பு
சம் சலசம் பங்கசம் சரோருகமே - மிஞ்சுறும் அம்
போருகமே வனருகம் சலருகத்துடன் பங்
கேருகமும் தாமரைக்காமே (85)

362. இப்பூ இராசீவம் இறும்பாம் வராடகம் காய்
துப்பார் சாலூரகம் சுருள் வளையம் - அப்பொகுட்டு
கன்னிகை பூங்கொட்டை கயிரவம் ஆம்பல் அல்லி
அன்ன குமுதம் என்றுமாம் (86)

363. செங்குவளை உற்பலம் அரத்தம் கருங்குவளை
பைங்குவலயம் காவி பானலாம் - செங்கழுநீர்
கோலமும் கல்லாரமும் கார்நெய்தல் இந்தீவரமும்
நீலமும் வெண்ணெய்தல் குமுதம் (87)

364. தாரு நகம் சாகி குசம் தாபரம் யூகம் துருமம்
பூருகம் தரு சாலம் பொங்குஅடவி - சேர்அகலி
யம் பாதவம் விருக்கம் அத்திரி மரப்பொது தூர்
மொய்ம்பார் சடை சிவை வேர் மூடு (88)

365. மூலகம் கந்தம் சகுனம் மூலம் கிழங்கு முளை
கால் அங்குரமாம் கவடு கவர் - கோல் விடபம்
கொம்பு உலவை பொங்கர் இபம் கோடு கப்பு சாகை சினை
அம் பணை கோடரம் கொப்பாம் (89)

366. பன்னம் தகடு அடை பலாசம் சதம் தழையே
மன்னு பத்திரம் தலம் தமாலம் இலை - மின்னும் முறி
வல்லரி அலங்கல் பல்லவம் கிசலை மஞ்சரியே
சொல் குழை சுங்கம் தளிர் துளிர் (90)

367. மொக்குள் நனை போகில் முகை முகிழ் அம்கோரகை மொட்டு
கலிகை சாலகம் அரும்பு மலர் - மெய்க்குசுமம்
வீ தார் அலர் பிரசூனம் சுமனசம் துடுப்பு
பூ தாமம் புட்பம் இணர் போது (91)

368. பூவிதழ் தோடு ஏடு தளம் புல்லி புறவிதழ் உட்
பூவிதழாம் அல்லி பழம்பூ தேம்பல் - மேவு செம்மல்
சாம்பல் பிஞ்சு பேசி சதாலம் வடுவாம் தீவிளி காய்
பூம்பழம் பலன் கனி பூரம் (92)

369. வித்து குரு பரல் காழ் வீசம் அத்தி கொட்டை விதை
தொத்துடனே மஞ்சரி மலர்த்திரள் பூங் - கொத்தாம் பூந்
தாது துணர் மகரம் கொங்காம் பராகம் அத்தூள்
தீதில் மகரந்தம் மலர்த்தேன் (93)

370. செங்கனியின் மேல்தோல் செதிளாம் தை நாறு கன்றாம்
பைங்குருத்தின் நாமம் பயில் முருந்தாம் - செங்குறுங்கோடு
அண்டு வளார் கம்பு அகக்காழ் ஆண் புறக்காழ் பெண் அலிப்பேர்
மிண்டு கொடுவல் வெளிறு (94)

371. நார் துவக்கு பட்டை தொலி வற்கலம் மரத்தோலாம்
ஒரு நிரியாசம் உகளி வளன் - சேர் பிசினாம்
வீழ் சுவரோகம் விழுது ஒட்டு புல்லுருவி
தாழ் உரம் மரப்பொடி அதுஆம் (95)

372. உலர்மரம் வானம் வானப்பத்தியமே கோளி
மலரிலியாம் காய்ப்ப பலினம் - பலமொன்
றிலி பழி பகேசிகையாம் ஈர்ம்படு குறும்பு
குலை தாறு சாறு குச்சம் கொத்து (96)

373. இலை கனி காய் பூ அடி காம்பு ஈர்க்கு நரம்பாம்
நிலை அசரம் தாபரப்பொதுப் பேர் - மலி மூலி
மூலிகை முளைத்தவை நெய்யுள்ள விதை முத்து அரிசி
பாலுடைய முத்துட்பருப்பு (97)

374. சேகு கலை ஆசினி காழ் தின்வயிரம் வல்லி வள்ளி
ஏகும் இலதை இரத்தியும் - மாகொடிப்பேர்
பூடு செடி புதலாம் யோகம் அதகம் குளியம்
சாடு உறை மருந்து அவிடதம் (98)

375. கொன்ற கருவிப்புண் ஒழிக்கும் சல்லியகரணி
கன்றாச் சந்தானகரணி துண்டம் - ஒன்றல் விர
ணம் சீய்க்கும் சம்மானமாங்கரணி தான்அமிர்த
சஞ்சீவினி உயிர்ஈதல் (99)

III. அஃறிணை உயிரில்பொருள் படலம்

1. இயற்கைப்பொருள் வர்க்கம்

376. வித்தம் இரணியம் சாமீகரம் ஈழம் சுவணம்
கைத்து அரி பீதம் பீதகம் தங்கம் - மெய்த் தமனி
யம் சந்திரம் முகரி ஆசை பொலம் மாசை கன
கம் சாதரூபம் வேங்கை (1)

377. மாடை சொன்னம் தேசிகம் ஏமம் சாமி சாம்புனதம்
ஆடகம் காஞ்சனம் கல்யாணம் உரை - மாடு ஈகை
காரம் செந்தீர்து நிதி கானம் நிதானம் பூரி
பூரியமும் பிங்கல்மும் பொன் (2)

378. துள் இரசதம் தாரம் சுல்லு களதபுதம்
வெள்ளி உரூப்பியம் வெண்பொன்னும்ஆம் - வெள்ளீயம்
சீசம் காரீயப்பேர் நாகம் ஈயப்பொதுப் பேர்
ஆசில் வங்கம் வெண்கலம் கஞ்சம் (3)

379. இரவி உதும்பரம் இராசி வடு சுற்பம்
எருவை செம்பு தாம்பிரம் இரும்பின் - வருதெளிவு
தீக்கணம் இரேகு எஃகு உருக்காம் இதை தெளிவே
ஆக்கினது ஒழுக்கறை என்றாம் (4)

380. தரா மதுகம் பித்தளை மாயாபுரி ஆர்கூடம்
இரதியுடம் சீருணம் இரும்பே - கரும்பொன் அகி
சொன்னல் பசாசம் அயம் இப்பொது கொல் சீருள் சிக்கம்
மன் உலோகம் தாதுவாம் (5)

381. செம்பு இரும்பு ஈயம் பொன் வெள்ளி ஐம்பொன் வெண்கலம் தரா
ஐம்பொன் உறின் ஏழ்தாதாம் பித்தளை சேர்த்து - ஐம்பொனில் சொல்
ஈயம் இரண்டு ஆக்கின் நவலோகம் உலோகக்கட்டி
ஆயதின்பேர் மாழை தகணம் (6)

382. வர நிமிளை தாப்பியமே மாக்கிகம் மண்டூரம்
முரணு கிட்டம் சண்டாளம் முண்டம் - பொருள் அருத்தம்
அத்தம் நிதியம் திரவியம் தனம் பணம் தரிப்பு
சொத்து ஆத்தி காசு முதல் சொம் (7)

383. மாமணி சிவப்பு மாணிக்கம் மரகதமே
யாம் அரி பச்சை வச்சிரம் வயிரம் - தாம் வால
வாயம் வயிடூரியம் முத்து ஆரம் மௌத்திகம் தரளம்
ஆய் நித்திலம் மணி நீலம் (8)

384. புட்பராகம் கவுத்துவம் பதுமராகமாம்
துப்பு அரத்தம் பிரவாளம் துகிரே - விற் பவளம்
வித்துருமம் துவராம் மேதை கோமேதகமாம்
நத்துமணி அக்கு மனவாம் (9)

385. சம்பகம் இரும்புணி சலாகை மூன்றும் காந்தம்
அம்பொன் மெழுகு அரக்கு இலாக்கையாம் - உம்பர்மணி
சிந்தாமணியே தியாகமணி வாரீசம்
வந்த நிட்சேபம் புதையல் வைப்பு (10)

386. அக்கு மனவு ஈசன்மணியாம் உருத்திராக்கம்
காவிக்கல் செங்கல் காருகம் தாதுஆம் படிகம் - நற்காழ்
பருக்கை பளிங்காம் மனவு காசு அரதனம் கல்
இரத்தினம் சலாகை மணியே (11)

387. நிதிப்பேர் நிதானம் இருநிதிப் பேர் சங்கம்
பதுமம் நவநிதிப் பேர் சங்கம் - பதுமம்முகுந்
தம் கச்சபம் மகரம் நீலம் மகாபது
மம் குந்தமே வரதமாம் (12)

388. பண்ணிகாரம் பரிகாரம் பண்டாரம் கூலம்
பண்ணியம் வளம் தாரம் பண்டம் வத்துஆம் - சுண்ணம் தூள்
பூழி இரேணு பொடி துகள் புழுதியாம் களபம்
தாழ்சுதை மண் சுண்ணச்சாந்தாம் (13)

389. அடலை பலி சாம்பல் காப்பு ஐசொரியம் சாந்தம்
பொடி ஏமம் புண்ணியம் விபூதி - இடும் நீறாம்
பண்ணு செச்சை தேய்வை களபம் சாந்து காலேக
வண்ணம் விரை குப்பி கலவை (14)

390. மான்மதம் கத்தூரி சசி வண்கனசாரம் பளிதம்
கான்கற்பூரம் புழுகு கான்மீரம் - தான் மயிர்ச்சாந்து
ஏலம் தகரமொடு காசறை பீதம் கலவை
சால்வட்டிகை புலி நாற்சாந்து (15)

391. சிந்துரம் சிலேகம் நுதல்தீட்டுக்குறி புண்டரம் பொட்டு
அம்திலகம் திலதமாம் முலைக்கோ - லம் தானே
தொய்யில் அரிசி மஞ்சள் தோய்த்து அணிவது அச்சுதமாம்
பைய அலத்தகம் செம்பஞ்சு (16)

392. வன்பறு தூலம் பருத்திப்பஞ்சு ஆகும் பூளை இல
வின்பஞ்சாம் துய்யே பஞ்சின்துடராம் - மென் பஞ்சை
நூற்கத் திரட்டியது கொட்டை விடம் பாடாணம்
ஆக்கு இடங்கணம் பொரிகாரம் (17)

393. வந்தனி கோரோசனையாம் வல்லீகமே இரணம்
சந்துநாசம் பூதநாசம் இங்கு - கந்தி அத்தி
யாக்கிரம் இராமடம் பெருங்காயமாம் பேனம்
நீக்கு கம்பி மோகி அவினே (18)

394. குங்குலு சடாயு குந்துருக்கம் சிவை கவுசி
கம் குற்குலு துர்க்கை சீதாரி - குங்கிலியம்
சற்சரசம் தூபம் இவை சாம்பிராணிப் பெயராம்
கற்பூரம் தீபம் சூடன் (19)

395. விந்து இனிமை சூதம் சிவம் பாரதம் இரதம்
கெந்தகம் நாதம் பலியே நாறி சத்தி - முந்து சிலை
மாணார் குநடி மனோசிலைப் பேராம் கபிலை
ஏணகம் அரேணுகமாமே (20)

396. பீதகி ஆலம்பி பிஞ்சனம் தாளகம் பழுப்பு
கோதந்தம் ஆலம் அரிதாரம் - சாதிலிங்கம்
இங்குளம் தாதம் சூதவாதிகத்துடன் குலிகம்
இங்குலிகம் ஐந்தும் இசை (21)

397. துத்தம் இரஞ்சனம் சீபலி கற்பரியாம்
மைத்துரிசு நீலி மயூரி சிலா - சித்து
சயிலேயம் கன்மதம் கன்னார் கிரிசம் நாபி
அயிலா விடம் மிருதமாம் (22)

398. உப்பு இலவணம் படு உவர்ப்பு உருசி என்றாம் இந்
துப்பு சயிந்தவம் என்று ஓர்க வெடி - யுப்பு
சுராகாரம் சீனக்காரம் படிகி வஞ்சி
நிராவு துகமும் கூகைநீறு (23)

399. முருடு இடுகு அறல் சமிதை கட்டை முளரி
எரிஞெகிழி காட்டம் இந்தனம் தான் - முரிவிறகாம்
கந்துள் இருந்தை நல்லமாம் கரி கடைக்கொள்ளி
தந்திடும் இராதம் இலாதம் (24)

400. பொம்மல் பதம் பாத்து அமலை ஓதனம் புழுக்கல் வல்சி
அம்மிதவை சாதம் அடிசில் புகா - வெம்மூரல்
புன்கம் அமுது அன்னம் மடை போனகம் பாளிதம்
சொன்றி நிமிரல் உணா சோறு (25)

401. துப்பு அசனம் போசனம் ஊண் துற்றி மிசை பக்கணம் கூழ்
செப்பு அயினி உண்டி தின்ப திற்றி தீன் - அப்பொதி சோறு
ஆற்றுணா தோட்கோப்பு அவி பலி சரு தேவர்க்கு
ஏற்ற உணவாம் வெந்தை பிட்டுஆமே (26)

402. பாயசம் பாற்சோறு கறி பாகு துவை சசியம்
தோய் குழம்போடு ஆணமும்ஆம் தூய்பொரியல் - பாய் கருனை
காடி புற்கை மோழை யவாகு அரக்கு கூழ் கஞ்சி
பீடில் பேருண்டி பெருப்பு (27)

403. மிசில் எச்சம் சேடம் மிகை மிஞ்சுபொருள் உச்சிட்டம்
எச்சில் பிண்ணாக்கு துவை மலாவகமே - ஒச்சை வறை
யற்காம் சிற்றுண்டி அபூபம் அஃகுல்லி
உக்காரி சட்குலி முறுக்கு (28)

404. அப்பமே நோலை கஞ்சம் அண்டகை யூபம் தோசை
பப்பரம் இலட்டுகமே தோய்வை அடை - செப்புதில
புஞ்சமாம் எள்ளுண்டை புள்விலங்கின் ஊண் குளகு
மிஞ்சும் உறை இரையாமே (29)

405. தோய்வை முறுக்கு அப்பம் அடை தோய்ப்பன் அதிரசம் பிட்டு
ஏயும் அவல் இட்டவி எள்ளுண்டை பொரி - ஆய் சீடை
மொக்குழி தேன்குழல் முந்திரிகைக்கொத்து மா
உக்காரி ஆதிகள் சிற்றுண் (30)

406. நொடிதரில் அருப்பம் நுணவை பிண்டி மாவாம்
இடியும்ஆம் வெண்பொரி இலாசம் - தொடு கலிக்கம்
அஞ்சனம் மை நாசிமருந்தாம் நசியம் சம்பாரம்
வெஞ்சனம் கறிக்கூட்டாமே (31)

407. பால் பயம் கீரம் பயசு பாகு அமுது துத்தமும்ஆம்
சாலும் பெருகு ததி தயிராம் - மேல் அருப்பம்
மற்சிகை கலாயம் மதிதம் அளை தக்கிரம் மோர்
அற்செறி தண்டகாதகமும் ஆம் (32)

408. நெய் கிருதம் ஆச்சியம் துப்பு ஆகாரம் நேயம் அவி
பெய் இழுது சர்ப்பி வெண்ணெய்ப் பேர் கவினம் - ஐயம் நவ
நீதமுமாம் எட்டயிலம் எண்ணெய் தயிலப்பொது நெய்
காதல்செய் நேயம் சினேகம் (33)

409. மற்சண்டி தேன்பாகு வாணிதம் மணற்பாகு
கற்கண்டு கண்ட விகாரமொடு - நற்கண்டாம்
சர்க்கரை குளம் விசையம் கட்டி அயிர் கண்டம் வெல்லம்
அக்காரம் பாளிதம் புல்லம் (34)

410. கானுறு பனாட்டு பனங்கனிச் சாறட்ட கட்டி
சீனி பஞ்சதாரை மது தேம் பிரசம் - வான் முருகு
நாறும் நறை மாக்கிகம் கவுத்திரம் கள் வேரி நறா
தேறல் மகரந்தம் மட்டு தேன் (35)

411. மாலி கவ்வை குந்தி வெறி மாரி சுரை சுண்டி தொண்டி
சாலி நனை இக்கு ஆம்பல் சாயனம் - சுமாலி பிழி
சாறு அரிட்டம் மேதை தொப்பி சாதி முண்டகம் தணியல்
சேறு அரியல் நாளி மந்திரம் (36)

412. சொல்விளம்பி ஆவேசம் சோமம் சுகிவை வெடி
வல் விகுனி பாடலியே மாதவமே - வெல் அரக்கு
மத்தியம் சுயோகி மதுரைமறவி கள்ளாம்
அத்தேனின் பேரும் இதற்காம் (37)

413. வெம்களம் காளம் கரளம் ஆலம் மிருதம் காரி
சிங்கி விழம் ஆலாலம் ஆலகா - லம் கடுவே
நஞ்சம் விடமாம் சுதை பீயூடம் மருந்து அமரி
சஞ்சலம் தீர் தேவாமிர்தம் (38)

414. வற்றல் உணக்கும்பொருளாம் வண்கசரி சம்மந்தி
நல்துவையல் பச்சடி வேவாது அடுதல் - உற்றகறி
சீரில் மசரதம் பொய்த்தேர் மரிமரீசிகை பேய்த்
தேர் வெண்டேர் கானல் பாழ்த்தேர் (39)

2. செயற்கைப்பொருள் வர்க்கம்

415. கொய் நவியம் தண்ணம் பாலம் குளிர் கணிச்சி பரசு
எய்மழு காளம் கழுமுள் மூவிலைவேல் - பெய்சூலம்
சூழ்பருதி நேமி சுதெரிசனம் எஃகம் வளை
ஆழி திகிரி சக்கரம் (1)

416. ஞாங்கர் சத்தி எஃகு அயில் உடம்பிடி வேல் நாட்டம் அசி
தாங்கு உவணி மட்டாயுதம் கண்டம் - வாங்கு ஏதி
நாந்தகம் கண்டகம் கோணம் கட்கம் தூவத்தி
வாய்ந்த வசி வஞ்சம் நவிர் வாள் (2)

417. கத்தி கரவாளமும் வாட்காம் வேதினம் கர
பத்திரம் ஈர்வாள் உடைவாள் பைஞ்சுரிகை - வைத்த
குறும்பிடியாம் அரிவாள் புள்ளம் கொடுவாள்
இறும்குயமாம் ஈட்டி விட்டேறே (3)

418. கழுமுள் கழு பரிமுகம் கணையம் என்பது
எழுவாம் படைவட்டம் பாரா - வளைய மாம்
மெய் பீலி தண்டு பிண்டிபாலம் இருப்புமுட்கும்
கைவேற்கும் ஆம் கப்பணம் (4)

419. தறிகை கணிச்சி உளி தட்டை தழல் கிள்ளை
கறிகோல் குணில் கோல் கதை தண்டு - எறுழ் தடியாம்
தோமரம் குந்தம் சவளம் சொல் குளிர் குணில் பவணை
காமர் ஒடிசில் கவண் (5)

420. ஊசியின் பேர் சூசி ஊசித்துளைப் பேர் பாசம்
நாராசம் சலாகை எழுத்தாணி கண்டம் - ஊசியுமாம்
அச்சின் வயிரம் அசனி சதகோடி
வச்சிரம் சம்பம் குலிசமாம் (6)

421. நவியம் குடாரம் கோடாரியாம் கன்னம்
சுவர்களை இரும்பாம் துரோட்டி - அவிர் தோட்டி
கோணம் அங்குசம்தான் குளிர் முலைமூக்கரிவாள்
காண் எழுதுகோல் துகிலிகை (7)

422. கொட்டுஆம் மண்வெட்டி கொழு கோள் கூடம் சம்மட்டி
பட்டடையின் பேர் அடையாம் பற்றிரும்பு - கட்டு பொறி
அள்ளுஆம் முருடு குறடுஆம் துவக்கு இடங்கணியே
வள்ளு தொடர் சங்கிலியாமே (8)

423. கார்முகம் காண்டீபம் சாபம் சிலை சிங்காணி சிந்து
வாரம் கொடுமரம் துரோணம் முனி - கூர்தடி கோ
தண்டம் சராசனம் வேணு தனு வில்லாம் சார்ங்கம்
விண்டுவில் பினாகம் அரன்வில். (9)

424. நாரி தொடர் சிஞ்சினி நரம்பு ஆவம் பூட்டுவடம்
பூரி குணம் நாணாம் அம்புக்கூடு - சேர் ஆவ
நாழிகை ஆவம் தூணி நற்குதைப்பேர் குப்பி புங்கம்
நீள் விற்குதை குலை என்னே (10)

425. தோணி சரம் ஆசுகம் உரோபம் தொடை கதிரம்
பாணம் விசிகம் சாயகம் பகழி - காண் வாளி
பத்திரம் ஏ பூதை புங்கம் பல்லம் கோ மாற்கணம் கோல்
அத்திரம் சிலீமுகம் வண்டு அம்பு (11)

426. அம்புக் கட்டு புதை புழுக்காம் மொட்டம்பு உதண்டம்
அம்பீர்க்கு உடு சிறகு காம்பாம் கட் - டும்பாசம்
பற்றாக்கை சத்திரம் விடாப்படை விடும்படையே
அத்திரம் கைக்கட்டுறை கோதை (12)

427. ஆயுதப்பொது கருவி தானை படை ஏதி துப்பாம்
பாய்தடறு புட்டில் படையுறையாம் - காய் கூர்மை
வை அயில் பூ எஃகு வடி வள் வெள் வசி நிசியே
பெய் தீக்கணம் முனையின் பேர் (13)

428. ஆசு அரணம் சாலிகை சடாரி பரம் கச்சை கண்டம்
காசில் பருமம் தளம் மெய்க்காம் கவசம் - கோசகமே
சாத்தும் சிரகம் தலைத்திராணம் புருடர்
வேய்த்த பதப்பூண் கழலாமே (14)

429. தட்டு வட்டம் வேதிகை தோல் தண்டை கடம் சேடகம்
தகட்டம் பரிசை பலகை கிடுகு - வட்டணமும்
கேடகமாம் சட்டம் கிடுகின் பேராம் முருகு
கோடிகம் பூத்தட்டின்பேர் கூறு (15)

430. வெம்புனை சிருங்கலை விலங்கு நிகளம் தளையாம்
கொம்பு இரலை ஆம்பல் வயிர் கோடுமாம் - நன் பரணி
கோய் சிலாவட்டம் சாணைக்கல் குழாய் தண்டு ஆரை
பாய் கந்துகம் குதமும் பந்து (16)

431. சூடிகை கிரீடம் மகுடம் சுடிகை மோலி முடி
கோடகம் தாமம் பதுமம் கிம்புரியே - நீடு
மகுடம் முடியுறுப்பு அம்மாலை கரோடி
திகழ் தெய்வவுத்தி திரு (17)

432. தொய்யகம் தலைப்பாளை தொங்கல் உத்தி பிஞ்ஞகமே
செய் தலைக்கோலம் சேகரமும்ஆம் - பெய் நுதற்பூண்
சூட்டு இலம்பகம் புல்லகமாம் சுடிகை சுட்டி
நாட்டும் அரைஞான் இரதனம் (18)

433. ஏழ்கோவை மேகலை எண்கோவை கலாபம் காஞ்சி
தாழ் பருமம் ஈரொன்பான் தாமமே - சூழ் பதினாறு
எஞ்சா விரிசிகை நாலெண் கோவை தோரை கலா
பம் சரிமணிப் பேர் (19)

434. அரியகம் குடச்சூல் அரவம் ஞெகிழி
பரிபுரம் நூபுரம் சிலம்பாம் - பரல் அரியாம்
பாதகடகம் பாடகம் சதங்கை கிண்கிணியாம்
பாதசரம் பாதசாலம் (20)

435. வீகம் விரற்பூண் ஆழி மோதிரம் இலச்சினையும்
ஆகும் செவிப்பூ கன்னாவதஞ்சம் - தோய் குணுக்கு
கம்பியுடன் வல்லிகை கடிப்பினையும் காதணிப்பேர்
வம்பில் அரைப்பட்டிகை மனா (21)

436. சூடகம் சங்கு கன்று வண்டு தொடி பிடிகம்
சாடுகுருகு ஏழும் வளை தாடங்கம் - தோகு குழை
குண்டலம் கேயூரம் அங்கதம் தோள்வளை ஆரம்
கண்டிகை மதாணி பதக்கம் (22)

437. கடகப்பேர் கண்டிகை கங்கணம் கடைப்பூண்
மடை கயிலாம் தாமம் மணியின் - வடம் சரம் காழ்
ஆரமும் ஆம் கற்கள் அழுத்து குழி கேவணமாம்
சார்புறும் பூணூல் உபவீதம் (23)

438. ஆபரணம் பூடணம் பூண் ஆரம் அணி பண்டம் இழை
மா பணி கலன் கணியே வள்ளி நகை - சேர் வயிரம்
தாங்கி பூண் கோளகையும் கிம்புரியுமாம் தாலி
ஓங்கு நாண் மங்கிலியம் ஒது (24)

439. வட்டில் சிக்கம் கிண்ணம் கோரம் கடிகை வள்ளம் வட்டில்
தட்டம் தாலம் பாசனம் தளிகை - தொட்டு உண்
கலமாம் தவி அகப்பை காண் சட்டுவப்பேர்
திலகமாம் பேழை மஞ்சிகை (25)

440. சேகண்டி சேண்டி எறிமணி சின்னம் பீலி
காகளம் காளம் தாளம் பாண்டில் கஞ்சம் - ஆகும் இவை
கைமணி அடிக்கும்மணி கண்டை பரந்த வட்டக்
கைமணியின் பேர் படலிகை (26)

441. பீடிகை துமாணம் காண்டம் கண்டிகை கடிப்பம்
கோடிகம் பூண்கொள்கலனாம் கூடை இறை - கோடிகமே
கெண்டி கடபமும்ஆம் கேழ்க் கரண்டகம் கரகம்
குண்டிகை கமண்டலப்பேர் கூட்டு (27)

442. தர்ப்பணம் ஆடி ஒளிவட்டம் முகிர்தம் அத்தம்
கைப்படிமக்கலம் கஞ்சனம் - நற்புளகம்
கண்ணாடியாம் கஞ்சனை கலசப்பானையாம்
நண்அம்மனை அம்மானை (28)

443. தாலம் உக்கம் கால்செய்வட்டம் தண்விருந்தம் ஆலவட்டம்
பீலி சாந்தாற்றி விசிறியும் சிற் - றாலவட்டம்
வீசனமும்ஆம் ஓரை மின்னார் ஆடும் கலனாம்
ஊசல் உஞ்சல் ஊஞ்சல் உரை (29)

444. தொங்கல் பிச்சம் ஆதபத்ரம் சத்ரம் கவிகை குடை
கங்கம் சிக்கம் சீப்பாம் கச்சம் அம்பணம் - குளகம்
தூம்பு கால் நாழி படி குஞ்சம் தூக்கு சிமிலி
ஓம்பு சிதர் சிக்கம் உறி (30)

445. சிங்காதனம் பத்திராசனமாம் பாரி பரி
யங்கம் மஞ்சம் பாண்டில் கட்டிலாம் தளிமம் - பொங்கு பஞ்சி
மெத்தை அணையாம் பீடம் விட்டரம் பீடிகையே
நந்தும் தவிசு ஆசனம் (31)

446. கொட்டை உபதானம் தலையணையாம் கூர்தவிடு
முட்டை முடை நொய் நொறுங்காம் மூழிவாய் - பெட்டியாம்
அஞ்சிகமும்ஆம் துடைப்பம் சோதினியாம் மாறுஆம் சுருக்கு
செஞ்சுருவை நெய்த்துடுப்பு அதே (32)

447. படியகம் காளாஞ்சி படிக்கம் தீபமுட்டி
தடவு இந்தளம் பழுதை தாமம் - வடம் பாசம்
தாம்பு இரச்சு அக்கம் புரி நாண் கச்சை கயிறாம் இழை தந்து
ஆம் பனுவல் சூத்திரமும் நூல் (33)

448. சாலம் வலை அவ்வடம் மாசுஆம் மதலை கந்து நிலை
கால் எழு தாணு தறி தூண் குற்றி கம்பம் - மால் யானைத்
தூணும் தயிர் கடையும் தூணும் வெளில் யூபம் மகத்
தூண் போதிகை குறியதூண் (34)

449. அம்மி அரைகல் குழவி பற்றியரைக்கும் கல் குழி
யம்மி கலவம் குழிகல்லாம் மூடை - பம்மு குகை
மூட்டை பொதியல் ஒன்றில் கட்டியே தூக்குகின்ற
மூட்டை உடோளயமாம் (35)

450. உலக்கை முசலம் தடி உரல் கறை உலூகம்
மெலிப்பில் திட்டை மூன்றாம் வெளிசம் - வலித் தூண்டில்
ஏணியொடு சேணி இறைவையாம் மால்பு கண்
ணேணி பிழா இடாவே (36)

451. கோடி பஞ்சி தானை படாம் கோடிகம் இலக்கரம் பட்டு
ஆடை கலை சம்படம் ஆசாரம் மடி - சாடி புட்டம்
தூசு உடை உடுக்கை துகில் சூடிகம் வட்டம் சீரை
வாசம் கலிங்கம் அறுவை (37)

452. அம்பரம் கூறை இடையல் வேடகம் வேத
கம் பரிவட்டம் காழகம் கோசி - கம் புடவை
நீவியம் நாகம் பாரி நேத்திரம் பாளிதம் காம்பு
ஆவல் வத்திரம் சீலையாம் (38)

453. உத்தரிகம் ஏகாசம் உத்தராசங்கம் உல்லா
சத்தின் பேர் அத்தவாளம் வடகம் - பொத்தகமே
சித்திரப்படாம் நீவி கொய்சகம் முன்றானை தொக்கை
கொத்தான போர்வை மீக்கோள் (39)

454. வட்டுடை வார் பட்டிகையே வம்பு விசிகை கச்சாம்
தொட்ட குப்பாயம் காஞ்சுகம் வரணம் - சட்டை அங்கி
கஞ்சுகம் மெய்ப்பை எழினி காஞ்சம் அவிடி கண்டம்
கஞ்சிகை திரைப்படாம் காண் (40)

455. கம்பலம் சிம்புளி கம்பளம் மேற்கட்டி விதா
னம் படங்கு வானி குஞ்சம் நல்தலைப்பாம் - பம்பு இறைஞ்சி
வற்கலை சீலை மரவுரி மயிர்ப்படாம்
தைக்கும் வயிரம் சூழிதான் (41)

456. கத்திகை விலோதனம் தோகை இடக்கயம் படங்கு
சத்தி விடங்கம் படம் பதாகை கொடி - மெய்த் துவசம்
வானம் இடால் கேதனமும் ஆம் சும்பு வாக்கி குச்சாம்
ஆனமத்து மூழி மூழை (42)

457. சேட்டை தட்டு முற்றில் முறம் சின்னம் சூர்ப்பம் சுளகாம்
காட்டளி கிழார் ஆம்பி காராம்பி - பூட்டையாம்
வார் துணி வள் கண்டம் வகிர் கடிகை துண்டம் அதுஆம்
ஆர் துணி சிதார் சிதவலாம் (43)

458. சொல் கவறு வல் கழங்கு சூதாம் ஆயம் தாயம்
வெல் சாரி நாயாம் மிதியடி - பாவல் கழலும்
பாதுகை அக்கொட்டை குடை பாதம்காப்பு செருப்பாம்
பாய்து ருத்தியே சிவிறி பந்து (44)

459. கொல்லுலைமூக்கு குருகு சிவை அத்துருத்தி
வல்உதி அத்திரியாம் மத்திகையே - நல் விளக்குத்
தண்டு கவுசிகமாம் சாடு உரு சாகாடு ஒழுகு
பண்டி வையமும் சகடு என்பார் (45)

460. பண்டியுள்இரும்பு இருசு கந்துஆம் பல்லக்கு அணிதம்
தண்டிகை ஆந்தோளிகம் யானம் சிவிகை - ஒண் பள்ளி
மஞ்சிகையுமாம் ஊர்தி வாகனம் வையம் பாண்டில்
கஞ்சிகை தேர்பாடை வெள்ளில் காண் (46)

461. தேர் இரதம் எந்த்ரம் அரி செந்தனம் வையம் குயவுஆம்
ஆர் கதிராம் நேமி சில்லி ஆழி உருள் - பாரியம் கால்
உந்தி பருதி உதரி வண்டில் தேர்ச்சுற்று
முந்து கிடுகாம் கூம்பு மொட்டு (47)

462. நாப்பணும் தட்டும் தேர்நடு கொடிஞ்சி கூவிரம் தேர்ப்
பாப் பெயராம் தோட்டி கபாடம் புதவு - காப்பு ஆரி
வாரி கதவாம் தாழ் சீப்பு கடிப்பாம் வட்டிகையே
சீர் ஓவியம் சித்திரம் (48)

463. ஏடு சுவடி இலேகம் புத்தகமாம் வெள்
ளேடு உடன் அலேகம் எழுதாச்சுவடி - ஏடுஅதின் மேல்
பட்டை கம்பை என்பர் பசுத்தீண்டு குற்றி கண்டியம்
கட்டு அசை துலாம் துலை தூக்காம் (49)

464. வீணை கின்னரம் கருவி யாழ் விபஞ்சி கோடவதி
பேணுகலம் தண்டாம் பிரடை முறுக் - காணியின்பேர்
ழாடகமும்ஆம் வலிக்கட்டு திவவுஆம் வன்துயரி
நாடி குரல் தந்திரி நரம்பு (50)

465 பேரியாழ் செங்கோட்டியாழ் பின் சகோடயாழ்
வார்மருதயாழ் நால்வகை யாழாம் - வாரியுடன்
வங்கியம் இசைக்குழலாம் வாத்தியம் மேளம் பறை கொட்டு
அம்கோடணை முரசு இயம் (51)

466. தொண்டகமே துடியே பம்பை கிணை சாபறை நேர்
கொண்டு ஐந்திணைப் பறையாம் கூர்பவணம் - திண்டியாம்
மொந்தை பதலை திண்ணம் ஓர்கட்பறை முழவு
தந்த குளிர் முட்டு மத்தளம் (52)

467. தண்ணுமை நிசாளமாம் தட்டை கரடிப்பறையாம்
திண்இடக்கை ஆமந்திரிகையாம் - நண்ணு நந்தி
பேரிகையும் துந்துமியின் பேர் ஆனகம் படகம்
சார்திமிலை சல்லரிப் பேர்தான் (53)

468. குறியபறை ஆகுளி குடப்பறையே பன்றிப்
பறை தூரியம் மணப்பறைப் பேர் - அறை தமரு
கம் துடி உடுக்கை கடிப்பு குணிலாம் மண் பரிணம்
இந்து இரண்டும் மார்ச்சனை யாமே (54)

469. பாதை வங்கம் பஃறி அம்பி பாரதி சதா மதலை
போதம் மரக்கலம் நாவாய் யானம் - ஈது கப்பல்
தோணி ஓடம் திமிலி தெப்பம் மிதவை புணை
காணும் படுவை பட்டிகை (55)

470. இம்மரக்கலப்பாய் இதையாம் விசிப்பு அரியாம்
சும்மாடு அடை சுடுவுடன் சுமடு - சும்மை சுமை
ஏர் தொடுப்பு அலம் படை வாள் இன்கலனை நாஞ்சில் இவை
கூர்கலப்பை மேழியும் அக்கூற்று (56)

471. செற்றை மயல் சோதனி துரால் நரல் சிக்கு காடாம்
பற்று கலம் பாத்திரம் பாண்டப்பொதுப் பேர் - முற்று அகளம்
தாழி தளம் பதலை சாடியாம் சராவமுடன்
ஆள் சுத்திகையும் அகல் (57)

472. குடங்கர் குணம் தாலி கடம் கும்பம் கலசம்
இடங்கர் குடம் பாண்டில் இடிஞ்சில் - சுடர்த்தகழி
சட்டி விசளை கிடாரம் தவிசு கொப்புரியாம்
நட்டு இரக்கும்ஓடு கடிஞை (58)

473. சீகரம் கன்னல் சிரகம் தற்கரி நுவற்கரியும்
மாகரகம் மந்தனி தயிர்த்தாழி - பாய் குழிசி
தாங்கு உறை கரீரம் தடா மிடா பானை குண்டம்
வான் குடுவைக்கும் குண்டமாம் (59)

474. மொந்தை நீருண்கலன் உலாமி உலைமூடி செய்கூடு
உந்து குயிலாயத்துடன் பஞ்ச - ரம் தான்புட்
கூடு குடம்பை கட்சி கூண்டாம் குதிர் புகல் காற்
றாடி கதலி கறங்காம் (60)

475. தார் தெரியல் சுக்கை கண்ணி தாமம் ஒலியல் பிணையல்
ஆரம் படலை அணியல் சுருக்கை - சீர் இலம்ப
கம் கத்திகை சிகழிகை கோதை மஞ்சரி
அலங்கல் தொடை தொங்கலும் மாலை (61)

476. வாகை வெற்றிமாலை வட்டமாலை இண்டையாம் தொடரே
ஆகும் சரம் வாசிகை படலை - மோகச்
சிகழிகையாம் பள்ளித்தாமம் தேவர் பூசை
மகிழ் தார் ஈயோட்டி குஞ்சமாம் (62)

3. இட வர்க்கம்

477. வீடு அமிர்தம் முத்தி விபவருக்கம் ஆனந்தம்
நீடுசிவம் சித்தி நிருவாணம் - கூடுகதி
நின்மலம் சுகாதீதம் ஸ்ரேயம் நித்தம் கைவலியம்
இன்னும் பல மோக்கமே (1)

478. விண் துறக்கம் நாகம் விமானம் விசும்பு மேலுலகம்
ஒண்தானமே பொன்னுலகு கற்பம் - அண்டு உவணை
உம்பர் சுவலோகம் உயர்நிலை வானாடு சுவர்க்
கம் புவனம் தேவர் உலகம் (2)

479. நாகலோகம் பவணம் நற்பாதலம் பிலம்
அதோகதி பாதாளம் சுவப்பிரமே - வேக இருள்
கும்பி அளறு ஆவிரம் தீ நாரகம் பூதி நிரை
யம் பவர்க்கம் ஊழல் நரகம் (3)

480. பூமி பிருதுவி பார் பூ அகலிடம் தரணி
கோ மகி அளக்கர் பொறை கு அசலை - நேமிபடி
பாரி அகிலம் குவலயம் காசினி அவனி
தாரணி வசுந்தரை தலம் (4)

481. தாத்திரி தரை தரித்திரி பணாதரி மண்
கோத்திரி கிடக்கை சதுக்கோணி தறை - பாத்திபமே
சக்கரம் நிலம் புவி சலாம்பரி மாதிரமே
தக்க விபுலை வசுதை (5)

482. தாலம் உலகு இம்பர் வையம் சாந்தை விசுவம் புடவி
ஞாலம் வசுமதி நகம் பவனம் - பாலம் உகம்
பூதியம் ஏமாங்கி வையகம் பொழில் இகம் புவனி
மேதினி சகம் புவனமே (6)

483. தீவின் பேர் தீவிகை தீபம் கடற்குட்பூமி திட்டாம்
மா வேலி காணி திணை பூ நிலமாம் - காவலர்கள்
ஆளிடம் சமத்தானம் ஆதினம் ஆதிக்கம் விண்ணோர்
ஆளிடம் பதம் பதவியாம் (7)

484. மண்டிலம் இராச்சியம் தேயம் பைதிரம் வருடம்
கண்டம் அழுவம் சனபதம் சீமை - தண்ணடை நாடு
ஆர்ஏணி நீவரமும்ஆம் குடிஐந்நூறுள ஊர்
பேரூர் நூறுஉட்படில் சிற்றூர் (8)

485. பாக்கம் அருப்பம் சரணம் பாழி பள்ளி வேலி முட்டம்
பூக்கம் நியமம் பூரியம் பூண்டி - வாழ்க்கை குடி
வைப்பு உறையுள் சும்மை கிராமம் தாமம் பேட்டு அகலுள்
கற்பம் நிகாயம் புக்கணம் (9)

486. சேர்வு இருக்கை வேசனம் நிவேசனம் சார் வாழ்வு அகரம்
சேரி குடம் ஊர் பதியாம் பட்டி நொச்சி - ஊர்களில் சிற்
றூர் புவனம் தாவளம் வாசம் வசதியாம் மடம்பம்
ஊர்கள் அஞ்ஞூறின் தலைமை ஊர் (10)

487. கேடம் கருவடம் சம்வாகம் சீறூர் குறிச்சி
பாடுமலையூர் குறும்பு பாலை முல்லை - பாடி நெய்தல்
பட்டினம் தோணமுகமே பத்தனமாம் பாசறைப் பேர்
வெட்டு முனையூர் பாடிவீடு (11)

488. நாட்டுஊர் நகரி நகர் பட்டணம் புரம் புரியே
காட்டு நகரம் வளாகம் கொல்லை - தோட்டமாம்
ஆவணம் பீடிகை கூலம் கடை அங்காடியும்ஆம்
தாவுதக்கசம் சதுக்கம் தான் (12)

489. கோணம் முடுக்காம் குறுந்தெருக்கள் மறுகாம் நியமம்
சேண்வாடை சேடி சிரேணி சந்தி - பேணு ஞெள்ளல்
வீதி தெரு வையாளிவீதிப் பேர் செண்டுவெளி
மாதிருமுற்றம் பரிவட்டம் (13)

490. தெற்றி சித்ரகூடம் நாற்சந்தி சிருங்காடகமாம்
மற்று அம்பலம் பொது மன்றம் பொதியும் - பெற்றசபை
வேந்து இருக்கை அத்தாணி வேத்தவையாம் வைப்பிருக்கை
ஆய்ந்த பண்டசாலை அறை (14)

491. மாடம் மந்திரம் வசதி புக்கில் புரை இல்லம் மனை
வீடு வளவு இல் கிரகம் வேந்தர்பெண்வாழ் - வீடு கந்த
வாரம் அந்தப்புரம் தாழ்வாரமும் கற்படியும்
ஆரோகணம் சோபானம் (15)

492. தேவதலம் நிலையம் சேதியம் சேத்திரம்
கோவில் மந்திரம் சினகரம் கோட்டம் - மேவு தளி
ஆலயம் நிகேதனமாம் மாளிகை குலம் கோயில்
சாலம் கொட்டாரம் மன்னர்சார்பு (16)

493. பாழி மடம் தாபதம் கரண்டை பள்ளி ஆச்சிரமம்
மூழின் முனிவோர்வாசம் ஓம குண்டம் - தாழ்தடவு
வேதியுமாம் கோபுரம் வேரம் சிகரி தோட்டி புர
வாய்தல் வழித்திண்ணை அளிந்தம் (17)

494. வாயில் தொட்டி வாய்தல் கடை வாரி துவாரம் வாசல்
வாயிற்படி நடை நகம் சுருக்காம் - வேயுள் வேய்
மண்ணீடு மாடம் வளர் குறடு மண்ணீடு
திண்ணை திட்டை வேதிகையும் சேர் (18)

495. குட்டிமம் படுத்ததலம் கூடை குடில் குரம்பை
கொட்டில் சிற்றில்ஆம் சுள்ளை கொள் பாண்டம் - சுட்டிடும் பார்
சாலகம் சாளரம் வாதாயனம் சாலம் குறுங்கண்
காலதரும்ஆம் பலகணி (19)

496. சட்டம் வளையாம் முகடுதான் விடங்கம் தாள் தூபை
அட்டில் மடைப்பள்ளி அடுக்களையாம் - மொட்டாய்தம்
சுல்லி உத்தானம் குமுதம் காமரம் அடுப்பு இறப்பே
இல்லின் இறை வளவியே (20)

497. கல்வி பயிலிடம் கல்லூரி கழகம் பள்ளி
அல்லது இலங்கம் அரங்கமுமே - வல்படை கூத்து
ஆடிடமாம் தூம்பு அங்கணம் சலதாரைப் பெயராம்
தேடும் சுவர் பித்திகை (21)

498. துற்றும் ஒதுக்கிடப்பேர் துச்சிலாம் வேறிடப்பேர்
மற்றை ஏகாந்தம் ஒருவந்தமாம் - முற்றம் முன்றில்
அங்கணம் நிலாமுற்றமாம் அரமியம் சுருங்கை
வெம் கற்படை ஆகுமே (22)

499. மேடை பதணம் பரியகம் சூளிகை அகப்பா
சாடும் உபரிகையாம் சாவடியே - கூடம்
படிப்புரையாம் ஆசாரம் செச்சை மன்னர் செங்கோல்
நடப்பாகிய மனை நாமம் (23)

500. வேலி இஞ்சி ஆரை நொச்சி வேணகையே கோட்டை சிறை
சாலம் எயில் ஓதை அரணம் கடகம் - மேல் வாரி
காப்பு உவளகம் சிகரம் வேதி பிரகாரம் அகப்பா
புரிசைதான் மதில்பேர் பாடு (24)

501. ஓடை பரிகம் கிடங்கு உடு கேணி பாம்புரியும்
கூடு அகழ்ப் பேர் எந்திரம் கோசம் தோணி - நீடிய
நாஞ்சில் மதில்உறுப்பாம் ஞாயிலும்ஆம் சாலை பள்ளி
பூஞ்சத்திரம் அறப்புறம் (25)

502. நெல்லிடும் இல் கொட்டாரம் சேர் களஞ்சியம் களமாம்
நல் உறையுள் பாழி சயனம் பாயல் - மெல் அமளி
சேக்கை கட்சி பள்ளி அரி சட்டகம் படுக்கை பண்ணை
சேக்கை பட்டம் மாதுஞ்சிடம் (26)

503. ஈசுரன்ஊர் ஈசோவதியாம் மயேந்திரமே
ஆசுரம் மாயாபுரம் சூராதிகள் ஊர் - பேசுஇலங்கை
யாம்புரம் இராவணன் ஊர் ஆனைமுகன் ஊர் மதங்கம்
தாம்பிரை வாழ்ஊர் விருடாங்கம் (27)

504. மால்ஊர் வைகுண்டம் அயன்வாழ்ஊர் மனோவதியாம்
மேலை அமராபதி விண்கோ நகராம் - காலன் ஊர்
வைவச்சுதம் சேடி சேணி விஞ்சை வல்லவர் ஊர்
ஒவ்அளகையே தனதன் ஊர் (28)

505. வஞ்சி கருவூர் ஆலவாய் கூடலாம் மதுரை
கஞ்சி கச்சி காஞ்சி கனிஅவந்தி - உஞ்சையாம்
மேவு அவிமுத்தம் காசி மெய்வாரணாசியுமாம்
காவிரிப் பூம்பட்டினம் புகார் (29)

506. காழகம் கடாரமாம் கண்டியுடன் சிங்களமும்
ஈழம் வஞ்சி சேரன் இருப்பு உறையூர் - கோழியாம்
கோலம் வினிதை விரிசு கோசலை சாகேதம் ஐந்தும்
மால்இல் அயோத்தியின் நாமம் (30)

507. வேணுபுரம் சண்பை வியன் கழுமலம் புகலி
கோணில் சிரபுரமே கொச்சைபுரம் - தோணி
புரம் வெங்குரு புறவம் பூந்தராய் பொற்பாம்
பிரமபுரம் சீகாழிப் பேர் (31)

508. நெல்வேலி நெல்லை பிரமவிருத்தபுரம்
வல் வேய்வனம் தாரகவனமாம் - சொல் குளந்தை
ஏரிதங்குஊர் அத்தினபுரம் குருகுலேசர்கள் ஊர்
ஏரகம் சாமிமலையே (32)

509. செந்தில் செந்தூர் தில்லை சிதம்பரம் ஆரூர் கமலை
கொந்தார் குடந்தை கும்பகோணமாம் - பைந் தேவை
சேதுபுரம் என்ப இராமீச்சுரம் விதேகை எனும்
பேதுறாச்சொல் மிதுலைப் பேர் (33)

510. தேம் அரிதம் மாதிரம் திக்கு அம்பரம் விசும்பு உலகு
கோ முகம் புலம் காட்டை ஆசை திகை - தோமில் ககு
பம் திசை நான்மூலை விதிக்குஆம் குணக்கு பூருவமே
இந்திரி பிராசி கிழக்கே (34)

511. தென் வாசி யாமம் சிவேதை தெற்கு தெக்கணமாம்
மன்வாருணம் பச்சிமம் குடக்கு - நன் மேற்காம்
உத்தரம் வடக்கு உதக்கு உதீசி கவுபேரியமாம்
கத்தர்களால் பேர் மூலைக்காம் (35)

512. குத்தரம் சிலோச்சயம் கல் குன்று இறும்பு அடுக்கல் பறம்பு
அத்திரி சிலம்பு அரி சையம் தரணி - மைத் திகிரி
பொங்கர் கல்லகம் சயிலம் பொச்சை பொகுட்டு ஓதி சிமை
யம் குவடு நாகம் அசலம் (36)

513. பாதவம் விலங்கல் விந்தம் கோத்திரி வேதண்டம் நகம்
மாதிரம் வெற்பு ஓங்கல் கிரி பீலி சுரும்பு - ஓதிமம்
தராதரம் வீரம் பதலை பொற்றை பொறை விண்டு இரவி
பூதரம் பருப்பதம் பொருப்பு (37)

514. சக்கரம் பிறங்கல் வரை தாணு சிகரி மலை
பக்கமுறும் பாழி பதுக்கை துறு - கல் காண்டை
பாறை உபலம் சிலை பாடாணம் சிராவணம் கன்
தேறு கல் உலம் திரண்டகல் (38)

515. குன்றின் உச்சி கோடு கொடுமுடி கூடம் சிகரம்
குன்றுஅருகு வாரம் நிதம்பம் சானு - மென் தடமும்
சாரலும்ஆம் கந்தரம் முடுக்கர் முழைஞ்சில் விவரம்
கூர்முழை நிகுஞ்சம் குகை (39)

516. கயிலை விசையாத்தம் வெள்ளிவெற்பு ஈசன்வெற்பு
கயிலாயம் பொன்மலை மாமேரு - உயர்மலையே
வைத்த தனுமலை தேவாலயம் இராசமலை
அத்தும் வடமலையும் ஆம் (40)

517. தென்கிரி தமிழ்க்கிரி தென்றற்கிரி செம்புக்கிரி கும்
பன்கிரி இலிங்கம் மலையம் பொதியம் - நன்பொதியே
சந்தகிரியும் பொதிகை சக்கரவாளகிரி
உந்து வட்டவெற்பு உவளகம் (41)

518. ஆரணியம் கான் களரி அத்தம் சுரம் விடர் காந்
தாரம் கடம் வனம் தாவம் பழுவம் - கார்முளரி
பொச்சை கண்டகம் கானம் தில்லம் காண்டம் புறவம்
கட்சி கடறு அடவி காடு (42)

519. வல்லை பெருங்காடு சிறுகாடு இறும்பு வண் முதையல்
மெல் இலைபோங்காடு அழிகாடாம் இளவல் - சொல் விளை
காவற்காடு அரியல் குன்மம் வஞ்சி அறல் இறல்
பதுக்கை விடபம் செடியும் தூறு (43)

520. ஆராமம் கோடரம் உய்யானம் உத்தியானம் அரி
சூரார் உபவனம் கா சோலை பொழில் - வார் பொதும்பர்
தண்டலை மரச்செறிவும் தோப்புஆகும் பூந்தோட்டம்
வண்துடவை நந்தனவனம் (44)

521. வீரை அம்பரம் சலதி வேலை திரை தோயநிதி
வாரி மகராலயம் வேலாவலயம் - ஆர்கலி முந்
நீர் வாரணம் நரலை நேமி குரவை உப்பு
கார்கோள் பவ்வம் சாகரம் (45)

522. உந்தி அம்புராசி உததி அளக்கர் வெள்ளம்
சிந்து இரத்தினாகரமே திண்பரவை - நந்துஉவரி
தாழ்புணரி அம்போதி சக்கரம் ஓதம் பெருநீர்
ஆழி அன்ன அம்சமுத்திரம் (46)

523. வாருதி பாராடை நதிபதி அத்தி அரி
வாருணம் ஏழாறும் அறி கடல்பேர் - கூரும் உப்பு
பால் தயிர் நெய் இக்கின்பசுஞ்சாறொடு செந்தேன்
மீறு நன்னீர் ஏழ்கடலாமே (47)

524. ஓணம் துணி தடினி உந்தி ஓலியல் குடிஞை
சேள் நதி சிந்து ஆறாம் திரிபதகை - காண் விமலை
தீபவதி சானுவியே தீர்த்திகை மந்தாகினியே
ஆபகை பகீரதி கங்கை (48)

525. நாராயணி பிரமநாதை மருத்துவதி
வார்அம்பரவதி தன்மத்திரவை - ஆர் அமிர்தக்
கோலி கன்மநாசனி மகோதையை ஆனந்தி மங்க
ளாலையை முத்திமுத்திரை (49)

526. பகவதி உருத்திரை பராபரை பொருந்தம்
அகன்மிசை மாலேயி மணிமாதா - புகழ் திரையி
தீம்பொருனை நிட்களை கங்கான்மிகை மாலாரூபி
தாம்பிரபன்னியின் பேர் தான் (50)

527. கன்னி குமரிப்பேர் கவுதமையின் பேர் கோதை
துன்னிய வாணி சரசோதியாம் - பொன்னியொடு
காவிரி காவேரி கோதாவிரி விருத்தகங்கை
நாவினி காளுந்தி யமுனை (51)

528. வைகையின் பேர் வேகவதி வாலை சித்திராநதியாம்
மொய் தாம்பிரானுசையோடு ஆத்திரையும் - பெய்கடனை
சாமாநதி உருத்திராணி அயிராணியோடு
ஆம் ஆத்திரை பச்சையாறு (52)

529. கான்யாறு முல்லை கலுழியாம் காயல் கழி
கானல் முரம்பாம் கழிமுகம் புகார் - ஆன
கயவரி அதோமுகம் போந்தாம் உவளகத்தோடு
உயர் அளக்கராம் உப்பளம் (53)

530. பாரியம் பாராவாரம் வேலை பரவைக்கரையாம்
வாரம் அணை கோடு வரை கூலம் - தீரம்
வரம்பு தடம் பாரம் கரை செய்கரைதான்
குர்ம்புடன் சேது குலை (54)

531. பட்டம் மடு ஓடை குண்டம் பண்ணை சுனை கேணி பொய்கை
குட்டம் வட்டம் வாவி படு கோட்டகமே - புட்கரணி
ஊருணி இலஞ்சி உவளகம் கயம் படுகர்
ஏரி தடாகம் கிடங்கு ஏல்வை (55)

532. பங்கம் அலங்கல் சரசு சூழி பல்வலம்
தங்கல் இலஞ்சகம் சலந்தர்மே - பொங்கு அலந்தை
நீர்நிலை தடம் குளமாம் நீடு எந்திரவாவி
சேரும் இல்வந்திகை (56)

533. ஆற்றினிடப்பேர் இலங்கை அரங்கம் துருத்தி
மாற்று அசும்பு கூவல் கூவம் கிணறாம் - ஊற்று உறவி
துன்றும் சிராவமும்ஆம் தூதி புளினம் மணற்
குன்று உவராம்பார் இருணம் கூறு (57)

534. நீர்க்கண் வினை செய்யும் நிலம் துறை நீரூர் பாதை
ஆர்க்கும் பிராறு வழாறாம் அறலே - ஏர் கார்
மணல் சிதகம் வாலுகமும் வெண்மணலின்பேர் நுண்
மணல்பேர் அதர் அயிரும் ஆம் (58)

535. தாழ்வு இழிவு அதம் பயம்பு அவல் படுகர் ஞெள்ளல் குழி
கீழ் உவளகம் கிழக்கும் பள்ளம் வெட்டை - பாழ் கரம்பு
ஓது புற்பார் காட்டுவலம் ஊர்த்தம் இசை சுவல் மேல்
மீது உயரம் திட்டை திடர் மேடு (59)

536. தொய்யில் அசறு அள்ளல் பங்கம் தோணி காலாழ் சகதி
செய்யல் குழை சேதகம் செதும்பு அளறு - பெய் குழம்பு
கொள்ளம் நொதி சேறாம் செலவு அள்ளை பொய் பொந்து புழை
பொள்ளல் புடை வன்மீகம் புற்று (60)

537. வன்குறிஞ்சி பாலை முல்லை வாழ்மருதம் நெய்தல் ஐந்தும்
நன் கிரி சுரம் காடு நாடு கடல் - ஒன்று தினை
நெல் விளையும் நன்செய் சாலேயம் உருவரை தான்
எல்லாம் விளை புன் செயே (61)

538. கைதை பண்ணை ஆலவாலம் கழனி பானல் பணை
செய் தடி மா கண்டம் செறு பழனம் - துய்ய
வயல் விளைநிலம் குரம்பு மாசி வரம்பே
அயல் வரப்பாம் கங்கு அவ்அருகு (62)

539. செவ்வல் செந்நிலம் கருநிலம் கரிசலாம் சிறுச்செய்
அவ்வதின் பேர் பாத்தி குண்டில் ஆகுமே - ஒவ்வு
மருத நிலம் முத்தம் மென்பால் வண்குறிஞ்சி முல்லை
பரிபுறவம் வன்பால் பாலை (63)

540. புறணி களர் அழல் பைங்கூழ் பிடியாய்ப் புன்செய்
நிறைதரிசு உழாத நிலமாம் - வறிய
கமர் விடர் நிலப்பிளப்பாம் கைப்பற்றக் கூடாத
அமர் நிலம் துருக்கம் அருப்பம் (64)

541. தாரி செப்பம் பாதை சரி வதி தடம் பதவை
வாரி வகிர் கட்சபுடம் மார்க்கம் அதர் - தாரை வகுந்து
ஆறு இடவை கற்பம் அயனம் செலவு ஒழுக்கம் நெறி
கீறுஇயவை அத்தம் கிறி (65)

542. வட்டை நடவை கடறு பத்ததியே வயவை
பட்டம் வழியாம் கவலை பல்கவர்ச்சிப் - பட்டவழி
சின்னெறி இடங்கர் புதுவழி மரீசி பொல்லாத்
துன்னெறியின் பேர் கடம் சுரம் (66)

543. வெளி வெள்ளிடை யாகும் வெம் போர்க்களம் செங்
களமே பறந்தலை விளாகம் - களரி சுடு
காடு மயானம் சுடலை காளவனம் ஈமம் இடு
காடு புறங்காடு பிணக்காடு (67)

544. பால் இடை இல் வாய் முதல் உள் பாடு உழை வசம் சார் கீழ்
கால் புலம் வலம் புறம் தேம் கண் புடை சூழ் - மேல் வழி பின்
பாங்கர் படி மாடு உழி முன் பாரிசம் மருங்கு தலை
ஞாங்கர் சிறை வைப்பு அகம் தானம் (68)

545. கடை அயல் வயின் களம் பக்கம் தான் இடம் இவ்
விடம் இவண் ஈண்டு இம்பர் இதா இங்கு அவ் - விடம் உம்பர்
ஆண்டு ஆங்கு அவண் உவண் அதா எவ்விடம் யாங்கே
யாண்டு எவண் எங்ஙனமும் ஆம் (69)

546. பாங்கர் புடை மாடு புறம் பாரிசம் பால் சார் மருங்கு
ஞாங்கர் சிறை ஓரம் விளிம்பு பக்கம் - ஓங்கு வலம்
தக்கணமாம் வாமம் இடம் அந்தர் அகம் உள் புறம்தான்
புக்க பகிர் வெளி புறம்பு (70)

4. கால வர்க்கம்

547. பங்கயப் பூ நூறு அடுக்கி பாய்ச்சு ஊசி ஓர் இதழ் பாய்
அங்கு அதுவே காலம் அது எட்டே - தங்கு கணம்
அவ்எட்டாம் ஓர் காட்டை அவ்எட்டாம் ஓர் நிமிடம்
அவ்எட்டே ஓர் துடி அதுஆம் (1)

548. நால்துடி ஓர் மாத்திரையே நல்இலகு அவ்இரண்டே
ஊற்றுகுரு ஆகும் உயர் குரு மூன்று - ஏற்றுவது
தாழும் வினாடி அது தான் அறுபான் நாழிகை அவ்
ஏழரையாம் ஓர் சாமமே (2)

549. சாமம் நான்கு ஓர் பொழுது சார் பொழுது இரண்டு ஓர் நாள்
ஆம் அது முப்பான் மாதம் அவ்இரண்டே - யாம் இருது
மூன்று இருது ஆம் ஓர் அயனம் முற்று அயனம் ஓர் இரண்டு
தான் தழுவில் ஓர் ஆண்டு அதுஆம் (3)

550. ஆண்டு ஓர் முந்நூற்றுஅறுபான் அண்டர்கள் ஆண்டுஆகும் அந்த
ஆண்டு ஆயிரத்து இருநூறு அவ்விரட்டி - யீண்டு மும்மை
நான்மை கலியாதி யுகம் நான்கினுக்காம் நான்குஉகமும்
நான்மடங்கு ஐஞ்ஞூறு அயனோர் நாள் (4)

551. அந்நாள் முந்நூற்றுஅறுபது ஆண்டது நூறு அம்புயத்தோன்
தன் ஆயுள் ஓர் பிரமன் சாயில் ஒரு - நன்னாளாய்
அங்கது முந்நூற்றுஅறுபது ஆண்டு ஆயது நூறே
செங்கண்ணுக்கு ஆயுள் எனத் தேர் (5)

552. ஈட்டும் ஒரு மாத்திரை இமைப்பு இறை நொடி பொழுதாம்
நீட்டித்தல் பாணித்தல் நெட்டித்தல் - கூட்டு நெடும்
போதாம் கிரேதம் திரேதம் துவாபரமே
ஓது கலி நான்காம் உகம் (6)

553. எல்லி நத்தம் கங்குல் நிசி யாமினி விபாவரி ரா
அல் இரவு இராத்திரி திவா பகல் ஞான்று - எல்லை வைகல்
ஆனியம் தினம் திவசம் அல்கல் பகல் நாள் புலரி
தான் விடியல் வைகறை உசல் (7)

554. அந்தி சந்தி மாலை சாயம் சாம்ம் யாமம் நென்னல்
முந்தை நெருநல் முன் நேற்றாம் நாளை - பிந்தை பிற்றை
நண்பகல் மத்யானம் உச்சி நாடி இருத்தை கன்னல்
வன்கடிகை நாழிகைப் பேர் வாழ்த்து (8)

555. வாலிசினி இந்து உள ரா மற்று அது இலி ரா குகுவாம்
காலை செவ்வி போழ்து அமையம் கால் பதம் ஞான்று-ஏல்வையொடு
வேலை தருணம் சமயம் வேளை கொன் நேரம் பொழுது
காலம் அன்னம் பாணியுமாம் காண் (9)

556. காலை பிராதம் காலநுட்பம் கலை விகலை
ஆலும் நெடுநாள் சிரம் வாணாள் அகவை - சால்ஆயசு
ஆயுள் பிராயம் வயதாம் கற்பம் அயன் வாழும் நாள்
சாயும் மதி திங்களும் மாதம் (10)

557. வருடம் வற்சரம் சமை ஆண்டு ஆயனம் பெரும்போது
இருது ஆனியம் பருவம் ஆண்டில் - அரை அயனம்
கார்நாள் நவம் அமை கதிர்க்கூட்டு அமாவாசி
பூரணைப் பேர் பவ்வம் உவா போற்று (11)

558. ஆட்சி வாரம் கிழமையாம் திதி பக்கம் திதியின்
மூட்டு முதல் தொட்டு ஐந்தாய் மூன்று வட்டம் - கூட்டு நந்தை
பத்திரை சயை இருத்தை பூரணை அப்பால் முகிழ்த்தம்
நத்து இலக்கினம் கணித்த நாள் (12)

559. கார் கூதிர் முன் பின் பனி இளவேனில் வேனில்
பேர் ஆவணிமுதல் பெரும் பொழுதுஆறு - ஓர் நாளில்
காலை உச்சி எற்பாடு மாலை யாமம் புலரி
போலும் உதையாதி சிறுபோது (13)

560. ஏயும் வருடம் சரலே ஏமந்தமே சிசிரம்
ஆய் வசந்தம் சீட்டுமம் என்று ஆறு - ஆயுப் பேர்
ஆவணி முன் ஈரிரண்டாம் பெரும் போழ்து ஆறினுக்கும்
காவல் உகம் ஊழி மடங்கல் (14)

561. பூதம் இறப்பாம் பவுடியம் தான் எதிர்வு நிகழ்வு
ஆதல் வர்த்தமானம் அப்போது அன்று இனி இப் - போது இன்றாம்
என்று எப்போது எப்போதும் சந்ததம் சதா நித்தம்
என்றும் அனவரதமே (15)

562. வல்லை துரியம் சடுதி ஈண்டே கடுப்பு விதப்பு
ஒல்லை நிபுடம் சீக்கிரம் கதழ்வு ஆசு - எல்லாம்
விரைவு பதம் தாழ்த்தல் பைய மெல்லவென்னல் மந்தம்
வரை விளம்பிதம் தாமதம் (16)

563. தொல்லை முன் புராணம் முந்தை தொன்மை தொன்று ஊழ் பூருவம் பண்டு
ஒல்லை புராதனம் கிதம் பழமை - சொல் கோடி
நூதனம் நவம் கடி புத்தேள் அபிநவம் விருந்து
அபூதம் வம்பு யாணர் புதுமை (17)

5. சினை வர்க்கம்

564. இயற்கை சுயம் சுயம்பு தானே உண்டாதல்
செய்றகை பிரதிட்டை திரியக்கே - பயிற்று அறிவில்
சென்மம் பிராணி சன்பதம் சாதம் பிரசை
சென்மி செந்தும் உற்பவித்தத்தே (1)

565. தேகம் உடல் காத்திரம் மெய் பூட்சி புரம் ஆதாரம்
ஆகம் உயிர்நிலை காயம் சடலம் - தோய் குரம்பை
புட்கலம் கனம் புணர்ப்பு உடம்பு கடம் யாக்கை சடம்
விக்கிரகம் பூதியம் விம்பம் (2)

566. தாபரம் தனு புதை கலேபரம் சரீரம் உயிர்
ஆவி பிராணன் சேதனன் ஆதன் - சீவன் அணு
சின்மயனே புட்கலன் கிஞ்சிக்கன் சதசத்து
மன்இயமான் உள்ளமும் ஆன்மா (3)

567. மேனி சட்டகம் படிவம் வேடம் உரு மூர்த்தம் வடிவு
ஊன்சொரூபம் மெய்க்குறையே யூபம் மட்டை - யீனக்
கவந்தம் அழனம் பிணம் களேபரம் பிரேதம்
சவம் குணபம் குணங்கும் சாற்று (4)

568. முந்தும் உயிர்த்தத்துவம் எண்மூன்று விச்சாதத்துவம் ஏழு
ஐந்து சுத்தம் பூதக்கூறு ஐயைந்து ஈ - ரைந்து வளி
நாடி பத்து முக்குணம் நால்வாக்கு வசனாதி ஐந்தே
ஏடனை மூன்றாம் கருவியே (5)

569. புவி நீர் தீ கால் வெளி ஐம்பூதம் ஐம்புலன் தான்
செவி உடல் கண் நாக்கு மூக்கு ஆகும் - சுவை ஒளி ஊறு
ஓசை மணம் ஐம்பொறி வாய் கால் கை உபத்தம் குதம் ஐந்து
ஆசை தரும் கன்மேந்தியம் (6)

570. சித்தம் அகங்காரம் புத்தி மனம் நாற்கரணம்
இத்தொகை எண்மூன்றும் உயிர்த்தத்துவமாம் - வித்தியா
தத்துவம் ஏழ் காலம் நியதி கலை வித்தை இச்சை
பொய்த்திடா மாயை புருடன் (7)

571. சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியமே சத்தி சிவம்
சுத்தம் ஐந்தாம் என்பு மயிர் தோல் நரம்பு - நெய்த்தசை பார்
கூறு ஐந்து நீர் உதிரம் விந்து நிணம் மூளை புனல்
கூறு ஐந்து எனவே குறி (8)

572. ஊண் துயில் பயம் புணர்ச்சி சோம்பு அனல்கூறு ஐந்து ஓடல்
ஈண்டு கிடை நடை இருக்கை நிலை - மாண் கால்கூறு
ஐந்து சினம் மோகம் அசூயை மதம் உலுத்தம்
ஐந்தும் வான்கூறு என்று அறி (9)

573. அரிய பிராணன் அபானன் வியானன்
சரிவில் உதானன் சமானன் - கிரிகரனே
நாகன் கூர்மன் தேவதத்தன் தனஞ்சயன் என்று
ஆகும் இவை வாயு ஈரைந்து (10)

574. இடை பிங்கலை சுழிமுனை காந்தாரி
திடமது சேர் அத்தி சிகுவை - படரும்
அலம்புடை பூடா சங்கினி குதம் என்று ஆகும்
பலம் பொருந்து நாடிகள் ஓர் பத்து (11)

575. சாத்துவிதமே இராசதம் தாமதம் என்று
ஏத்து குணங்கள் இவை மூன்றாம் - வாய்த்ததொரு
சூக்குமை பைசந்தி மத்திமை வைகரியாய்
வாக்கு நான்கு என்றே மதி (12)

576. தாக்கு வசனம் கமனம் தானம் விசர்க்கு ஆனந்தம்
வாக்காதி ஐந்தின் வரும் விடயம் - வீக்கு பொருள்
மண் சுதன் மூன்று ஏடணையாம் மற்று இவை தொண்ணுற்றாறு
மெண்கருவி தத்துவம் என்பார் (13)

577. ஒன்றே மனம் தொழிலால் நாற்கரணமாம் அதின் பேர்
என்று ஆகும் சித்தம் இதையம் நெஞ்சம் - துன்று புந்தி
உன்னம் சகம் புத்தி மதி உள்ளம் அகங்காரம்
முன்னம் மனம் என்னும் மொழி (14)

578. அங்கிரி பதம் சலனம் தாள் சரணம் பாதம் அடி
பைங்கழலும் காலாம் பரடு கரடு - அம்கரண்டை
காண் கணைங்கால் சங்கம் முழங்கால் முழந்து சானு முட்டாம்
மாண் குறங்கு ஊரு துடை கவான் (15)

579. கோசம் இலிங்கம் பகம் பூ குய்யம் இவை யோனி குறி
வீசு உபத்தம் இப்பொதுவாம் அண்டம் விதை - பீசம் அதுஆம்
ஆதாரம் மூலம் குதம் ஆசனம் பிருட்டம்
ஓது சமனம் பாயுரு (16)

580. உக்கம் நடு மத்தியம் நுசுப்பு அரை மருங்கு இடையாம்
ஒக்கரை விலா கோடணம் உதரம் - குக்கி
மடி மோடு அகடு வயின் கும்பி வயிறு எட்டாம்
கடிதடம் நிதம்பம் அல்குல் காண் (17)

581. நாபி இலஞ்சி உந்தி போகில் இதலை கொப்பூழ்
மார்பு அகலம் ஆகம் மருமம் உரம் - ஏர்பாம்
இருத்து நெஞ்சாம் கைமூடு இசை கமுக்கூடு அக்கில்
அரைப்புறம் குறுக்கு இடுப்பு என்று ஆம் (18)

582. கொம்மை குரூஉக்கண் சுவர்க்கம் கொங்கை நகில் சேக்கை பறம்பு
அம்மம் பயோதரம் குயம் தனமாம் - வெம் முலைக்கண்
சூசுஆம் சிலீமுகம் அக்காம்பு கைதோள் பாணி அத்தம்
வீசு கரம் ஓர்கை அராளம் (19)

583. அங்கை அகங்கை குடங்கை உள்ளங்கை கூர்ப்பரமே
முன்கை முழங்கை மொழி மணிக்கட்டு - அம்கிலுத்தம்
அங்குலி விரற்கு உகிரேயாம் நகம் தோள் வாகு மொய்ம்பு
துங்கப் புயம் நிவம் தோள்மேல் (20)

584. பெருவிரல் அங்குட்டமாம் தற்சனியே சுட்டு
விரல் மத்திமை நடுவிரல் பேர் - தரி
மோதிரவிரல் அநாமிகையாம் சின்னவிரல் சுண்டு
விரல் கனிட்டை என்று ஆகுமே (21)

585. நெரிசல் சுணங்கே திதலை தேமல் பொறி துத்தி
வரி பசலை கோரை புறம் வீரம் - வெரின் அபரம்
வென் முதுகாம் காடி எருத்தம் சிறு புறம் கயிலே
அன்ன சுவல் பிடர் என்றாம் (22)

586. கந்தரம் கண்டம் களம் கிரீபம் கழுத்து அணலே
வந்த மிடறு அண்ணம் உண்ணாக்கு அண்ணம் அணல்-முந்து அணரி
கீழ்வாய்ப்புறம் கன்னம் கேள்வி வள்ளு காது செவி
ஆழ் சோத்திரமும் அதற்காம் (23)

587. ஓட்டம் இதழ் வாய் அதரம் பாலிகை முத்தம் உதடாம்
பூட்டு கதுப்பு கவுள் கபோலம் அனு - காட்கொடிறு
கன்னமாம் நாசி துண்டம் ஆக்கிராணம் கோணம்
என்னும் மொழி மூக்கின் பேரே (24)

588. தாரம் அக்கம் நேத்திரம் கோ சக்கு ஈக்கணம் நாட்டம்
பார்வை திட்டி திக்கு அம்பகம் திருட்டி - கூர்நயனம்
கண் விழி விலோசனம் நோக்கம் திருக்கும்ஆம் தாரை
கண்மணி விளிம்பு இமையாம் காண் (25)

589. பூரு புரூரம் புதல் குடி பிரு புதடி
பீரு புருவம் பிறைநுதலின் - பேர் பனிச்சை
பாலம் மத்தகம் சூறை பண்டம் குளம் அளிகம்
மேலும் இலாடம் நெற்றியே (26)

590. துண்டம் வத்திரம் வதனம் தோன்று ஆனனம் முகமாம்
தண்சிபுகம் தாடி தட்டம் தந்தம் எயிறு - அண்டு நகை
மூரல் தசனம் முறுவல் பல்லாம் நா தாலம்
ஆர் சிகுவை தாலுவும் நாக்காம் (27)

591. சென்னி உத்தமாங்கம் முண்டம் சேகரம் சிரம் சிகரம்
முன்உவ்வி மத்தகம் கம் மூர்த்தி தலை - நன்முடியாம்
கொண்டை மயிர்முடி பந்தம் தம்மிலம் கொப்பம்
கண்ட பின்னகம் சிகழிகை (28)

592. தொங்கல் குஞ்சி ஓரி கசாளம் சுரியல் பித்தை சிரோந்
தம் குழல் மராட்டம் உளை தார் கதுப்பு - பங்கி உரோ
மம் தளை கேசம் தான் மயிராம் மயிர்க்குழற்சி
கொந்தளம் விலோதம் எனக் கொள் (29)

593. கூழை குருள் ஓதி குரல் கொந்தளம் விலோதம் ஐம்பால்
வாழ் அளகம் கூந்தல் மடவார் மயிராம் - சூழி
சுடிகை நவிரம் முச்சி உச்சி சிகை சிக்கம்
குடுமி சிமிலியுமே கூறு (30)

594. பின்னல் கபர்த்தம் சடிலம் வேணி சடை குடிலம்
மன்னு கோடீரம் மயிர்த்திரளாம் - துன் எலும்பே
என்பு அழனம் அத்தி களேபரம் கங்காளம் முழு
என்பு கபாலம் தலையோடு என் (31)

595. பொச்சை தொலி தொக்கு புனிறு உரி துவக்கு அதள் வார்
பச்சை வடகம் கிருத்திமம் துருத்தி - மெய்ச்சருமம்
தோலாம் நிணப்பேர் துதைமேதை சவ்வு விளர்
மேலாம் கொழுப்பு வெளுப்பு (32)

596. வள்ளுரம் புண் தூவு சதை மாஞ்சம் தசை புளிதம்
தள்ளும் பிசிதம் தடி விடக்கு ஊன் - உள் இறைச்சி
மச்சை வழும்பு வழுக்கு முப்பேர் மூளை என்பர்
எச்சமுறும் ஈருள் ஈரல் (33)

597. சோரி உதிரம் கறை நெய்த்தோர் குருதி சோணிதம் புண்
ணீர் சுடுவல் செம்பால் செந்நீர் எருவை - சார் இரத்தம்
கத்து கொளுத்து முட்டு கந்து சந்து உடற்பொருத்தாம்
அத்து அரலை தான் கழலைக்காம் (34)

598. புலவு புலால் ஊழ்த்தல் முடை புன் திரை திரங்கல்
பலிதம் சரை நரை மெய்ம்மாசே - மலம் அழுக்கோடு
ஊத்தை கன்மிசம் களிம்பாம் நீர் சிறுநீர் அமுரி
மூத்திரம் என்றே பெயர் ஓர் மூன்று (35)

599. தீட்டம் அமேத்தியம் பவ்வீ நரகல் ஆகும் மலம்
வீட்டு இலத்தி சாணி சாணாகம் விட்டை - ஓட்டும்
புழுக்கை கட்டம் காரம் இவை புள் விலங்கே ஆதி
இழுக்காம் உயிர்கள் மலமே (36)

600. ஆந்திரமும் குடரும்ஆம் குடல் வாயாலெடுத்தல்
வாந்தி வமனம் சத்தி ஊற்காரம் - பாந்தம் அதுஆம்
அன்னம் மலம் நீர் கருப்பம் அன்றி மனம் கட்டுறும் பை
இன்ன ஐந்தும் ஆசயங்களே (37)

601. விந்து அமுதம் சுக்கிலம் வித்தாம் சோணிதம் நாதம்
இந்திரியம் வீரியம் இப்பொதுப் பேர் - இந்திரியம்
வாயில் கந்தமும் பொறி தன்மாத்திரையோடே விடயம்
ஆய இரண்டும் புலனுக்காம் (38)

602. அங்கம் உறுப்பு அவையவம் சினையாம் சேக்கை வசி
அங்கிதம் உடல்தழும்புஅதுஆம் நரம்பு - சங்கனனம்
நாடி சிரையாம் கோழை ஐ காசம் சேற்பம் வரை
போடு இறை இரேகை பொறி (39)

IV. குணநாமப் படலம்

1. உயிர்ப்பொருள்: மனக்குண வர்க்கம்

603. மரபு இலக்கணம் கிழமை மாலை சுபாவம்
பரிசு விதி பெற்றி இயல் பான்மை - விரிபகுதி
சால்பு சகசம் தகை நீர் தன்மை படி வண்மை குணம்
பால் இயல்பு கொள்கை முறை பண்பு (1)

604. சேதனம் சைதன்யம் உரம் ஞாபகம் சிதம் தெருட்சி
மேதை புலன் விற்பனம் விவேகம் மதி - போதம்
அறிவு உணர்வு ஞானம் முதுக்குறைவு அத்தின்மை
அறிவிலி அசேதனம் என்றாம் (2)

605. கண்ணல் சுட்டல் பேணல் கருதல் நுதலல் குறித்தல்
எண்ணலாம் சிந்தை கருத்து இங்கிதம் சுட்டு - எண்ணம் முன்னம்
நாட்டியம் தியானம் நினைவு யோகம் குறிப்பாம்
ஈட்டும் அப்பேர் வெங்கியமுமே (3)

606. பாவகம் பாவம் பாவை பாவனை அகம் செடியாம்
சார்வரையறுத்தல் கணித்தல் குணித்தல் - மேவும் அமைச்சு
உத்தி மந்திரம் சூழ்ச்சி யூகம் உபாயம் தேர்ச்சி
தத்தும்அளப்பு ஆலோசனை (4)

607. உன்னல் மானை சிந்திப்பு ஊழ்த்தல் நிருவித்தல் உள்ளல்
முன்னல் படர்தல் நினைத்தலாம் - மன்னல் துஞ்சல்
தாணுச் சதம் திரம் சாசுதம் சிரஞ்சீவி
ஏண் நிலைபேறு ஆகும் இவை (5)

608. ஈரம் நேயம் புரிவு ஆணம் பாசம் பத்தி பரிவு
ஆர்வம் நார் அன்பு எழுமைஅன்பு உழுவல் - போர்மை
கருணை இரக்கம் தயாவே கிருபை
அருள் அளி அனுக்கிரகமாம் (6)

609. தருமம் அறன்சுகிர்தம் புண்ணியம் தன்மம்
பெருநல்வினை தீவினையே - வருதோடம்
பாதகம் பவம் பழி பாவம் தாபரம் தம்பம்
ஆதாரம் தாரகம் தஞ்சம் (7)

610. நன்கு விழுமம் கடவுள் நன்னர் நயம் சேடு ஒண்மை
நன்று உத்தமம் நறுமை யாணர் சிவம் - நன்மை நலம்
நோன்றல் சமித்தல் சகித்தல் பொறையே பொறுத்தல்
சான்று கரி சாட்சி தான் (8)

611. தொய்யில் கடிஇன்பம் சுகம் இரமியம் தமிசம்
எய்துஇதம் ஆனந்தம் மலர்வு ஏமம் நகை - மெய்மகிழ்வாம்
ஓகை மாராயம் உவகை சந்தோடம் பிரியம்
நாகார் பிரகருடணம் (9)

612. கோணை சத்து கன்னி குமரி அழிவின்மை தகை
காணி கெழு பால் பாங்கு உரித்து ஆட்சி - மாண் கிழமை
தாயம் உரிமைப் பேர் சம்பாத்தியமாம் தேட்டம் வருவாய்
புகுதி வாரி வரத்து (10)

613. நீதம் மரியாதை நெறி ஞாயம் நியாயம் கிரமம்
ஓதுநிறை நற்குணம் வழாமை குடிப்பேர் - திணையாம்
சாதி வருணம் வழி இனம் குலப்பேர் ஒன்றினில்சில்
பேதம் வருக்கம் எனும் பேர் (11)

614. சமுதாயம் சாமானியம் பொது விசேடம்
நிமித்தியம் திரு சீர் உசிதம் - அமர்சிறப்பே
யோக்கியம் சம்பிரமம் திவ்வியம் சொம்பு ஏரணமாம்
ஊக்கம் உரன் உள்ளமிகைக்கு ஓது (12)

615. செய்தி நடை மஞ்சரி சாரித்திரம் சீலம் தனம் வார்
கை இயல்பு ஆசாரம் திணை ஒழுக்கம் - பெய் அழுக்காறு
ஆர் மனக்கோண் மாற்சரியம் அவ்வியம் அசூயையும்ஆம்
கூரம் நோனாமை பொறாமை (13)

616. தூய்து சுசி பாவனம் தூய் வேத்தியம் சுத்தம் சவுசம்
பூதம் பவித்திரம் துப்பும் புனிதம் - தூய்திலி
உற்பாதம் தீட்டு துடக்கு ஆசூசம் வாலாமை புலை
சூதகம் ஈன்றண்மை புனிறு (14)

617. வெண்மை சைசவம் புருவை வின் போதகம் குழவு
கொம்மை எவ்வனம் குருளை கோமளமே - செம்முருகு
நாகு இளை வாலம் தருணம் நன்மழவும்ஆம் இளமை
மூள்கிழம் விருத்தம் முற்றல் மூப்பு (15)

618. தீரம் பராக்கிரமம் சேவகம் திராணிதிறம்
சூரம் வல்லபம் தயிரியம் துரமே - வீரியம்
ஆண்மை சதுர் சத்தி சமத்து சவுரியம் வீரம்
ஆண்மையிலி கோழை பெண்மையாம் (16)

619. வெற்றி முல்லை வாகை விசையம் வலன் ஆடு செயம்
கொற்றம் வென்றியாம் பரிசயம் பயிற்சி - மற்று அனிட்டை
வாதனை உழத்தல் பழக்கமொடு வாடிக்கை
சாதகம் அப்பியாசம் (17)

620. ஓதி கலை விச்சை வித்தை கல்வியின்பேர் கல்லாமை
ஆதம் அஞ்ஞம் மேழமை அஞ்ஞானம் மிச்சை - பேதம் மடம்
அண்ணம் இழுதம் பாமரம் மூடமாம் தனிமை
எண்வியட்டி கேவலம் ஏகம் (18)

621. மாண் கொழுமை சால்பு அமைதி வாய்ப்பு ஆன்றல் மாட்சி வளம்
காண் செழிப்பாம் பாக்கியம் ஆக்கம் திரு சீர் - பூண்பெருக்கம்
மாடு இடம் வெறுக்கை பொறி வாழ்க்கை விபவம் விருத்தி
தேடுசம்பத்தும் செல்வமாம் (19)

622. ஊழ் நியதி தெய்வம் பிராத்தி விதி தண்மை தஞ்சம்
தாழ்வு எளிமை சாய்ப்பு எண் பரிபவமே - கீழ் இழிவாம்
நாத்தி அதீதம் சூனியம் பூச்சியம் நாசம்
ஏத்து அரிது அபாவம் இன்மையே (20)

623. நந்தல் பல்கல் ஆக்கம் விளைவுஆம் பாடவம் கருவம்
தந்து அபிமானம் பெருமிதம் செருக்கு - ஏமம்தருக்கு
வெம் மதம் களிப்பு அகந்தை ஆங்காரம் வீற்றிருத்தல்
செம்மாப்பு ஏமாப்பு இறுமாப்பாம் (21)

624. ஒய்யாரம் சிங்காரம் உல்லாசம் கெம்பீரம்
கொய்யும் மகிழ்ச்சிக்குறிப்பு ஆகும் - செய் உதவி
துப்பு இணை சகாயம் துணையாம் சாதித்தது ஒன்று
கைப்படுதல் சாத்தியம் போக்குஆம் (22)

625. திட்கல் கூச்சம் துணுக்கம் புல்லரிப்பு துட்கல்
மட்கல் மழுங்குதல் மானல் வெள்கல் - வட்கல் உட்கு
நாண் சமழ்ப்பு இலச்சை வெட்கம் நல்தவசு உறு படிவம்
தாண்டு தவம் நோன்பு விரதம் (23)

626. வெறுப்பு உவர்த்தல் மா முனை வேண்டாமை அவாவின்மை
துறப்பு விரத்தி துறவி - வறுமை மிடி
நீள்கலி தரித்திரம் நிரப்பு மிச்சை இன்மை
குறுவாழ்வு இலம்பாடு ஒற்கம் நல்கூர்வுஆம் (24)

627. கேண்மை இகுளை சிநேகம் தொடர் கேள் நட்பு உறவாம்
ஆணை உடம் ஏவல் ஆக்கினையாம் - காணும்மங்கல்
மாரி பிணி ஆமயம் வியாதி உபத்திரம் நோய்
சூர் அணங்கு தீனம் உரோகம் (25)

628. மற்சரம் துவேடம் மடி தெவ்வு அரி இகல் பகைமை
முற்சத்துருத்துவம் முரண்டு முரண் - மெச்சுமறல்
வாரம் அரில் பிணக்காம் வாய்ப்பை இரணம் கடனாம்
சார்அசர்வு ஏட்டை தளர்வு (26)

629. கவ்வை பையுள் புன்கண் மம்மர் கையாறு இன்னாங்கு அகிதம்
எவ்வம் இடுக்கண் பழங்கண் ஏதம் இன்னல் - வெவ்அலக்கண்
கேதம் இட்டளம் துயர் கிலேசம் பருவரல் சூர்
வாதை படர் பீழை விழுமம் (27)

630. அல்லகண்டம் பீடை துக்கம் வேதனை இடும்பை அளுர்
செல்லல் உறுகண் கவலை கோட்டாலை - அல்லல் இடர்
யாதனை அரந்தை சங்கடம் தொங்கிசம் துன்பம்
சூதார் பசி விடைப்புச் சுத்து (28)

631. நந்தல் அலாபம் கயம் சேதம் சிதைவு உருங்கல் நட்டம்
கந்தல் சுதம் ஆனி மடி கேடுஆம் - பாடு அந்தரம் கோள்
முட்டு இடைவு விக்கினம் பொல்லாங்கு தீங்கே முடைஞ்சல்
துட்டு ஊறு தீது துரோகம் (29)

632. நச்சு அலப்பு அவா வேட்கை நம்பு இரதி வெப்பம் நயப்பு
இச்சை நசை காதல் பற்று இராகம் இட்டம் - மெச்சுஇவறல்
மாதர் விழைவு ஏட்டை வெஃகல் வாஞ்சை பெட்பு அபேட்சைவிருப்பு
ஆதரம் வீழ்வு ஏக்கறவு ஆசை (30)

633. மால் விரகம் காமம் மதன்நோய் மோகம் தூங்கல் மந்தம்
ஆலசியம் சோம்பு விடாய் ஆயாசம் - மேல் வருத்தம்
ஆய்வு அயர்வு அணங்கு அனுக்கம் ஆகுலம் கவற்சி நொசிவு
ஓய்வு உயங்கல் தாவும் உரை (31)

634. தள்ளாட்டு அலைவு குலை சஞ்சலம் சலம் சபலம்
அள்ளாட்டு உலைதல் அதிப்பு துளங்கல் - கொள் விதிர்ப்பு
கம்பிதம் பனிப்பு நழுக்கம் பொதிர்ப்பு உடன் பதர்த்தம்
கம்பம் பதறல் நடுக்கம் (32)

635. ஏசு பிறக்கு பிழை காசு ஏதம் மை சண்டாளம் வடு
மாசு அழுக்கு இழுக்கு அரில் வழு குறை கோது - ஆசு கரில்
பொக்கு அசடு தப்பு புகர் வசை களங்கம் நவை
கைக்கும் தவறு சகடு (33)

636. தோம் கறை நோம் பழுது ஆட்சேபம் மறு சோர்வு குற்றம்
வாங்கும் பெருந்திணை ஒவ்வாக்காமம் - ஆங்கு ஓர்பால்
இச்சையாம் கைக்கிளை இகழ்ச்சி வழுக்கு சோர்வு
பொச்சாப்பு அயர்த்தல் மறத்தல் (34)

637. காய்தல் உருத்தல் சலம் சீற்றம் கதம் கறுப்பு
தீயபவதொந்தம் செயிர் வெகுளி - பாய்முணவல்
செற்றம் குரோதம் சிவப்பு உருத்திரம் வயிரம்
பற்றுஅரில் கலாம் சினம் கோபம் (35)

638. பித்தம் உன்மாதம் சோபம் பேது ஏமம் மோகம் மயல்
மத்தம் வெறி மால் கழுமு மாழாப்பு - உன்மத்தம் மருள்
பிச்சு அனந்தர் ஏடணை பிராந்தி இலகிரி மான்று
அச்சோகம் மாழ்கல் மயக்கம் (36)

639. கோரம் அடுப்பு உட்கு வெறி கொன் வெறிப்பு உரும் வீமம்
பீர் வெடி பயானகம் சூர் பீதி வெரூஉ - தாருணம் நாம்
பேம் பயம் பனிப்பும் அச்சப் பேர் துரிதமே கவனம்
காண் பிரமம் மூன்று கலக்கம் (37)

640. சீரணம் சிதம்பு செடி சீத்தை குணமின்மையாம்
வாரம் ஓரம் பக்கவாதமாம் - காரணமே
வாயில் நிமித்தம் வகை பொருட்டு ஏது திறமாம்
தோயு மங்கலம் சு சுபம் (38)

641. பாரம்பரியம் பரம்பரை பாந்தம் முறை
யாரும் பதில் பிரியாம் பிரதி - சேர்பிறிது
மற்றை எதிர் ஏனை மறுமை வினைக்கேடு
செயலற்றிடுதல் கையறவும்ஆம் (39)

642. தோரணை ஆடம்பரம் இடம்பம் பிரகடமாம்
கோரம் கண்டம் தறுகண் கோடணை - குரூரம் வன்கண்
நெட்டூரம் உக்கிரம் கொடூரம் அகடம் கடினம்
கட்டம் கடுமை கொடுமை (40)

643. வித்தகம் வியப்பு இறும்பூது ஆச்சரியம் விம்மிதமும்
சித்திரமும் அற்புதமும் உற்பனமும் - சித்தம் இசை
தங்கு அதிசயப் பேர் சந்தேகம் அனுமானம் ஐயம்
சங்கை கடுப்பு சமுசயம் (41)

644. வீற்று விள்ளல் பேதம் விரோதம் விபரீதம் விகடம்
வேற்றுமை மாறு அன்னியம் பின்னம் விகிர்தம் - மேல்திரிவு
மாற்றம் விரூபம் விகற்பம் வேறுஆம் கயம் கீழ்மை
ஆற்பணம் பிரீதி அற்புதம் (42)

645. ஊதியம் விருத்தி பிரயோசனம் இலாபம் வியன்
வாதையில் பயப்பு அதியம் வட்டி பலன் - மாதகவு
செப்பம் நடுநிற்றல் விறுதா வீதா வம்பு அவம் கொன்
மெய்ப்பயனிலாமை இவை வீண் (43)

646. கைதவம் பட்டிமை மாயம் சாட்டியம் நடலை
குய்யம் வஞ்சம் குத்திரம் கூடம் குடிலம் - மொய் கபடம்
வல்லுள்ளுவம் சூது வஞ்சனையும் வஞ்சகம்
மூட்டில்லாளிமை தாராளமே (44)

647. மானம் தம் மேன்மை குன்றா வன்மையாம் நாமம்
அபிதானம் பேர் சாபல்லியம் சபலம் - ஆனசித்தி
பேசு நிறைவேற்றம் தெளிவு பிரசன்னம்
நிருத்தாசனமே விமரிசம் (45)

648. முத்திரை இலச்சினை இலிங்கம் இலக்கு குறியாம்
அத்தெளித்தல் தேற்றல் உணர்த்துதல் - போதித்தல்
உபதேசம் தெருட்டலும்ஆம் ஓர்தல் குறிக்கோள் துணிவு
தேசார் கடைப்பிடி தேற்றம் (46)

649. குச்சிதம் பயிர்ப்பு அருவருப்பாம் சடைவு கத்து
வெச்சு வந்தி மோடி வலித்தல் கட்டி - மெச்சுஉறுதி
வற்புறுத்தலாம் சும்மா வளா கேளா மூகம்
நல்பேசா மோனம் மவுனம் (47)

650. கொள்கை மதம் அபிப்பிராயம் சமையமும்ஆம்
உள் ஒருமை தோட்டிமையும் ஒற்றுமையாம் - குள்ளம் வண்டு
செய்இடும்பு சண்டம் கராளம் வம்பும் சிற்றொழுக்கம்
கையடை அடைக்கலப் பேர் காண் (48)

2. உயிர்ப்பொருள்: வாக்குக்குண வர்க்கம்

651. சொல் பறை கீர் வாணி கதை தோல் வசனம் காதை
பனுவல் பதம் தீர்ப்பு கிளவி வாக்கு மொழி - நல்வார்த்தை
கூற்று நொடி செப்பு குயில் உரை இயம் பேச்சு
மாற்றம் இசை வாக்கியமும்ஆம் (1)

652. உரைத்தல் விளம்பல் புகறல் ஓதல் செப்பல் ஆடல்
விரித்தல் அறைதல் கதைத்தல் விள்ளல் - தெரித்தல்பன்னல்
ஏற்றுஇயம்பல் பேசல் இசைத்தல் பகர்தல் தன் நுவறல்
சாற்றல் நவிற்றல் மொழிதல் (2)

653. கூறல் நொடித்தல் மிழற்றல் தீர்த்தல் குயிறல் சொற்றல்
ஊறுசொலலாம் மீதுரை பலகாற் - கூறல் துதி
வாழ்த்தல் மெச்சல் போற்றல் வழுத்தல் பரசல் தோத்திரமே
ஏத்தல் பழிச்சல் பரவல் என் (3)

654. வாசகமும் பாசுரமும் வக்கணையாம் ஆசில்வாழ்த்து
ஆசிடை திட்டு அம்பல் பரியாசம் நிந்தை - சீ சி எஎ
ஏச்சு உவர்ப்பு இகழ்ச்சி பழிப்பு எள்ளல் வைதல் கவ்வை அலர்
தூ சிறுசொல் ஏய் இளி தீச்சொல் (4)

655. மெய் சரதம் ஆணை உண்மை சத்தியம் வேளாண்மை நிலை
வைசாதம் தீர்க்கம் நிசம் வாய்மை திடம் - செய் பரமம்
சிச்சயமாம் பொய் பழுது நீள்பிசி வலற்காரம்
மிச்சை சடம் பேடு பொக்கமே (5)

656. கொண்டியம் குஞ்சம் தொடுப்பு கோள் பிசினம் சாடி குறள்
அண்டு கொடுவாய் புறங்கூற்றாம் பாடை - ஒன் திசைச்சொல்
தேசிகம் கடா உசாஆம் வினா செப்பு எதிர்சொல்
ஏசில் விடை உத்தரம் இறுப்பு (6)

657 ஆரீயம் சங்கிருதம் அண்டர்சொல் பிராகிருதம்
சீர்வடசொல்லாம் கிரந்தம் தென்சொல் தமிழ் - ஓரும்
திராவிடமாம் யாப்பு தூக்கு கவிதை செய்யுள்
பராவுகவி பா தொடரும் பாட்டு (7)

658. வெள்ளை முற்பா வெண்பா வியன்அகவல் ஆசிரியம்
கொள்ளும் கலி முரற்பா கூன் தனிச்சொல் - துள்ளும்
அசையடி அம்போதரங்கமாம்முடுகு அராகம்
இசை சுரிதம் கலிப்பாஈறு (8)

659. எண்ணாம் கணக்கு எழுத்து இலக்கணம் வியாகரணம்
திண் இயலும்ஆம் சோசியம் கரணம் - எண் கணிதம்
சோதிடமாம் வாகடம் சந்தோபிசிதி ஆயுள்மறை
ஆதல் வயித்தியநூலாம் (9)

660. சாத்திரம் அங்கம் பிடகம் தந்திரம் தந்து ஆரிடம் நூல்
ஏத்துஇலக்கியம் பனுவலே சமையம் - சூத்திரமாம்
நொய்து ஆகமம் சிறப்புநூல் அனாதிநூல்
ஐது மனு குய்யம் மந்திரம் (10)

661. மந்திரத்தின் எண் உருஆம் உச்சரித்தல் மந்திரத்தைச்
சிந்தைசெய்தல் மந்திரத்தைச் செப்பல் செபம் - முந்திஒன்றை
ஓர்பொருட்டால் சொல்லியதை ஓர்பொருட்டால் பின்னும் வைத்தல்
சோர்வில் அனுவாதம் எனச் சொல் (11)

662. ஆதிநூல் சாகை இருக்கு ஆரணம் ஒத்து சுருதி
கேது பொதுநூல் எழுதாக்கேள்வி மறை - வேதம் அதின்
பாகை கன்மம் ஞானம் அத்தம் வைதிகம் அப்பாதை பொருள்
ஆகும் உபநிடதம் ஆங்கு (12)

663. தோன்று இருக்கு பௌடிகம் முன்வேதம் இரண்டாம் சுருதி
சான்ற எசுரு தயித்திரியம் - மூன்று
உதாத்தானுதாத்தம் சாமம் நான்கு அதர்வணம் தலைச்சொல்
வான் குடிலையே பிரணவம் (13)

664. இலம்பகம் பரிச்சேதம் ஏற்ற அத்தியாயம்
கலந்த சருக்கம் படலம் காண்டம் - கொலும் படலத்
துன்னல் வியாக்கியானம் உரை சொல் பொழிப்பு பிண்டமாம்
அன்னுவயம் சொற்கூட்டலாம் (14)

665. இன்மை பிறிது ஏற்றம் மறை ஆக்கும் வடசொல் முன்வரும்
அந் அ ந நி கு வி முன் அறைந்த பொருள் - பின்னும் வைத்தல்
சோர் புனருத்தம் படலம் சூழ் பல் இனக்கூட்டாம்
ஓர்இனக் கூட்டு ஒத்து என்று உணர் (15)

666. ஆய் பதிகம் நாந்தி அணிந்துரை நூன்முகம்
சாய்வில் முகவுரையும் தந்துரையும் - பாயிரமாம்
ஒப்பு எடுத்துக்காட்டு இதியாசத்தோடு உபகரணம்
வெப்பில் உதாரணமாம் (16)

667. கோதில் சகுனம் விரிச்சி கோள் குறி வாய்ப்புள் நிமித்தம்
மூதுரை புராணம் முதுசொல் கதை - வாது
பிரமாணம் வஞ்சினம் விரதம் சூள் சபதம் ஒட்டல் வட்டிப்பு
ஆணை பந்தயம் சத்தியம் (17)

668. தற்புகழ்ச்சி தர்ப்பம் நெடுமொழி வினா விடையாய்ச்
செப்பல் சல்லாபம் பிரத்தாபம் பிரசங்கப் - பேர் சொல்
ஒன்றே அலட்டல் பிதற்றலாம் முகமன் சன்மானம்
மென்சொல் உபசாரம் நயமே (18)

669. கொஞ்சல் மிழலை உல்லாபம் குதலையே மழலை
அஞ்சு உழறலே குழறலாம் வழுச்சொல் - மிஞ்சுபுகழ்
கீர்த்தி பிரதாபம் ஒளி கேள்பிரபலம் தோற்றம்
சீர்த்தி சுவேதம் இசை சீர் (19)

670. ஏற்றம் கியாதம் மெய்ப்பாடாம் உறுதிச்சொல் கழறல்
ஏற்றுஇடிப்பாம் கூகனம் இடக்கர் மறைக் - கூற்றாம்
அழைத்தல் இகுத்தல் கரைதல் கேதல் அகவல்
வளிப்பு ஆகருடணம் கூவல் (20)

671. அன்னோ அந்தோ ஆ ஓ அக்கோ ஐயோ அம்மோ
என் எற்று இரக்கச்சொல் ஓம்படையே - பின்வேண்டல்
தர்க்கம் வாதம் குதர்க்கம் தான் விதண்டை ஞாயச் சொல்
வைக்கும் விவகாரம் வழக்கு (21)

672. அத்தம் பயன் தாற்பரியம் பொருளாம்
அனத்தம் அது இன்மை பிசி நற்பொருள் - வாசித்தல் படிப்பு
ஓதல் அத்தியானம் உயர் சிரவணம் கேள்வி
வாது அமர்க்கழைப்பு அறைகூவல் (22)

673. வன்னம் பொறி இலிகிதம் கணக்கு இலேகை வரி
தன்மை இலிபி எழுத்து அக்கரமாம் - பின் அகரம்
ன கரம் காரம் கான் அச்சாரியை நல்தீர்க்கம் விலங்கு
அக்கோடு எழுத்தின் உறுப்பாம் (23)

674. ஆவி சுரம் அச்சு இருசுவம் குறிலாம் தீர்க்கம் நெடில்
ஓவில் புள்ளி மெய் புலுதம் ஒற்று ஆய்தம் - மேவுதனி
அக்கேனம் புள்ளி அவ் இவ் உவ் சுட்டாம் யார் யாது ஓ
எ கொல் எவன் யா என் வினாஈறு (24)

675. நேர் எதிர் தூக்கு அன்ன நிகர் மலைவு ஆங்கு ஏய்வு இணை வீழ்
ஏர் படி சமம் தகை போல் இன்ன கடுப்பு - ஓர் துணை கேழ்
ஒப்பு அனைதல் மானல் கதழ்வு எள்ளல் உறழ் துல்யம் இகல்
நல்புரை வத்து அற்று உவமானம் (25)

676. சின் குரை ஒரும் பிற மாது இட்டு இருந்து ஆம் தாம் தான் ஐ
என் பிறக்கு அரோ கா போ என்ப மதி - அன்று இகும் ஆல்
யா அசை மியா மாள யாழ அத்தை வாழி மதி
மோ இக ஈ முன்னிலைஅசை (26)

677. என்று என ஓ தஞ்சம் மன் கொன் எற்று அந்தில் ஆங்கு ஒடு மா
மன்ற தில் கொல் அம் தெய்ய மற்று உம் எனா - என்றா ஏ
மின்னு பொருள்கொள் இடைச்சொல் வேற்றுமைப் பேர் ஐ ஆல் கு
இன் அது கண் விளி என்று எட்டு (27)

678. வல்லிசை எச்சு உச்சம் மந்தம் மந்திரம் காகுளி தக்கு
அல்ல மத்திமம் பஞ்சமம் கானம் - சொல் வரி பாண்
கேயம் வன்னம் கந்திருவம் கீதம் இராகம் கொளை பாட்டு
ஏய்மனி பண் காமரம் இசை (28)

679. ஏழிசை குரல் துத்தம் இன்கைக்கிளை உழையே
தாழ்வில் இளி விளரி தாரம் அவை - யாழ்மிடறு
நாக்கு அண்ணம் சென்னி நுதல் நெஞ்சு மூக்கில் பிறக்கும்
நீக்கு அக்கரம் ஏழ்நெடில் (29)

680. சேர் நான்கு நான்கு முன்று ஓர்இரண்டு நான்கு மூன்று
ஓர்இரண்டாம் மாத்திரை வண்டு ஒண்கிளி மா - வாரணமே
தேரை பசு ஆடு ஒலி பால் தேன் கள் நெய் ஏலம் கதலி
தூர் மாதுளம் ஏழ்சுவை (30)

681. மவ்வல் முல்லை நீபம் வஞ்சி நெய்தல் மகிழ் புன்னை மணம்
அவ்விசுவாமித்ரன் இமன் அங்கி திங்கள் - வெவ்அருக்கன்
கோதமன் காசிபன் ஏழ்கோ இசைக்காம் யாழின்இசை
ஏதமிலாத் திறன் எழால் (31)

682. கோசனை இயம் துழனி கோடணை முழக்கு ஓதை
பூசல் களன் சும்மை புலம்பல் சத்தம் - ஓசை தொனி
ஆரவாரம் சுருதி ஆர்ப்பு இசை ஆகுலம் பாடு
ஓர்வெகுளி நாதம் உரை (32)

683. இரைதல் உலம்பல் இரட்டல் சிரற்றல்
குரை சிலைப்பு இயம்பல் குமுறல் - முரலல்
அலம்பல் கனைத்தல் அரற்றல் அழுங்கல்
சிலம்பல் துவைத்தல் தெழிப்பு (33)

684. குளிறல் திமிலம் குமிலம் தெவிட்டல்
பிளிறல் நரலல் பிரற்றல் - உளர்தலே
கோலாகலமே கொழித்தல் குமுதம் முக்கல்
மேலாம் மருமரஞ்சமே (34)

685. கம்பலை சிலும்பல் கலகம் பயிர்ப்பு உரற்றல்
பம்புதமரம் படுதல் விம்மல் - வெம்பு அரவம்
காய் கதித்தல் ஏங்கல் கலித்தல் உழைத்தல் இடி
ஓய் குருமித்தல் ஒலி (35)

686. இம்எனல் ஞெரேல் விண் இழும் சிலீர் திண்என்றல்
பொம்எனல் கணீர் திடீர் பொள்என்றல் - அம்எனலே
மெல்எனல் கல்என்றல் விரீர் பளீர்என்னல் முதல்
அல்லின் அனுகரணத்து ஆர்ப்பு (36)

687. படபடஎன்றல் அன்றிப் பகபகஎன்றலோடு
தடதடஎன்றலே சளசளஎன்றல் - மடமடஎன்றல்
வன் திடுதிடுஎன்றல் வழுவழுஎன்றல் கொழுகொழுஎன்றல்
முதலாம் விரைவோசை (37)

688. மிருகஒலி புள்ளின்ஒலி வீரிடுதல் கூவல்
கரைதல் கத்தல் கூப்பிடல் கனைத்தல் - குரைத்தலும்ஆம்
அச்சவொலி கத்தல் அதறல் கதறல் உங்காரம்
எச்சு உரப்பு தாக்கு அதட்டுஆமே (38)

3. உயிர்ப்பொருள்: செயற்குண வர்க்கம்

689. காரியம் தொழில் காமியம் கிருத்தியம் கிரியை
காரகம் கன்மம் கருமம் வேலை வினை - ஓர்செயலாம்
ஆற்றல் இழைத்தல் குயிற்றல் பண்ணல் அயர்தல் வனைதல்
சாற்று இயற்றல் செய்தல் புரிதல் (1)

690. உற்பவம் பவம் சனிப்பு உற்பத்தி சென்மம் செனனம்
சொற்பிரசவம் பிறப்பு தோற்றமும்ஆம் - இப்பிறப்பே
இம்மை உம்மை போம்பிறப்பு இனி பிறப்பதே மறுமை
அம்மை எம்மை எப்பிறப்புமாம் (2)

691. கற்பிதம் படைப்பு நின்மிதம் சிருட்டி ஆக்கல் பிறப்பிப்பு
விதியாம் திதியின் பேர் அளித்தல் - அப் புரத்தல் .
ஓது இரக்கை காத்தல் உடன் நிறுத்தல் நோக்கலும்ஆம்
காதரம் வினைத்தொடர்ச்சி காண் (3)

692. ஊறு அணங்கு எருக்கல் ஒழித்தல் சங்காரம் படுத்தல்
கோறல் முருக்கல் சவட்டல் சாடல் அடல் - நூறல் எற்றல்
வீட்டல் வதை காதுதல் செகுத்தல் கொலை நிக்கிரகம்
நாட்டு முடித்தல் மாரணம் (4)

693. பாரணம் சாப்பாடு அயிரல் பக்கித்தல் மாந்தல் தின்றல்
ஆர்தல் நுகர்தல் அமுதுசெய்தல் - சேர் மிசைத்தல்
கைதொடல் அசித்தல் பொசித்தல் அருந்தல் துய்த்தல்
எய்து துவ்வல் கொள்ளல் உண்டலே (5)

694. உபவாசம் பட்டினி இலங்கனம் துவ்வாமை
உபோடிதமாம் சாகரம் தூங்காமை - தபு படுதல்
வண்பள்ளி நித்திரை வளர்ச்சி துஞ்சல் தூங்கல் துயில்
கண்படை அனந்தர் உறக்கம் (6)

695. எழுப்பல் உணர்த்துதலாம் மீலனம் இமைத்தல்
விழிப்பு ஊற்றல் வார்த்தல் வடித்தல் - ஒழுக்கல் விடல்
பானம் பருகல் குடித்தல் சொற்பனம் கனவாம்
ஆன நனவே சகலமாம் (7)

696. காரணம் காரியம் இரண்டுஅவத்தை காரணத்தின்
பேர் சகலம் கேவலம் பிரேரகமே - ஓர்சுத்தம்
காரியம் சாக்கிரம் கனா சுழுத்தியே துரியம்
ஆர்துரியாதீதம் என ஐந்து (8)

697. கருவி எலாம் சார்தல் கனி சகலம் ஆகும்
கருவி குன்றல் கேவலமாம் குன்றும் - கருவிஅருள்
கூட்டுதல் பிரேரகமாம் கூர்கருவி பொய் எனக் கண்டு
ஓட்டுவதே சுத்தம் என ஓர் (9)

698. சாக்கிரம் மருட்காட்சி தங்கு கனா பொய்க்காட்சி
ஆக்கு புலனடங்கலாம் சுழுத்தி - காக்கும்
மனமடங்கலாம் துரியம் வாயு அடங்கத்
தனி உயிரே நிற்றல் அதீதம் (10)

699. காரணம் கணான் கவற்றின் காரியம் நால் ஐந்தாக
ஈர்அவத்தை எண் மூன்று ஐந்து ஐந்தாகப் - பேர்கள்
நடுவாம்அவத்தை கீழ்அவத்தை மேல்அவத்தை நின்மலம் என்றாம்
அவத்தையாம் காரியம் (11)

700. மீறுஅவத்தை பற்றும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றுதலாம்
வேறில் பிரேரகம் செய்வித்தலாம் - கூறு அகைத்தல்
ஊர்தல் எய்தல் உய்த்தல் உகைப்பு ஓட்டல் நடவல் கடவல்
சார்செலுத்தல் தூண்டல் நடாத்தல் (12)

701. கேளி ஒப்பு இலீலை பொய்தல் ஓரை கிரீடை பண்ணை
வீழும் கெடவரல் விலாசனையே - சூழ் தொடலை
வண்டல் விளையாடல் குலா மெச்சல் வினோதம் பாராட்டு
அண் பொழுதுபோக்கல் கொண்டாட்டுஆம் (13)

702. மன்றல் விவாகம் தீவலஞ்செயல் கைப்பற்றல் வரைவு
அன்றி மணம் வேட்டல் கல்யாணம் வதுவை - என்ப விழா
உச்சவம் துணங்கறல் சேறு முருகு சாறும்ஆம்
கைச்சிடா நுங்கல் விழுங்கல் (14)

703. வேள்வி உபகாரம் வண்மை வீசல் உதவல் வழங்கல்
நீள்விதரணம் கவிகை நீட்டல் இடல் - ஆள்அருளல்
தானம் வேளாண்மை உதாரம் தரல் வள்ளன்மை அளிப்பு
ஆன்விரவு ஈகை கொடையாம் (15)

704. பெய்தல் வருடித்தல் சொரிவு எக்கல் பொழிதல் வேண்டல்
கொய்வாங்கல் ஏற்றல் கோள் கோடல் கொள்ளல் - கை வரையாது
ஈகை கொடைமடம் ஈயாமை உலுத்தம் பிசினம்
வாகில் உலோபம் இவறல் (16)

705. காவல் கடி காப்பு ஏமம் சேமம் அரண் வேலி கட்டி
பாவு கதவாம் ஓம்பல் பாதுகாப்பு - ஓவில் பிச்சை
பிண்டம் ஐயம் பாசம் பிடிகம் பலி சரிதை
அண்டு இரப்பு உடன் பயிக்கமாம் (17)

706. ஆராதனை வழிபாடு அர்ச்சனை உவாசனையும்
சீராரும் பூசனையாம் தெண்டன் - நமக்காரம்
வணங்கல் பணி தாழ்வு இறைஞ்சல் வந்தனை வந்தித்தல்
குணங்கல் ஒழுங்கறுத்தலாம் (18)

707. வாயில் சந்து தூதுஆம் வேய் ஒற்று உலவலாம் வழங்கல்
ஆய்தொழல் கைகூப்பல் கும்பாடு அஞ்சலியாம் - பாய் வேள்வி
எச்சம் கிருது ஓமம் யாகம் இட்டி யூபம் மகம்
அச்சின் குணுங்கல் கொய்தலாம் (19)

708. தொண்டு பரிசாரம் தொழும்பு நிமந்தம் சபரி
கண்ட பணியாம் வரல் ஆகந்துகமாம் - உண்டதறல்
சீரணம் செரித்தல் செரியாமை அபிவாசனம்
அசீரணம் குருத்துவமும் செப்பு (20)

709. காட்சி தெரிசினை நோக்கம் பார்வை காண்டல் கண்ணல்
மீட்சி வக்கிரம் திரும்பல் மீளல்ஆம் - ஏச்சில்
சிறக்கணிப்பு அபாங்கம் கடைக்கணிப்பாம் சீய்த்தல்
அறப் பெருக்கல் தூர்த்தல் துடைப்பாம் (21)

710. பம்முதல் மூசல் கவித்தல் மூடல் பரப்பு ஊழ்த்தலும்ஆம்
தும்மலின் பேர் மூச்சு சுவாசமாம் - விம்மலின்பேர்
உப்பல் பொருமல் புடைத்தல் ஊதுதல் வீங்கலும்ஆம்
துப்பல் உமிழ்வே காறல் சொல் (22)

711. கூம்பாச் சிரம்பணம் ஆவித்தலும் கொட்டாவி அங்காப்பு
ஆம் பேரே வாய்பிளத்தல் மூரி நெட்டி - சோம்பாம்
விரியல் பரப்பல் விளம்பல் பாரித்தல்
பரிமாற்றமும் படைத்தலாம் (23)

712. புல்லல் கிரீடை புணர்ச்சி கூட்டம் கலவி
விழைவு ஆடல் சங்கம் மைதுனமாம் - சொல் புலவி
ஊடல் துனி அத்தீர்ப்பு உணர்த்தலாம் தேய்த்தல் சிதைப்போடு
உரைப்பு உரிஞ்சல் உரோசல் (24)

713. ஆலிங்கனம் தழுவல் விள்ளல் முயங்கலும்ஆம்
மேல் இரங்கல் ஏங்கல் இனைவு அழுங்கல் - நாலல் தொங்கல்
தூங்கலாம் நாற்றுதல் தூக்கல் பேர் சுமத்தல் பரி
தாங்குதல் தரித்தல் பொறுத்தல் (25)

714. பூசல் வரித்தல் புலர்த்தல் அங்கராகமும்ஆம்
பூசல் மண்ணல் வேய்தல் புனைதல் வனைதல் - வீசுஅணிதல்
ஒப்பனை கைசெய்தல் அலங்கரித்தலாம் செருகல்
கப்பில் அடைச்சல் சொருகல் (26)

715. விளைத்தல் வளாகம் வலத்தல் சூழ்தல் சுற்றல் பாதீடு
அளித்தல் மடுத்தல் செறித்தல் பெய்தல் - தளிர்த்தல்
சிலிர்த்தல் கிளைத்தல் துளிர்த்தலாம் சூட்டல்
மிலைச்சல் தரித்தல் மலைவே (27)

716. பற்றல் பிழ மூளல் தொடல் ஊறு பரிசம் துவளல்
சொல் திவளலாம் தேடல் நேடல் துரு - நல்தேர்தல்
கையரிக்கோள் நாடல் ஆய்வுஆம் அபகாரம் கவர்தல்
கொய் வளைத்தல் வாரல் வவ்வல் கோள் (28)

717. சாவு இறப்பு அவன்றல் விளிதல் முடிதல் துஞ்சல் முஞ்சல்
மாய்வு இலையம் மாளல் மரித்தல் விழல் - வீவு அடைதல்
போக்கு மிருதம் தபுதல் பொன்றல் நசித்தல் மரணம்
ஆக்குஅமுக்கல் பேர் ஞெமுங்கலாம் (29)

718. சமர் சமிகம் பூசல் செரு சங்கிராமம் தீய்த்தல்
அமர் உடன்றல் போர் மறன் ஆயோதம் - சமம் மலைதல்
மொய் இகல் ஞாட்பு ஆகவம் முரண் பொருதல் சல்லிகம் நேர்
எய்இரணமும் சண்டை யுத்தமே (30)

719. முட்டல் எற்றல் தாக்கல் முடுகல் எதிர்த்தல் கிடைத்தல்
கிட்டல் தலைப்படலாம் கீழ்ப்பகையூர் - அட்டல் வள்ளை
சார்திடிலடாமை தழிஞ்சி கொள்ளை கொண்டி சூறை
பாந்தல் ஒடுக்கம் பதுக்கு ஒதுக்கு (31)

720. உடைவு இரிதல் சாய்தல் சரிவு ஓட்டம் நெரிதல்
இடைதல் கெடல் தோற்பாம் இறுதல் - ஒடிதல்
முரிதல் ஒசிதல் முசிதல் இடிதல்
பரிதல் ஞெமிர்தல் முறிவு (32)

721. எற்றல் அறை மோதல் அடித்தல் பேர் எறிதல் எற்றல்
குற்றல் புடைப்பே தகர்த்தல் குட்டுதலாம் - நிற்றல் நிலை
நின்றிடல் பேராம் கசிதம் நீள்அழுத்தலாம் பதித்தல்
கொன்று குவிப்பது நூழில் (33)

722. நட்டம் நடை வாணி நடனம் தாண்டவம் நிருத்தம்
நட்டணை தூக்கு படிதம் நாட்டியமே - ஒட்டு கண்ணுள்
நாடகம் கூத்து ஆட்டு நடமாம் நடித்தல் தூங்கல் பெயர்வு
ஆடல் அசைவு ஆலல் அகவல் (34)

723. கூர்பேடு மாரன் கொடுகொட்டி பாண்டரங்கம்
காபாலம் ஈசர் கடையம் சசி பொன்சேர் - பாவை
மல் அல்லியம் குடம் மால் வண்மரக்கால் துர்க்கை குடை
நல்ல துடி செவ்வேள் நடம் (35)

724. கைகோத்துஆடல் குரவை கைகுவித்துக் கொட்டல் கொம்மை
கைகூப்பி மெய்கோட்டல் காண் குடந்தம் - செய் துணங்கை
தோள்கொட்டல் குஞ்சிதம் கால்தூக்கி நிற்றல் ஆவலமே
ஆள் கையால் வாய்கொட்டலாம் (36)

725. பிரமரி வீரட்டானம் பித்தம் உள்ளாளம்
புரியம் அலைப்பு கரணம் - பரதமும் கூத்தின்
விகற்பாம் தாளம் ஒத்து சீர் இலையம் பாணி சதி
மன்னு பருமித்தல் சிரமம் (37)

726. கொட்டிக் கைகூப்பல் குடம் வெறி கழங்கு அணங்காம்
வட்டணை அடித்தல் ஒற்றல் வட்டித்தல் - கொட்டல் தட்டல்
துவ்வு அனுபவம் விடையம் போகம் துப்பு ஐ வழி ஊண்
அவ்விசுவாசம் சிரத்தையாம் (38)

727. ஆற்றுப்படை தான் வழியெதிர்த்தலாம் விலக்கல்
மாற்றல் மறை தட்டல் காப்பாம் மறுத்தல் - ஆற்றறுத்தல்
உள்வலியழித்தல் உழக்கல் குழப்பலாம் கொழித்தல்
தெள்ளல் வரன்றல் தெளித்தல் (39)

728. தீட்டல் வரித்தல் பொறித்தல் கீறல் தெரித்தல் வரைதல்
மாட்டின் எழுதுதலாம் மாட்டல் பொத்தல் - மூட்டலாம்
முண்டிதம் சிரைத்தல் மழித்தல் வபனம் சவுரம்
சுண்டல் தெறித்தல் மீட்டல் (40)

729. தட்டல் சிறை வாரணம் தடுத்தல் தகைவாம் தடைப் பேர்
கட்டல் குற்றலாம் களைதல் கட்டல் கள்ளல் - பட்டி திருட்டு
படிறு சோர்வு கரப்பு கரவடம் களவுஆம்
தைப்பே பொல்லம் துன்னம் யாத்து (41)

730. மூரல் இளி ஆசம் முறுவல் நகை சிரித்தல்
பேர் அசி நிந்தைச்சிரிப்பு இறங்கல் - அவதாரம்
அவரோணம் சுதம் இழிவாம் மோத்தல் உயிர்ப்பு ஆக்கிராணம்
இளக்கம் நெகிழ்வாம் (42)

731. ஏறல் ஆரோணம் ஆரூடம் மீக்கோள் இவர்தல்
சேறல் கழிதல் செலவு ஏகல் - கூற் இறப்பு
போகலாம் ஊறல் பொசிதல் கசிதல் சுரத்தல்
ஆகும் பழுத்தல் கனிவாம் (43)

732. ஓடலின் பேர் பாறல் உடன் நிமிர்தல் நீளலும்
நேரோடலின் பேர் ஆதியும் வீதியும் - மாவோடல் சுற்று
வாளி மண்டிலம் சாரிகை மாதியாம் சூழல்
தோளல் குயிறல் துளைத்தல் (44)

733. நடை கதி சஞ்சாரம் வியாமம் சரித்தல்
படர்தல் நடத்தல் தண்டல் பற்றல் - இடல் போடல்
கொட்டல் விடைத்தல் வெளிக்கோள் அலைதல் ஆஞ்சி ஞொள்கல்
ஒட்டு எறிதல் வீசுதல் ஓச்சல் (45)

734. மடக்கம் நொறில் குத்தி அபவாதம் சமாதி
முடக்கம் உத்தியாபனம் முணங்கே - ஒடுக்கம்
அடக்கமாம் ஆக்கல் அடுதல் சமைத்தல்
வடித்தல் பாகம்புரிவதாம் (46)

735. தாழ்தல் இறுத்தல் அல்கல் தங்கல் வசித்தல் வைகல்
வாழ்வு வதிதலோடு அமர்தலாம் இருத்தல் - வீழ்தல்
விழல் அவைத்தல் குற்றுதலாம் விம்மல் கலுழ்தல்
அழல் கரைவு உரோதனமும்ஆம் (47)

736. இசைதல் ஒட்டல் கோத்தல் புணர்வு ஏலல் இயைவு ஆகும்
அசைதல் சொரியல் அளைசல் - ஒசி இயங்கல்
பாழல் துயல்வரலாம் பன்னும் உவனித்தல்
உபலாளனமும் தூய்மை செய்தலாம் (48)

737. ஆரோபம் கற்பிதம் அத்யாசம் ஒன்று ஒன்றாய்த் தோன்றல்
வேர்வை கசிவு சுவேதம் வெயர்வுஆம் - ஓர் களித்தல்
கட்குடித்தல் பீச்சல் கறத்தல் அகழ்தல் கிளைத்தல்
தொட்டல் கொத்தல் நெண்டலும் தோண்டல் (49)

738. சிதர்த்தல் உகுத்தல் சிதந்தலே ஊழ்த்தல்
துதிச் சிதறல் தூற்றல் இவை தூவல் - நொதுத்தல்
நதுத்தல் அவித்தல் நவித்தலும்ஆம் வேதல்
கதுவாய் வடுப்படல் காயம் (50)

739. நண்ணல் ஒன்றல் தோய்தல் நணுகல் அணவல் எய்தல்
அண்ணல் அடுத்தல் அமைதல் ஒட்டல் - ஒண்ணல் அண்டல்
அல்கல் அணுகல் அடைதல் கெழுமல் புல்லல்
ஒல்லல் மருவல் உறல் (51)

740. சேர்தல் அணைதல் சிவணல் தட்டல் கூடல் கிட்டல்
சார்தல் பொருந்துதலாம் தண்டல் உடன் - சோர்வு அகற்சி
நீங்கல் தணப்பு துறத்தல் நீப்பு ஒருவல் ஆனல் வல்லி
தாங்கு இகத்தல் மாறல் பிரிதல் (52)

741. பாகம் பாத்து கூறு பங்கு பால் பாதீடு என்று
ஆகல் பகுத்தல் பேர் அருமை செய்தல் - வாகுறு
பேராண்மை விபசாயம் கிருசி வேளாண்மை
ஊராண்மை ஓங்கிச் செயலே ஆம் (53)

742. உத்தியோகம் தாள் உழைப்பு ஊக்கம் உற்சாகம்
எத்தனம் முயற்சி உளுற்று ஆள்வினையாம் - கொத்து உழவு
தொய்யிலாம் ஓப்பல் பற்றல் உச்சாடனம் துரத்தல்
ஒய்யெனல் முடுக்குதல் ஓட்டல் (54)

743. வாணிபம் வ்யாபாரம் வணிகம் செட்டு கச்சவடம்
பேண் அரைத்தல் பிட்டுவம் பிழைத்தல் உய்தல் - காண் வழுக்கல்
ஆளி சும்பாம் மண்ணல் அலம்பல் கழுவல் பிரச்சாளனம்
நொறுக்கல் தகர்த்தல் (55)

744. தப்பல் துவைத்தல் பேர் தாபித்தல் நிறுத்தல்பேராம்
குப்புறல் மிதித்தல் குதித்தலே - செப்பு உகள்தல்
மோதல் உறுக்கல் இவை பாய்தலாம் சீவல் உடன்
கோதல் சிணுக்கறுத்தலாம் (56)

745. பற்றாரிடுகுறைப் பேர் பாகுடம் கப்பம் திறையாம்
மற்ற சுங்கம் சாரிகை உல்கு ஆயமாம் - முற்றும்
கடன் வரி இறுப்பு கரம் பகுதி தீர்வை
குடியிறையாம் கறையும் கூறு (57)

746. படுதல் குருத்தல் பரிணமித்தல் நாறல்
தொடும் உதித்தலே முளைத்தல் தோற்றல் - பொடித்தல் உடன்
அங்குரித்தல் உண்டாதலாம் பிரதிக்கினைப் பேர்
சங்கற்பம் பூட்கை மேற்கோள் (58)

747. தெற்றல் பிழைத்தல் திறம்பல் தப்பல் மாற்றமிடல்
முற்றல் முரஞ்சல் முதிர்வு ஆகும் - நல்தாண்டல்
தாவல் வாவல் கழித்தல் சாடல் தத்தல் கடத்தல்
ஏவலின் பேர் வியங்கோளே (59)

748. தற்றல் இறுக்கல் தடுமாறல் பிறழ்தல் கட்டல்
ஒற்றல் உடுத்தல் விலை மாறல் அகம் - விற்றல்
நொடை பகர்தல் நோன்பியற்றல் நோற்றல் ஞெலிதல்
கடைதல் மதித்தலும்ஆம் காண் (60)

749. பிரமரி மறுக்கல் அலம்வருதல் ஞொள்கல்
தெருமரல் கொட்பு ஆவிரதம் சூர்த்தல் - திரிதல்
சுழலுதலாம் மேளத்தொழில் இயக்கல் ஆகும்
மழை நீங்கிடுதல் வெறிவுஆம் (61)

750. திமிறல் பிசைதல் திருகல் திருமல்
நிமிறல் தெறுத்தல் நெரித்தல் - உமிழ்தல் பில்கல்
கொப்பிளித்தல் காலல் பிலிற்றலும்ஆம் யாத்திரையும்
அப்பயணமும் புறப்பாடுஆம் (62)

751. சிகிற்சை பரிகாரம் சாந்தி குழைவு ஒல்கல்
இகுத்தல் விரித்தல் இடத்தல் - வகிர்தல்
சொலித்தல் துவர்தலும்ஆம் சொல்லும் அதர்கோள்
ஆறலைத்தல் வழிப்பறித்தலாம் (63)

752. ஆர்த்தல் சிமிழ்த்தல் அணைத்தல் நியாசம் தொடுத்தல்
யாத்தல் பிணித்தல் விசித்தல் பந்தம் - ஏத்து அசைத்தல்
வீக்கல் சஞ்சித்தல் இவை கட்டுதலாம் தள்ளுதல் பேர்
நூக்கலே நோன்றல் ஊன்றல் (64)

753. மாய்தல் ஞெமிர்வு ஆவரணம் மந்தணம் இராசியமே
மாயை திரோதம் குடிலை மூடல் இவை - ஓய் மறைப்பாம்
காடம் இறுகல் சொறி கண்டூதியும் தினவுஆம்
சேடமுறும் சம்பிரதம் சித்து (65)

754. தீர்தல் ஒழிதல் கழிதல் மோசனம் விரோசனம்
நிவாரணம் நிவர்த்தி விசர்க்கம் தவிர்தல் - கூர் தொலைதல்
மோக்கம் விடலாம் முடைதல் நிணத்தல் வலத்தல்
ஆக்கு இழுத்தல் பேர் ஈர்த்தலாம் (66)

755. காய்வு எரிவு சூடு வெம்பல் கன்றல் வெதும்பல் புகைதல்
தீவு கருகல் புழுங்கல் சேர் சுடலாம் - மேவு கும்மல்
துள்ளல் துடித்தல் பேர் தொடுத்தல் துவக்கம் துடங்கல்
கொள் பறித்தல் கத்திரித்தல் கொய்வு (67)

756. துண்டித்தல் வெட்டல் துமித்தல் உடன் தடிதல்
கண்டித்தலே எறிதலாம் தறித்தல் - திண்கொய்தல்
ஏதித்தல் சூலல் கொய்தல் ஈர்தல் விடுவாய் அரிதல்
சேதித்தல் எட்டும் அறுத்தல் (68)

757. சுண்டல் வறத்தல் சுவறல் சோர்தல் வற்றல் காய்தல் இஞ்சல்
அண் புலர்தலே முளித்தலாம் உலர்தல் - மொண்டல் கொண்டல்
கோதல் முகத்தல் குரல்கல் குனிவாம் போற்றியாதல்
இடுக்குதல் பேராம் (69)

758. வேதனை உலைத்தல் மிறைத்தல் அகைத்தல் வலித்தல்
போதுவிடிதல் புலர்வுஆம் உடன்பாடு - ஓது இணங்கல்
நேர் வலித்தல் ஒட்டல் சமை சம்மதம் சாமம் தடவல்
பேர் வருடல் தைவரல் நீவல் (70)

759. ஏர்பு எழுச்சி பாய்ச்சல் பொலிவு உம்பல் களறல் எழல்
தூபிதம் சந்தாபம் சுடப்படுதல் - கூர்பெறுதல்
வாய்த்தல் பயத்தல் கிடைத்தல் கிட்டல் சொல்லல் ஈன்றலும்ஆம்
பார்த்த கிடையாமை துல்லபம் (71)

760. மூழ்குவித்தல் ஆட்டல் அபிடேகம் முழுக்கே நானம்
மூழ்கல் அமிழ்ந்தல் முங்கலாம் படிதல் - ஆழ் குளித்தல்
ஆடல்உடன் தேய்தலும்ஆம் பொங்கல் கொதிப்பாம் அயிர்தல்
வாடல் தளருதல் சோர்வாம் (72)

761. தேம்பல் மெலிவு இளைத்தல் கிரசம் சிரமம் ஞொட்கல்
நாம்பலும்ஆம் கூம்பல் முகிழித்தல் - சாம்பல்
குவிதல் விரிதல் மலர்தல் கூர்நெகிழ்தல் விள்ளல்
அவிழ்தல் விகசித்தல் அலர்தல் (73)

762. மிச்சிரம் சங்கீரணம் சமேதம் அளாவல் விரவல்
சொற்சகிதம் கீலகம் துழாவல் அசி - மெச்சுஅயிக்கம்
நீள் கலம்பகம் கலப்பாம் நேமம் பிரார்த்தனையும்
வாழ் நியமம் நீட்டல் வளர்த்தல் (74)

763. பீறலே கீன்றல் பிளத்தல் உடன் கீழல்
கீறலே கீண்டல் கிழித்தலாம் - மீறல்
அதிகாரம் ஆதிபத்யம் மேலீடு மிஞ்சல்
அதிகரித்தல் ஆணைசெலுத்தல் (75)

764. வருத்தல் நலிதல் வருவித்தல் வரித்தல்
திரித்தல் வேறாக்கல் முட்டல் தேக்கல் - நிரப்பல் உலா
கூர்பவனியாம் கொணர்தல் கொண்டெய்தல் வேகம் விசை
தாரை கவனம் கதி அதுஆம் (76)

765. பிறகிடல் பின்றல் பிறக்கிடலும்ஆம் நோ
அறல் அயாவுயிர்ப்பாம் அடைதல் - உறு புகுதல்
அத்தமனம் ஒன்றில் ஒன்றை ஆக்கல் ஆவாகனமாம்
தத்து நுடக்கம் துவளுதல் (77)

4. உயிரில்பொருள் குண வர்க்கம்

766. சில்லி கொம்மை கோளகை தட்டு ஆழி வலயம் திகிரி
மல்லம் விருத்தம் பருதி மண்டிலம் பாண்டில் - கடகம்
வக்கிரமே விந்து வத்துளம் பாலிகை வட்டம்
சக்கரமும் நேமியும் அதுஆம் (1)

767. முண்டம் வட்டு சேர் குவிவு முத்தை பந்தம் மாழை குவவு
உண்டை புஞ்சம் சேடு பிழம்பு ஓர் பூகம் - பிண்டம் எக்கல்
கொம்மை கணை உருட்சி சோகம் திரட்சி தகடு
ஐமை அடர் அச்சம் அரியாம் (2)

768. கூன் கோண் குலாவல் வளாவல் குடிலம் குரங்கல்
வாங்கல் நுதல் கோட்டல் வணர் வளைவாம் - ஓங்கு
நிரல் ஒழுங்கு தாமம் முறை பாந்தம் நிரை பந்தி
வரிசை அணி நேர் வார் வகுப்பு (3)

769. பருமை பிறங்கல் பரூஉ பீனம் பிட்டி
விருடியம் பணம் பருத்தல் வேயே - சுரி குழல் தூம்பு
இல்லி துளை நாளம் இரந்தரமோடு தமர் கண்
சொல் புரை போடு ஓட்டை துவாரம் (4)

770. சங்கம் அவை குப்பை சமூகம் சமட்டி யோகம் நிவகம்
குவை இராசி கதம்பம் சவை கந்தம் - கணம் தோடு
ஆயம் நிகாயம் தொகை கூட்டம் தொகுதி கோட்டி
சமவாயம் குழு திரள் குவால் (5)

771. உன்னதம் மேடு ஏற்றம் நிவப்பு உச்சம் மிசை உத்துங்கம்
மன்னல் புங்கம் ஏந்தல் கப்பு வார் நிமிர்வு - சொன்ன புரை
ஓங்கல் யோகம் சிகரம் சேண் உயிர்ச்சி ஆகும் மொக்குள்
பூங்குமிழ் கொப்புள் புளகமாம் (6)

772. கதழ் மலி கூர் பொங்கல் பெருக்கம் கழுமல் ஈட்டம்
மதம் உறு தவ பிறங்கல் சால - விதப்பு நனி
பூரிப்பு இறப்பு அமலை பூங்கு சிறப்பு ஆன்றல் மிகல்
பாரில் வெகு நானா பல (7)

773. மேன் பணை மோடு ஈடு ஏந்தல் மீளி கெண்யம் மா முடலை
கோன் பொழில் மானம் குவவு வீறு தடம் - வான் கருமை
பாடு பகடு அண்ணல் செம்மை பாழி நளி மூரி கயம்
பீடு இருமை மால் பெருமைப் பேர் (8)

774. சாங்கம் நிகிலம் சகலம் முற்று அனைத்து அகண்டம் முழுது
ஆங்கு அடைய யாவும் அகிலம் சமத்தம் - ஓங்கு அடங்கல்
சொற் சருவம் எல்லாம்ஆம் தோகம் அற்பம் புன்மை சின்மை
சற்று ஆசு ஒட்டு இட்டிமை கொஞ்சம் (9)

775. பூரணம் பரம் திளைத்தல் மல்கல் விட்டுணு துவன்றல்
ஆர்தல் வியாபகம் பிறங்கல் பெருக்கு - ஓர் நிறைவாம்
அந்நிறைவின் மிச்சிரம் வியாத்தி வியாப்பியம் தான்
அந்நிறைவின் உள்ளடங்கலாம் (10)

776. ஈனம் அஃகல் சிங்கல் குன்றல் எஞ்சல் கிஞ்சம் தேய்வு அருகல்
ஊனம் நூனம் சிறுகல் அல்கல் குறைவு - ஆனதின் பேர்
கோட்டம் கோண் ஆரம் அச்சிரம் சதுரம் நாற்கோணம்
காட்டு யந்திரம் சக்கரம் (11)

777. துன்னல் செறி கற்றை ததை துற்றல் விரளல் பொதுளல்
பன்நிரந்தரம் திணுங்கல் பம்பல் மொய்த்தல் - பின் அடர்தல்
மிண்டல் சடிலம் துறுத்தல் துன்றல் மிடைவே நிபிடம்
மண்டல் துதைவே நெருக்கமாம் (12)

778. நுண்மை நொசிவு ஆய்வு நுழை நுட்பம் நுணுகு அணுவாம்
கண்ணறை யா யாமம் வியல் அகறல் - எண்ணு அகலம்
மாயமும்ஆம் நீளம் நெடில் நேர் நெடுமை சேண் கொடியோடு
ஆயதமாம் சேண் சேய் தூரம் (13)

779. விரிவு அழுவம் தாவல் விசாலம் விபுலம் மல்லல்
பரவை ஞெமிர் பா பரப்பு பப்புஆம் - இருசு செப்பம்
செம்மை செவ்வன் செவ்வை பரத்தல் படர்ச்சியே படலை
அண்மை சமீபம் கிட்டஆம் (14)

780. குறிது முண்டு கூழை கட்டை குட்டையாம் தஞ்சம்
மறி சார்பு தாரகம் ஆதாரம் - செறி ஊற்றம்
தூ கந்து தண்டமும் பற்றுக்கோடாஆம் பொம்மல் பொற்பு
போக்கம் பூ பொங்கல் பொலிவு (15)

781. வம்பு வெறி நாற்றம் மரு மன்றல் நறை தேம் மணம்
கந்தம் பரிமளம் கமழ் வாசம் கடி கான் - பம்புவிரை
மோதவம் வசந்தம் முருகு ஆமோதம் வாசனையாம்
பூதி செடி துர்க்கந்தம் (16)

782. தேசு அரி துலங்கல் கதிர் தீவிரம் நிலா தெளி
சங்காசம் விளங்கல் பிரகாசம் வெயில் - ஓசம் நகை
வாமம் அவிர்தல் பிறழ்தல் வாள் பிரபை காந்தி கரம்
நீமம் கிரணம் நிழல் (17)

783. மின்னல் இமைத்தல் மிளிர்தல் சுடர் வயங்கல்
உன்னும் இலகல் ஒளி தயங்கல் - பன்னு இலங்கல்
வெட்டல் ஒடித்தல் வெளிச்சம் திகழ்வு எறித்தல்
கட்டு அலங்கல் வில் சோதிக்காம் (18)

784. சாயல் குரு மேனி புகர் சந்தம் உரு வண்ணம் வரி
ஆய்வருணம் வன்னம் கேழ் நிறம் - சாயை நிழல்
வெண்மை செம்மையே கருமை மென்பசுமை பொன்மை என
வண்ணம் ஓர்ஐந்தின் வகை (19)

785. வெள்ளை சுப்பிரம் கவுரம் வெள்ளி விளர் சுக்கிலமே
கொள்ளும் விசிதம் குருகு கூர் குருத்து - துள்ளும் வெண்மை
பால் சிதம் சுவேதம் நரை பாண்டு அவதாரம் தவளம்
வால் வெளுப்பு அருச்சனமும்ஆம் (20)

786. செக்கர் கிஞ்சுகம் சோணம் சேது அரத்தம் மஞ்சிட்டம்
அக்குருதி பாடலம் அராகம் சேய் - மெய்க்கும்
சிவப்பு இராகம் பூவல் சேப்பு அருணம் செம்மை
நவிற்றும் உலோகிதமும் நாட்டு (21)

787. மால் கருள் காளம் காரி மா கறை மாயம் கருமை
நீலம் இருள் காளகம் கார் நீடுமணி - மேல் அசிதம்
காளிமம் களம் கறுப்பாம் காண் புகர் குரால் கபிலம்
நீள்புன்மை புற்கெனு நிறம் (22)

788. பிங்கலம் பீதம் பீதகம் அரித்திராபமொடு
பொங்கு பொன்மையும் பசப்பும் பொன்னிறமாம் - தங்கு பச்சை
பாசு அரி அரிதம் பை சாமளம் சாமம்
மாசுஇல் பசுமை நிறமாம் (23)

789. பஞ்சநிறத்தில் திரிவு பட்டால் பொதுநிறமாம்
துஞ்சிச் சலியாது தோன்றி நிற்றல் - மிஞ்சு துருவம்
துவம் தாபரமாம் மற்று உள்ளது சிறத்தல்
கந்தமுறும் கூர்ப்பு கழிப்பு (24)

790. நவ்வி பொற்பு அலங்காரம் நன்கு அணங்கு இலாவணம் பொன்
செவ்வி சந்தம் மஞ்சு அணி அம் சேடு எழில் பூ - மெய் விடங்கம்
காமர் உலோலம் தொட்டி காரிகை வாமம் குழகு
தாமம் இராமம் தகை காந்தம் (25)

791. பத்திரம் விசித்திரம் பாங்கு ஆரி கவின் மாமை விந்தை
சித்ரம் நலம் யாணர் மயம் தேசிகம் நோக்கு - தளிமம்
சுந்தரம் மனோகரம் சொக்கு ஏர் மாழை மாதர் வனப்பு
அந்தம் மணி கோலம் அழகு (26)

792. வன்மை மென்மை நொய்து கனம் மாறா வழுவழுப்பே
மென்மையறும் சர்ச்சரையே வெம்மை குளிர் - இன்ன எட்டும்
ஊறாம் இனிமை கசப்பு உப்பு துவர்ப்பு எரிப்பு
தூறில் புளிப்பு ஆறும் சுவை (27)

793. திண் உரம் தானம் கருமை மூரி மிடுக்கு உம்பல் திறல்
அண்ணல் எறுழ் மைந்து அடல் ஈடு ஆற்றல் துப்பு - எண் மதுகை
மல் பலம் மொய்ம்பு ஊக்கம் விறல் மானம் வயம் சத்துவம் தாம்
மல்லல் வலி நோன் மிடல் வன்மை (28)

794. மென்மை சுகுமாரம் மிருதுவாம் நொவ் இலகு
நொய்மை இலேசுஆம் கனம் ஞாட்பு பாரம் - விம்மு பொறை
சிற்குரு சீராம் வழுவழுப்பே இழுமெனலாம்
சர்ச்சரையின் பேர் பிணர் அதுஆம் (29)

795. வெப்பு உருமம் காந்தல் வெம்மை வெய்து அழல் தாபம் கடிது
உருப்பம் அழனம் கருமம் உட்டிணம் - தணப்பு நளி
சாந்தம் மழை சீதளம் சீதம் சவுமியம் பனி தண்ணே
தளி குளிர்ச்சி சிசிரம் (30)

796. ஆம் உருசி சாரம் இரதம் சுவை இனிப்பு அமுதம்
தீம் மதுரம் இன் தமிழ் தித்திப்பு இலவம் - ஆமிலமும்
அப்புளிப்பின் பேர் கடாயம் துவர்ப்பாம் உப்பு உவர்ப்பு
கைப்பு கசத்தல் திக்தம் கைப்பு (31)

797. கரில் கடுகம் உட்டிணம் காயம் காழ்ப்பு உறைப்பும்
எரிப்பாம் அதில்பேதம் காறல் - விருவிருப்பாம்
எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் அளவு ஈர்இரண்டாம்
எண் இலக்கம் தூக்கு நிறையே (32)

798. முந்திரிகை நான்கு ஆகும் காணி அது நான்கு மா
ஐந்து மா கால் அவ்இரட்டி அரை - அந்த இணை
ஏகம் ஒன்று இரண்டு இணை துவம் துணையினோடு உகளம்
ஆகு உபயம் மூன்று திரியாம் (33)

799. நான்கு சதுர் ஐந்து பஞ்சம் ஆறுசட்டு ஏழ்சத்தம் எட்டே
ஊன்றும் அட்டமாம் நவம் ஒன்பான் தசம் பத்து - ஏன்றசதம்
தப்பரு நூறு ஆயிரம் சகத்திரம் அப்பத்து அயுதம்
அப்பத்து இலக்கம் நியுதம் (34)

800. கோடியென்ப நூறிலக்கம் கோடியொன்றாய்க் கோடிமா
கோடிமேல் சங்கம் விந்தம் கூர்பதுமம் - நீடும்
சமுத்திரம் தாமரை வெள்ளம் பிரளயம் தான்
தமிழ்த் தோரையே யோசனை (35)

801. கற்பம் நிகற்பம் கனிமகரம் தண்பனையே
உற்பலம் அற்புதம் என்று ஓர் பதினைந்து - இப்பேர்ப்பின்
மாசங்கம் ஆதி பதினைந்து ஆக முப்பதுமே
பேசும் அவ்வக் கோடிகளின் பேர் (36)

802. நாழி பிரத்தம் படி அப்பாதி உரி மானிகமாம்
கோளில் உரிப்பாதி உழக்கு குடுபம் - ஆழாக்கே
அப்பாதி நானாழி ஆடகம் கஞ்சம் கலசம்
அப்பாதி பாத்திரயாம் (37)

803. குறுணி சிவம் எண்ணாழி நாற்குறுணி தூணி
குறுணிஇணை கும்பம் துரோணம் - பெறு பதக்காம்
முத்தூணியாம் கலன் மூவேழ்குறுணி கோட்டை
சோடு அத்து உழக்கில் பத்தில் ஒன்றே ஆம் (38)

804. சிறங்கை ஒன்றின் பேர் சுளுகை அஞ்சலி இரண்டு
சிறங்கை ஒரு நெல்லெடை மா எண்மா - அறைந்த ஒரு
மஞ்சாடி அவ்இரட்டி வல்லம் எனஆம் இருபான்
மஞ்சாடி நிட்கம் கழஞ்சு (39)

805. வெப்பில் பிரகுஞ்சம் முட்டி வில்வம் தொடி பலம்
நூறு அப்பலம் துலாம் நிறை அப்பாதி எடை - அப்பாதி
தூக்கு ஆகும் கண்டி துலாம் முப்பது இருபான் பாரம்
ஆக்கு பலம்கால் கருடம் கஃசு (40)

806. ஆகும் கசாக்கிரகம் அவ்அணு எண்மூன்று அதுஎட்டு
ஆகும் இலீக்கை அது நான்கே - யூகை அது எட்டு
அங்கு யவைஆம் அதுமூன்று அங்குலம் அது ஈறாறு
தங்கும் அளவைப்பேர் சாண் (41)

807. சாண் ஓர்இரண்டு முழம் கரமாம் நான்கே
யோணார் தனு புருடம் இவ்இரட்டி - பேணு தண்டம்
ஈராயிரம் அது குரோசம் கூப்பாடு அது நான்கு
ஓர் யோசனை புகை என்று ஓது (42)

808. காதமொடு சாமரத்தம் காவதமும் கூப்பாடாம்
கோதில் கவியூதம் இருகூப்பாடாம் - ஓதுநல்ல
நானூறு விற்கிடை கோழிப்பறவைத் தூரமே
தான்ஆவது கிரவுஞ்சம் (43)

***

குறிப்புகள்

இந்நூலின் பதிப்பாசிரியர் பேராசிரியர் வ. ஜெயதேவன் இல்லினாய்சு பல்கலைக்கழகப் பேராசிரியர் லாடிஸ்லாவ் சுகுஸ்தா அவர்களிடம் நேரிடையாக அகராதியியலில் பயிற்சி பெற்றவர்; தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்; சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் முதல் இயக்குநர்; தமிழ் மொழித்துறையின் முன்னைத் தலைவர்; தமிழ் இலக்கியத்துறையின் தகைசால் பேராசிரியர்; தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டத்தின் தலைமைப் பதிப்பாசிரியர்; இந்திய அகராதியியல் கழகத்தின் பொதுச் செயலாளர்; ஆசிய அகராதியியல் கழகத்தின் தலைவர்; அகராதிகள், மொழிபெயர்ப்பு நூல்கள், ஆய்வுநூல்கள், பதிப்புக்கள் பலவற்றின் ஆசிரியர்; இவர் மேற்பார்வையில் 28 பேர் முனைவர் பட்டமும் 100 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர்.

நிகண்டுகளில் உள்ள சொற்களுக்குப் பொருள் காண வேண்டுமாயின் அச்சொல் எந்தத் தொகுதியில், எந்தப்பாடலில் இடம்பெற்றுள்ளது என்பதைப் பார்த்த பின்னரே அச்சொல்லின் பொருளை அறிந்துகொள்ள முடியும். அவ்வாறு அறிந்துகொள்ள முற்படினும் பாடல்களின் ஓசை நயத்திற்காகவும் யாப்பிற்காகவும் சொல்லின் இசைக்காகவும் சேர்க்கப்பட்ட அடைமொழிகள், அசைச் சொற்கள் முதலியன தடையாய் இருக்கும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு நிகண்டுகள் தரும் சொற்பொருளை அகராதி முறையில் தொகுத்துத் தந்தால் பலரும் பயன் கொள்வர் என்ற எண்ணத்தோடு இந்நாமதீப நிகண்டு அகராதி வடிவம் பெற்றுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகம்

2007